24

32°c
கூடிய வெப்பநிலை 41 c
குறைந்த வெப்பநிலை 25 c
தெளிவான, வரண்ட
காலநிலை காணப்படும்.

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=

சுடர்: 29 கதிர்: 128 வள்ளுவர் ஆண்டு: 2045 பங்குனி 20, வியாழன் 03.04.2014

TECHNOLOGIES (PVT) LTD.
புத்தாண்டு அதிரடி விலைக் கழிவு
hp SAMSUNG DELL LapTopகள்
1 year parts Warranty, 2 years service free
HP Pavilion 15 (i3, i5) Dell 3521 (i3)
HP 450, 4540 Pro Book Dell 5521 (i3, i5)
Samsung Dual Core
Free
HSPA Dongle (E-173), 4Gb Pen drive, 1 Year Antivirus Licence, Laptop Bag, Cooler Pad, Mouse, Headphone.
021 222 1121
021 224 2222
No. 195/4, Parameswara Junction, Palaly Road.
Branch: No.116G, K.K.S. Road, Chunnakam.

# சரணடைந்தோரை இராணுவம் கொண்டுசென்றதைக் கண்டேன்

## நேரில் பார்த்த சாட்சி நீதிமன்றத்தில் நேற்று வாக்குமூலம்

வலி. தெற்கு பிரதேச சபை
03 APR 2014

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3

"இராணுவத்தினரிடம் சரணடைந்த எனது மகள், மருமகள், பேரப்பிள்ளைகள் பஸ் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டனர். அவர்களை இராணுவத்தினர் கொண்டு சென்றதை நான் நேரடியாகக் கண்டேன்"- இவ்வாறு முல்லைத்தீவு மாஜிஸ்ரேற் நீதிவான் நீதிமன்றில் சாட்சியமளித்தார் தாய் ஒருவர். நேற்று நடைபெற்ற காணாமற் போனவர்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனு மீதான விசாரணையின் போதே அவர் இவ்வாறு சாட்சியமளித்துள்ளார்.

இறுதிப் போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்து, அதன் பின்னர் காணாமற்போனவர்கள் தொடர்பில் அவர்களது உறவினர்களால் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இது தொடர்பாக 12 வழக்குகள் தனித் தனியாக தாக்கல் செய்யப்பட்டிருந்தன. விடுதலைப் புலிகள் அமைப்பில் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராகப் பதவி வகித்த எழிலன் உள்ளிட்ட மூத்த தளபதிகள் மற்றும் அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் ஆகியோர் காணாமற்போனமை தொடர்பிலும் அவர்களது உறவினர்களால் வவுனியா மேல் நீதிமன்றத்தில் ஆள்கொணர்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்குகள் தொடர்பான விசாரணைகள் வவுனியா மேல் நீதிமன்றில் இடம்பெற்றன.

> எனது மகள், மருமகன், இரண்டு பேரப்பிள்ளைகள் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர். அவர்களை அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப்பே கூட்டிச் சென்றார்.

அதன்பின்னர் சம்பவம் நடைபெற்ற இடம் முல்லைதீவு என்பதால், வழக்கு முல்லைத்தீவு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது.

முல்லைத்தீவு மாஜிஸ்ரேற் நீதிவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது ஒரு சாட்சி வாக்குமூலம் அளித்தார்.

"எனது மகள், மருமகன், இரண்டு பேரப்பிள்ளைகள் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர். அவர்களை அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப்பே கூட்டிச் சென்றார். எனது உறவுகளுடன், வேறு பலரும் இராணுவத்தினரால் பஸ்ஸில் ஏற்றிக் கொண்டு செல்லப்படுவதை நான் நேரடியாகக் கண்டேன்" என்று தெரிவித்த சாட்சி, இறுதிப் போரின்

21ஆம் பக்கம் பார்க்க



## 82 சதுர கி.மீ. பரப்பிலேயே கண்ணிவெடி

கொழும்பு, ஏப்.3

வடக்கில் இன்னமும் 82 சதுர கிலோமீற்றர் பரப்பிலேயே கண்ணிவெடிகள் அகற்றப்படாதுள்ளது. கண்ணிவெடிகள் அகற்ற வேண்டியிருந்த 2004 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் தற்போது மிகக் குறைந்த அளவே எஞ்சியுள்ளது. அதுவும் வனப்பகுதி- என்று தெரிவித்துள்ளார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

கம்போடியா மற்றும் வியட்நாம் நாடுகளுடன் ஒப்பிடும் போது கண்ணிவெடி அகற்றும் பணிகளில் இலங்கை முன்னேற்றம் கண்டுள்ளது. கண்ணிவெடி அகற்றல் மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்

21ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமை ஆர்வலர்கள் மீது அடக்குமுறை அதிகரிக்ககூடும்

### எச்சரிக்கிறது சர்வதேச சட்டத்தரணிகள் பேரவை

லண்டன், ஏப்.3

இலங்கையில் மனித உரிமை செயற்பாட்டாளர்களின் மீதான அடக்குமுறைகள் மேலும் அதிகரிக்கக் கூடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது சர்வதேச சட்டத்தரணிகள் பேரவை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீதான நெருக்குதல்கள் குறித்து சர்வதேச சமூகம் கூடுதல் கவனம்

21ஆம் பக்கம் பார்க்க

## 16 தமிழ் அமைப்புக்களின் தடைக்கு பல பக்கங்களிலிருந்து கடும் எதிர்ப்பு

(விரிவான தகவல்கள் 2 ஆம் பக்கத்தில்)

## வயோதிபரை மோதிவிட்டு தப்பிச் சென்ற தம்பதிகள்

### காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி சாவு

யாழ்ப்பாணம், ஏப்.3

வீதியால் சென்று கொண்டிருந்த வயோதிபரை மோதிய மோட்டார் சைக்கிளில் வந்த தம்பதியர், அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர். வீதியில் விழுந்து கிடந்த அந்த முதியவரை உறவினர்களும், வீதியில் பயணித்த ஏனையோரும் மருத்துவமனையில் சேர்த்தபோதும் அவர் அங்கு சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை உரும்பிராய் சந்தியில் காலை 7.30 மணியளவில் நடந்துள்ளது. அந்த இடத்தைச் சேர்ந்த 75 வயதுடைய வைத்தி தருமர் என்ற முதியவரே உயிரிழந்தவராவார்.

21ஆம் பக்கம் பார்க்க

## 3 கிலோ கஞ்சாவுடன் யாழில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.3

3 கிலோவுக்கும் அதிகமான கேரள கஞ்சாவுடன் இருவர் யாழில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் இந்தியாவைச் சேர்ந்தவர். யாழ்.நகர பஸ் நிலையத்தில் வைத்தே அவர்கள் இருவரும் கடற்படையைச் சேர்ந்தவர்களால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது

21ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவா தீர்மானத்தை செயற்படுத்த வேண்டும்

### இலங்கையை வலியுறுத்துகிறார் ஐ.நா. பொதுச் செயலர்



நியூயோர்க், ஏப்.3

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை ஒத்துழைக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் பான் கீ-மூன்.

இதுகுறித்து அவரது பேச்சாளர் பர்ஹான் ஹக் கருத்துத் தெரிவிக்கையில்,

"ஜெனிவாவில் நிறைவேற்றப்

21ஆம் பக்கம் பார்க்க

## நாடாளுமன்றத்தில் இனி வன்னிக்கு 6 ஆசனங்கள்

### யாழ்.மாவட்டத்தில் மாற்றமில்லை

யாழ்ப்பாணம், ஏப்.3

புதிய வாக்காளர் பட்டியலின் படி யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏற்படாத போதும், வன்னித் தேர்தல் தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒன்றால் அதிகரித்துள்ளது.

2013 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப்பட்டியில் கடந்த ஜனவரி மாதம் வெளியிடப்பட்டது. 2012ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது புதியவாக்காளர் பட்டியலில் 20 ஆயிரம் வாக்காளர்க்ள் அதிக ரித்துள்ளனர். இந்த எண் ணிக்கை நாடாளுமன்ற உறுப்பினர்

21ஆம் பக்கம் பார்க்க

## உறவுகளை தேடுவோருக்கு உளநல ஆலோசனைகளாம்

### ஜனாதிபதி ஆணைக்குழு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.3

காணமற்போனவர்களின் உறவினர்களுக்கு உளநல ஆலோசனைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு எடுத்து வருகின்றது என்று தெரியவருகின்றது.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அலுவலகத்தில் கடந்த திங்கள் கிழமை இடம்பெற்ற கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு மற்றும்

21ஆம் பக்கம் பார்க்க

## மீளப்பெறப்பட்ட சுகாதார பரிசோதகர்கள் பிரதேச சபைகளுக்கே திரும்புகின்றனர்

### முதல்வருடனான சந்திப்பில் நேற்று இணக்கம்; போராட்டம் முடிவு

யாழ்ப்பாணம், ஏப்.3

பொதுச் சுகாதார பரிசோதகர்களை மீண்டும் உள்ளூராட்சி மன்றங்களில் இணைப்பதற்கு வடக்கு மாகாண முதலமைச்சரும், உள்ளூராட்சி அமைச்சருமான க.விக்னேஸ்வரன் மற்றும் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகியோர் இணக்கம் தெரிவித்துள்ளனர். அதையடுத்து வடமாகாணம் முழுவதும் உள்ளூராட்சி மன்றங்களினால் முன்னெடுக்கப்பட்டு வந்த சுகாதார தொழிலாளர்களின் பணிப்புறக்கணிப்பு முடிவுக்கு வரும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில தினங்களாக வடமாகாணம் முழுவதும் உள்ளூராட்சி மன்றங்களால் சுகாதார சேவைகள் முடக்கப்பட்டுப் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் தொடர்ச்சியாக

21ஆம் பக்கம் பார்க்க

வடபகுதியில் அதிகரித்துள்ள

## இராணுவ தலையீடு



பக்கம் 12

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# திருடப்பட்ட கைத்தொலைபேசி சுற்றிச் சுழன்றது 20 பேரிடம்

## 21 ஆவது நபரிடம் இருந்து கைப்பற்றினர் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஏப்.3
மூன்று மாதங்களுக்கு முன்னர் திருடப்பட்ட பெறுமதி மிக்க கைத்தொலைபேசி ஒன்றைப் பொலிஸார் மீட்டுள்ளதுடன், கைத்தொலைபேசியை வைத்திருந்தவரையும் கைது செய்துள்ளனர். ஆனால் கைது செய்யப்பட்டவர் விசாரணைகளின் போது குறிப்பிட்ட ஒரு நபரிடம் இருந்தே தான் கைத் தொலைபேசியை வாங்கியதாக வேறொருவரைக் கைகாட்டினார். அதே போல் அவரும் மற்றொருவரைக் கைகாட்ட அந்தப் பட்டியல் அனுமார் வால் போன்று நீண்டுகொண்டே சென்றுள்ளது. அப்போதுதான் குறித்த கைத்தொலைபேசி 20 பேரிடம் கைமாறியதும், கைது செய்யப்பட்டவர் 21 ஆவது நபர் என்பதும் தெரியவந்துள்ளது.

95 ஆயிரம் ரூபா பெறுமதியான அந்தக் கைத்தொலைபேசி கடந்த ஜனவரி மாதம் திருட்டுப் போயிருந்தது. அதன் உரிமையாளர் நெல்லியடிப் பொலிஸாரிடம் அதுகுறித்து முறையிட்டிருந்தார்.

அதையடுத்து அந்தக் கைத்தொலை பேசியின் எமி இலக்கத்தைக் கொண்டு (கையடக்கத் தொலைபேசியின் எமி இலக்கத்தைக் கொண்டு, அந்தத் தொலைபேசியில் தற்போது எந்த இலக்க சிம் உள்ளது, அதன் உரிமையாளர் யார் என்ற விவரங்களை தொலைபேசி சேவை வழங்குநர்களின் உதவியுடன் அறிய முடியும்) அதைக் கண்டுபிடிக்கும் முயற்சிகளில் பொலிஸார் இறங்கினர்.

அதில் துன்னாலையைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரிடம் சிக்கினார். அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின்போதே இந்த நீண்ட பட்டியல் பொலிஸாருக்குக் கிடைத்துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பொலிஸார், "இந்தக் கைத்தொலைபேசி இதுவரை 20 பேரிடம் கைமாறி விற்பனை செய்யப்பட்டுள்ளமை ஆரம்ப விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. தற்போது கைத்தொலைபேசியை வைத்திருந்தவர் 21 ஆவது நபர். விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. அதன் முடிவிலேயே குறித்த கைத்தொலைபேசி எத்தனை பேரிடம் கைமாறியுள்ளது என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியும்" - என்று தெரிவித்துள்ளனர்.

கைத்தொலைபேசியை வைத்திருந்தவர் தாம் பணம் கொடுத்தே அதனைப் பெற்றுக் கொண்டார் என்று தெரிவித்துள்ளார். எனினும் அவர் திருட்டுப் பொருளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். குறித்த நபர் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான வழக்கு எதிர்வரும் 25ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ந-4)

# ஐ.நாவின் தீர்மானத்துக்கு அக்ஷன் பார்ம் வரவேற்பு

நியூயோர்க், ஏப்.3
இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை வரவேற்பதாகத் தெரிவித்துள்ளாது பிரான்ஸைச் சேர்ந்த அக்ஷன் பார்ம் நிறுவனம்.

எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் மூதூரில் தமது தன்னார்வத் தொண்டர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தையும் இந்தச் சந்தர்ப்பதில் சுட்டிக்காட்டியுள்ளது அந்த நிறுவனம்.

இதுகுறித்து அந்த நிறுவனத்தின் சட்ட ஆலோசகர் சர்ஜே பிரெய்சியை மேற்கோள்காட்டி ரொய்டர் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

"நாம் நியாயம் கோரி ஏழு ஆண்டுகளாகச் செயற்பட்டோம். இறுதியில் எமது சகோதரர்களின் உயிரிழப்புத் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணையொன்று கிடைத்துள்ளது. அதன் மூலம் ஒரு செய்தி தெளிவாகிறது. பொதுமக்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களின் கொலைகள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக தண்டனை வழங்கப்படும். இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட பிரேரணையானது உயிரிழந்தவர்கள், அவர்களின் குடும்பங்கள், அதே போன்று தமது அமைப்பும் அடைந்த வெற்றி" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# போர்க்காலச் சூழல் வடக்கு மாகாணத்தில்

## வட மாகாண அமைச்சர் டெனிஸ்வரன் குற்றச்சாட்டு

மன்னார், ஏப்.3
வடக்கு மக்கள் போர் நடைபெற்ற காலத்தில் வாழ்ந்ததைப் போன்றே தற்போதும் அச்சத்துடன் வாழ்ந்து வரு கின்றனர். அவர்கள் தற்போ தும் பல்வேறு அசெளகரியங்களுக்கு நித்தமும் முகம் கொடுத்துவருகின்றனர் - என்று தெரிவித்துள்ளார் வட மாகாண மீன்பிடி, போக்குவரத்துத்துறை அமைச்சர் டெனிஸ்வரன்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போது வடமாகாணத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சோதனைச் சாவடிகளின் உருவாக்கம் மக்கள் மத்தியில் பலத்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசு சமாதானம் என்று கூறிக்கொண்டு மறுபுறம் இராணுவக் கட்டுப்பாடுகளை வடக்குக் கிழக்கில் உள்ள மக்கள் மீது திணிக்க முயற்சிக்கின்றது. அதற்காகத்தான் புலிப் பயங்கரவாதம் என்ற பேச்சு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. புலிகளை அழிக்கப்பட்டு விட்டார்கள் என்று கூறும் இந்த அரசு ஏன் இவ்வா றான செயற்பாடுகளை கட்ட விழ்த்து விட்டுள்ளது?. சட்ட முரணான கைதுகள், ஆள் கடத்தல்கள் போன்ற சம்பவங்கள் தற்போது இடம்பெற்று வருகின்றமை, மீண்டும் எமது மக்களை பெரும் படுகுழியில் தள்ளுவதற்கான முன்னேற்பாடு போன்று தோன்றுகின்றது.

இந்த அரசு எதிர்காலத்தில் இதய சுத்தியோடு செயற்படவில்லை என்றால் அதன் விளைவுகள் பாரதூரமானதாகவே அமையும்." - என்று தெரிவித்துள்ளார். (ந-56)

# இலங்கையின் நல்லிணக்கத்தை சீர்குலைக்கின்றாராம் அனந்தி

## குற்றஞ்சாட்டுகின்றது இலங்கை அரசு

யாழ்ப்பாணம், ஏப்.3
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன், இலங்கையின் சமாதானம் மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளை சீர்குலைக்க முயற்சிக்கின்றார் என்று குற்றஞ்சாட்டியுள்ளது இலங்கை அரசு.



இலங்கை தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது. இதுகுறித்து அந்த அறிக்கையில் மேல கூறப்பட்டுள்ளதாவது:

"அனந்தி சசிதரனால் இலங்கை தொடர்பில் தவறான தகவல்கள் சர்வதேச சமூகத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் அவர் புலிகள் சார்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றார்" - என்றுகூறப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனின் மனைவியான அனந்தி, கடந்த வாரம் நடந்த ஐ.நா மனித உரிமை சபையின் கூட்டத் தொடரில் அரசசார்பற்ற நிறுவனங்கள் சார்பில் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்திருந்தார். போரின் போதும் போருக்கு பின்னரும் இலங்கை அரசு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருவ தாக குற்றம் சுமத்திய அனந்தி சசிதரன், நாட்டில் இடம்பெற்ற இந்தச் சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் கோரியிருந்தார். (ந-5)

### யாழ். நூலகத்துக்கு நடமாடும் நூலக சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 3
யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் புனரமைப்பு செய்யப்பட்ட பகுதி நாளை சிங்கப்பூரின் அமைச்சர்கள் குழுவால் வைக்கப்படவுள்ளது. அத்துடன் அவர்களால் நடமாடும் நூலக சேவை ஒன்றும் யாழ்ப் பாணம் பொதுநூலகத்துக்கு அன்பளிப்பு செய்யப்படவுள்ளது.

இந்த திட்டம் யாழ்ப்பாணம் பொது நூலகத்தினால் சிங்கப்பூர் சர்வதேச மையத்தின் பங்காண்மையுடன் முன்னெடுக்கப்படுவதுடன், இந்த திட்டத்தின் ஊடாக 3000க்கும் அதிகமான 10 தொடக்கம் 18 வயதுக்குட்பட்ட மாணவர்கள் அனுகூலம் பெறுவார்கள்.

இவற்றின் மூலமாக சுமார் 10,000க்கும் அதிகமான புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் மொழி பயிலும் நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (ந)

# 16 அமைப்புக்களின் தடைக்கு கிளம்பியது கடும் எதிர்ப்பு

## தேசிய பாதுகாப்பே காரணம் என்கிறது இலங்கை அரசு

கொழும்பு, ஏப்.3
வெளிநர்டுகளில் இயங்கும் 16 தமிழ் அமைப்புகளை இலங்கை அரசு தடை செய்துள்ள நிலையில், பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் 1373 ஆம் இலக்க தீர்மானத்துக்கு அமைய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட 16 தமிழ் அமைப்புகளை இலங்கை அரசு தடை செய்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் நோக்கங்களுக்காக வெளிநாடுகளில் இருந்து இயங்குகின்றன என்று தெரிவித்தே அந்த அமைப்புகளை அரசு தடை செய்துள்ளது. அதற்கான ஆவணத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கையொப்பமிட்டுள்ளார்.

அரசின் இந்த நடவடிக்கைக்கு அண்மையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமே காரணம் என்று கூறப்படுகின்றது. குறிப்பிட்ட அமைப்புகள் ஜெனிவாவில் அரசுக்கு எதிரான பரப்புரைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தன என்று அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இந்தநிலையில் அரசின் இந்த நடவடிக்கைக்கு உள்நாட்டிலிருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, "வெளிநாடுகளில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களை அரசு எந்த அடிப்படையில் தடை செய்துள்ளது என்பது குறித்தும், அவற்றைத் தடைசெய்வதற்கான காரணங்கள் என்ன?. அவற்றுக்கான ஆதாரங்கள் என்பவற்றை அரசு வெளிப்படுத்த வேண்டும்"- என்று வலியுறுத்தியுள்ளது.

அதேவேளை, இடதுசாரிக் கட்சிகளான நவசமசமாஜக் கட்சி, ஐக்கிய சோஷலிஸக் கட்சி என்பனவும் அரசின் இந்த நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடைசெய்து, வட மாகாண சபையைக் கலைக்கும் அரசின் சதித்திட்டத்தின் பரீட்சார்த்த நடவடிக்கையாகவே புலம்பெயர் தமிழ் அமைப்புகள் தடைசெய்யப்பட்டுள்ளன" என்று அவை குறிப்பிட்டுள்ளன.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கைக்கு சர்வதேச மட்டத்திலும் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள உலகத் தமிழர் பேரவை, "இது ஒரு வெட்கக்கேடான செயல். இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் இலங்கைக்கு எதிரான சர்வதேச அழுத்தங்களைக் குறைத்துக் கொள்ளலாம் என்றும், வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களைத் தொடர்ந்தும் அடிமை நிலையில் வைத்திருக்கலாம் என்றும் மஹிந்த அரச தரப்பினர் பகல் கனவு காண்கின்றனர்."- என்று கடுமையாகச் சாடியுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த பிரிட்டன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், உலகத் தமிழர் பேரவையின் கொள்கை வகுப்பு ஆலோசகருமான ஜோன் ரியன்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் நோக்கங்களுக்காக வெளிநாடுகளில் இருந்து இயங்குகின்றன என்று தெரிவித்தே அந்த அமைப்புகளை அரசு தடை செய்துள்ளது. அதற்கான ஆவணத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கையொப்பமிட்டுள்ளார்.

"வளிநாடுகளில் இயங்கும் 16 அமைப்புகளை இலங்கை அரசு தடை செய்துள்ளதை சர்வதேச சமூகம் பொறுத்துக் கொள்ளாது. இலங்கையில் சர்வதேச சுயாதீன விசாரணை ஏன் அவசியமானது என்பதை இலங்கை அரசின் தற்போதைய இந்த நடவடிக்கை எடுத்துக் காட்டுகின்றது."- என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கும், இலங்கையில் 16 அமைப்புகளுக்கு தடை விதிக்கப்பட்டமைக்கும் எந்த விதத் தொடர்புகளும் இல்லை என்று தெரிவித்துள்ளார் இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அந்த அமைப்புகளைத் தடை செய்வது என்பது அரசின் நீண்ட காலத் திட்டமாகும். எனினும் அதற்குரிய சட்ட நடைமுறைகளின் காரணமாகவே கால தாமதம் ஏற்பட்டது. நாட்டின் தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது"- என்று தெரிவித்துள்ளார். (ந)

## அச்சுவேலி மருத்துவமனைக்கு செல்கிறார் சுகாதார அமைச்சர்

அச்சுவேலி, ஏப்.3
வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் அச்சுவேலி பிரதேசமருத்துவமனைக்கு இன்று வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு செல்லவுள்ளார்.
அச்சுவேலி பிரதேச மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங்கத்தின் அழைப்பின் பேரில் மருத்துவமனைக்குப் பயணம் செய்யும் வடக்கு மாகாண சுதேச வைத்திய சுகாதார அமைச்சர், மருத்துவமனையின் தேவைகள் மற்றும் வளவசதிகளை நேரில் பார்வையிட்டு அறிந்து கொள்வதோடு நலன்புரிச் சங்க நிர்வாகிகள் மற்றும் பொது மக்களுடனும் கலந்துரையாடவுள்ளார்.
கலந்துரையாடலில் நலன் விரும்பிகள், அபிமானிகள் கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என நலன்புரி சங்கம் அறிவித்துள்ளது. (வ-11)



காய்ந்த இலைகள் சூழ்ந்துள்ள31 மீனவர்களின் நினைவுத் தூபி

## குப்பைகளால் சூழப்பட்ட மீனவர் நினைவுத் தூபி

குருநகர், ஏப்.3
குருநகர் கடற்கரை வீதியில் புனித பேதுருவானவர் ஆலயத்துக்கு முன்பாகவும், 31 மீனவர்களின் நினைவுத் தூபிக்கு முன்பாக உள்ள பகுதியிலும் குப்பைகள் நிறைந்து காணப்படுகின்றன.
இந்த இடத்தில் உள்ள ஆலமரத்திலிருந்து விழும் காய்ந்த இலைகள் பல நாள்களாக அவ்விடத்திலேயே காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-51)

## சட்ட விரோதமாக மீன்பிடித்த 8 மீனவர் வசமாக மாட்டினர்

### முல்லைத்தீவுக் கடற்பரப்பில்

சண்டிலிப்பாய், ஏப்.3
முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சட்ட விரோதமான முறையில் ஒளி பாய்ச்சி மீன் பிடித்துக் கொண்டிருந்த தென்னிலங்கையைச் சேர்ந்த 8 மீனவர்கள் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் நேற்றுமுன்தினம் அகப்பட்டுக் கொண்டனர்.
மீன் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட 4 படகுகளை கைப்பற்றி தமது பாதுகாப்பில் வைத்துள்ள அதிகாரிகள், குறித்த 8 மீனவர்கள் மீது முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த நாயாறு கடற்பரப்பில் தென்னிலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் சட்ட விரோதமான முறையில் ஒளி பாய்ச்சி மீன் பிடிப்பதாக முல்லை மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்துக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து அங்கு விரைந்து சென்று மீன்பிடிப்பில் ஈடுபட்ட 4 வள்ளங்களைக் கைப்பற்றியதுடன் 8 மீனவர்களையும் முல்லை மாவட்ட நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தினர்.
மீனவர்கள் குற்றத்தை ஏற்றுக் கொள்ள மறுத்ததைத் தொடர்ந்து வழக்கு விசாரணை இன்று வியாழக்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (வ-115)

## பாலின் விலை அதிகரிக்கப்பட்ட போதும் கால்நடை வளர்ப்போருக்கு பயனில்லை

### பிரதேச கால்நடை வளர்ப்போர் கூ.சங்கங்கள் குறைந்த விலையில் கொள்வனவு செய்வதால்



கோப்புப்படம்

அச்சுவேலி, ஏப்.3
யாழ்.மாவட்டத்தில் பாலின் கொள்வனவு விலை அதிகரிக்கப்பட்ட போதிலும், பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் பசுப் பாலின் கொள்வனவு விலையை அதிகரிக்கவில்லை என்றும், தொடர்ந்தும் குறைந்த விலையிலேயே கொள்வனவை மேற்கொள்வதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது. இந்த விலை முரண்பாட்டைச் சீர்செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
யாழ்.மாவட்டத்தில் பசுப்பால் கொள்வனவும் விற்பனவும் நிறுவன மயப்படுத்தப்பட்ட நிலையில் செயற்படும் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பசுப்பாலின் கொள்வனவு விலையை ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து 10 ரூபாவால் அதிகரித்துள்ளது. இதன் அடிப்படையில் கடந்த செவ்வாய்க்கிழமையில் இருந்து ஒரு லீற்றர் பாலை சங்கம் 58 ரூபாவுக்குக் கொள்வனவு செய்கின்றது.
ஆனால், பிரதேச ரீதியில் செயற்படும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் பாலின் கொள்வனவு விலையை அதிகரிக்காமல் தொடர்ந்தும் குறைந்தவிலையிலேயே கொள்வனவு செய்வதால் கால்நடை வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்கள் பாதிப்புக்கு உள்ளாவதாக முறைப்பாடு செய்யப்படுகின்றது.
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் லீற்றர் 46-48 ரூபாவுக்கு உட்பட்ட விலையிலேயே பாலைக் கொள்வனவு செய்து வருகின்றன என்று கவலை தெரிவிக்கப்படுகிறது. இதனால் பால் உற்பத்தியாளர்கள் நாளாந்தம் நட்டம் அடைகின்றனர்.
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கொள்வனவு விலைக்கும், பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் கொள்வனவு விலைக்கும் இடையே கடந்த காலங்களிலும் இடைவெளி காணப்பட்டது. இது பொது நிலையாகச் சீர்செய்யப்படவில்லை என்று கூறப்படுகின்றது.
இதேவேளை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் பால்கொள்வனவுவிலை தொடர்பாக யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.அருந்தவநாதன் கருத்துத் தெரிவிக்கையில்:
யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பால் கொள்வனவு விலைக்குச் சமமாக கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் பால் கொள்வனவு விலையும் சீர் செய்யப்பட வேண்டும். இன்னமும் சில நாள்களில் நடைபெறவுள்ள சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்களுடனான கலந்துரையாடலின்போது பாலின் கொள்வனவுவிலைதொடர்பாகக்கலந்துரையாடி சீர் செய்யப்படும் என்றுதெரிவித்தார். (வ-11)

## வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழு மீள் நியமனம்

யாழ்ப்பாணம், ஏப். 3
வடமாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவராக கிழக்கு மாகாண முன்னைநாள் பிரதம செயலாளராகப் பதவி வகித்த ஆர்.தியாகலிங்கம் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அந்தக் குழுவுக்கு புதிய உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
அதன்படி வடமாகாண கல்வியமைச்சின் பிரதிச் செயலாளராகப் பணியாற்றிய ப.விக்னேஸ்வரனும் யாழ்.மாவட்ட முன்னைநாள் பிராந்திய ஆணையாளராகப் பணியாற்றிய பி.தியாகராஜா, ஓய்வுபெற்ற அதிபர் எஸ்.திசாநாயக்கா மற்றும் ஆணைக்குழுவில் ஏற்கனவே உறுப்பினராகவுள்ள என்.அமல் உல்லா ஆகியோர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் வைத்து ஆளுநரால் அவர்களுக்கு நேற்று நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் வடமாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**பொதுச் சேவை ஆணைக் குழு 3 வருடங்களுக்குத் தொடர்ந்து இயங்க முடியும். அதன்படி ஆணைக்குழு மீள் நியமனம் செய்யப்பட்டது**

நியமனம் வழங்கப்பட்ட பின்னர் அவர்களுக்கும் வடமாகாண ஐந்து அமைச்சுக்களினதும் செயலாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடலும் இடம்பெற்றது.
பொதுச் சேவை ஆணைக்குழு 3 வருடங்களுக்குத் தொடர்ந்து இயங்க முடியும். அதன்படி ஆணைக்குழு மீள் நியமனம் செய்யப்பட்டது என்று ஆளுநர் அலுவலகம் தெரிவித்தது. (வ-4)



நாட்டில் தற்போது நிலவும் கடுமையான வெப்பநிலையால் மக்கள் பெரிதும் அசௌகரியங்களுக்கும் நோய்த்தாக்கத்துக்கும் உள்ளாகி வருகின்றனர். இந்த நிலையில் உடல் வெப்பத்தைத் தணிக்கப் பெரிதும் உதவும் வத்தகைப் பழங்கள் யாழ்.நகரின் பல இடங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. தென்னிலங்கையில் இருந்து கொண்டு வரப்படும் இப்பழம் ஒரு கிலோ 60 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. (வ-135)

## 25 வீதிகள் புனரமைப்பு; மதிப்பீடுகளை கோரல்

யாழ்ப்பாணம், ஏப்.3
சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 25 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.
இதற்கான வேலை மதிப்பீடுகளைத்தயாரித்து அனுப்பிவைக்குமாறு யாழ்.மாவட்டச் செயலகத்தால் பிரதேச செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. மீள் குடியேற்றம் இடம்பெற்ற பகுதிகளில் உள்ள வீதிகளே இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## திருநெல்வேலி, கொக்குவில் பகுதி சந்தைகளில் தொடரும் சுகாதாரக் கேடு

### நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் கவலை

திருநெல்வேலி, கொக்குவில் சந்தைப் பகுதிகளுக்கு உட்பட்ட வீதியோரங்களில் கொட்டப்படும் கழிவுகளால் பெரும்பாலான இடங்களில் சுகாதாரச் சீர்கேடுகள் அதிகரித்துள்ளன. தம்மால் முடிந்தவரை தொழிலாளரைக் கொண்டு மாற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும், சுகாதாரச் சீர்கேடுகள் தொடர்ந்த வண்ணமே உள்ளதாக நல்லூர் பிரதேசசபை தவிசாளர் ப.வசந்தகுமார் கவலை தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ;
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை பிரதேச சபைகளின் நிர்வாகத்தின் கீழிருந்து விலக்கிக் கொண்டதை அடுத்து இந்த நிலைமைஏற்பட்டுள்ளது. எனவே சுகாதாரப் பரிசோதகர்களை மீளவும் சபையின் கீழ் கடமையாற்ற அனுமதிக்க வேண்டும்.
இந்தப் பிரச்சினை நீடிக்குமானால், சுகாதாரத்தைப் பொறுத்தவரை மிகவும் மோசமான நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாது. டெங்கு போன்ற நோய்த் தாக்கங்கள் அதிகரிக்கக் கூடிய நிலை ஏற்படும்- என்றார். (வ-7)



கழிவு வாய்க்காலுக்குள் தங்கியிருக்கும் குப்பை

## பதவி வெற்றிடம்

திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியில் உள்ள நொதன் சென் றல் வைத்தியசாலைக்கு நன்கு தாதிகள் சேவையில் பயிற்றப்பட்ட அனுபவமுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. தகுதியுடைய விண்ணப்பதாரிகள் சான்றிதழ்களுடன் கீழ் காணும் விலாசத்துக்கு காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிக்கிடையில் நேரடியாக சமூகமளிக்கவும். தகுதிக் கேற்ற வேதனம் வழங்கப்படும்.

**பணிப்பாளர்-மனிதவளம்,**
**நொதன் சென்றல் வைத்தியசாலை,**
(சி/13151) (10) **342, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**


## மரண அறிவித்தல்

### தம்பிநாதர் பாலசிங்கம்

மயிலியதனை, தொண்டமானாற்றைப் பிறப்பிடமாகவும் கொம் மந்தறை, வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிநாதர் பாலசிங்கம் நேற்று (02.04.2014) புதன்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிநாதர்-செல்லாச்சிப் பிள்ளை ஆகியோரின் மகனும், காலஞ்சென்ற அழகம்மாவின் அன் புக் கணவரும், பாக்கியகுமாரின் பாசமிகு தந்தையும், பா.சகுந்தலா தேவியின் (ஆசிரியை- யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை) மாமனும், மதுரா, அச்சுதன், மதுசுதன் ஆகியோரின் அன்புப் பேர னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2014) வியாழக் கிழமை முற்பகல் 10 மணியளவில் கொம்மந்தறையில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மயிலியதனை இந்து மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**கொம்மந்தறை, வல்வெட்டித்துறை.** (33432) (10) **பாலசிங்கம் பாக்கியகுமார் (மகன்) 077 557 8881**

## மரண அறிவித்தல்

### முருகேசு அரியபுத்திரர்

(இளைப்பாறிய பிரதம எழுதுவினைஞர்- பிரதேச செயலகம், கரவெட்டி)



சுன்னாகம் கிழக்கைப் பிறப் பிடமாகவும், துன்னாலை தெற் கில் வசித்தவரும், தற்போது அல்வாய் மேற்கு திக்கத்தில் வசித்தவருமாகிய முருகேசு அரியபுத்திரர் நேற்று முன் தினம் (01.04.2014) செவ் வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு-தங்கமுத்து தம்பதி யரின் அன்பு மகனும், காலஞ் சென்ற ஆசிரியர் நல்லதம்பி- சின்னத்தங்கம் தம்பதியரின் மூத்த மருமகனும், காலஞ் சென்ற இலட்சுமியம்மாவின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான கனகரட்ணம், கனகம்மா, நாகரட்ணம், ஞானாம் பிகை, இளையதம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சண்முக ரட்ணம் (மந்திகை மருந்தகம்) சகுந்தலா, சிவதேவி, பாலகிருஷ் ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தசாமி, விநாயகமூர்த்தி, சிவகாமசுந்தரி, இராஜநந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனும், பிர சன்னா, பிரதீபன், பிரதா, அஞ்சனா, கோகுல், கோபீஸ், அனீஸ், தேவிகா, ரமீதா, பிரகலாதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (06.04.2014) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவதேவி (பேபி) 021 226 3611**
**சண்முகரட்ணம் (மந்திகை பாமசி) 077 024 1550**
**சகுந்தலா (பபா) 077 521 2692** (சி/13148) (10)
**தகவல்: குடும்பத்தினர்.**

## நீங்கா நினைவுகளுடன்...

**33 ஆம் ஆண்டு** — **நினைவு அஞ்சலி** — **முதலாம் ஆண்டு**





தோற்றம் 09.08.1927 — தோற்றம் 15.07.1932

மறைவு 23.09.1981 — மறைவு 15.03.2013

**அமரர் சின்னக்குட்டி சுப்பிரமணியம் — திருமதி நாகம்மா சுப்பிரமணியம்**

சிரார்த்த திதி (03.04.2014)

ஆண்டு ஒன்று என்ன
ஆண்டுகள் பல கடந்தாலும்
ஆறாது எம் துயரம்
எந்நாளும் உங்கள் நினைவுகளை
இதயத்தில் சுமந்து நிற்கும்

36/10, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## பருத்தித்துறை - ஆழியவளை இ.போ.ச.பஸ் சேவை சீரில்லை

*வீதி ஓரங்களில் நீண்ட நேரமாக காத்திருக்கும் மக்கள்*

வடமராட்சி, ஏப்.3

பருத்தித்துறை - ஆழியவளை -கட்டைக்காடு இ.போ.ச. பஸ் சேவை உரிய முறையில் இடம் பெறாததால் பயணிகள் பெரும் சிரமங்களை அனுப விப்பதுடன் பஸ் வருகைக்காக வீதி ஓரங்களில் காத்து நின்று கால நேரத்தை வீணடிக்க வேண்டிய அவல நிலை யும் ஏற்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் இருந்து பெருந்தொகை யான பயணிகளும், பருத்தித்துறையில் இருந்து வடமராட்சி கிழக்குக்கு ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களும் இரு வழிகளிலும் தினமும் பெருமளவில் பய ணித்து வருகின்றனர்.

குறிப்பாக வடமராட்சி கிழக் கைச் சேர்ந்த மக்கள் வைத் தியசாலை, வங்கிகள், நீதி மன்றம் என்பன உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்க ளின் சேவைகளைப் பெற்றுக் கொள்ள அன்றாடம் பருத்தித்துறை - கட்டைக்காடு பிரதான பாதையில் பயணிக்க வேண்டியுள்ளது. பிர தான பாதையில் தினமும் காலை முதல் மாலை வரை இரு வழிகளி லும் 6 பஸ் சேவைகளுக்கு நேர அட்டவணை வகுக்கப்பட்டுள்ள போதி லும் அந்தச் சேவைகளில் சில அடிக்கடி தடைப்பட்டு விடுகின்றன. இதனால் பயணிகள் அந்தரிக்க வேண்டியுள்ளது.

இத்தகைய போக்குவரத்துக் கஷ் டங்களைநீக்க குறித்த நேர அட்ட வணையின் பிரகாரம் பஸ் சேவை களை நடத்தி கஷ்டப் பிரதேச மக்க ளின் போக்குவரத்தை சீராக மேற்கொண்டு உதவ வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது. (வ-173)

## அமெ. தீர்மானத்தை இந்தியா ஆதரித்து இருக்க வேண்டும்

***அமைச்சர் நாராயணசாமி கருத்து***

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பாக ஐ.நா.சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா ஆத ரித்து இருக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் நாராயண சாமி தெரிவித் துள்ளார்.

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் புதுச்சேரித் தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் மத்திய அமைச்சர் நாராயணசாமி, நேற்று முன்தினம் காரைக்காலில் முக்கிய பிர முகர்கள் மற்றும் பல்வேறு அமைப்பினரைச் சந் தித்து ஆதரவு திரட்டினார். அதன் பின்னர் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரின்போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றம் தொடர்பாக இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் மூலம் ஐ.நா.சபையில் தீர் மானம் கொண்டு வரப்பட்டது.

அந்த தீர்மானத்தில் இலங்கைத் தமிழர் களுக்கு ஆதரவாக (அமெரிக்கா கொண்டு வந்த தீர்மா னத்துக்கு ஆதரவாக) இந்தியா வாக்க ளித்திருக்க வேண்டும் என்பது எனது கருத்து.

புதுச்சேரி மாநிலத்துக்கு மத் திய அரசு எந்தத் திட்டத்தையும் நிறைவேற்றவில்லை, நிதி தரவில்லை. அனைத்துத் திட்டங்களையும் வரவிடாமல் மத்திய அமைச்சர் முட்டுக் கட்டை போடுகிறார் என்று முதலமைச்சர் ரங்கசாமி குறைகூறி வருகிறார். கடந்த 5 ஆண் டுகளில் புதுச்சேரி மாநிலத்துக்கு என்று மத்திய அரசிடமிருந்து என் னென்ன திட்டங்கள், எவ்வளவு நிதி பெற்றுத் தரப்பட்டுள்ளன என்ற பட்டியலை நான் தரத் தயாராக இருக்கிறேன். அதுபோன்று அவர் முதலமைச்சராக இருந்து வரும் இந்த 3 ஆண்டுகளில் இந்த மாநிலத்துக்காக அவர் என்னென்ன திட்டங் களைக் கொண்டு வந் தார்? மத்திய அரசிட மிருந்து எந்தத் திட்டத் தைக் கொண்டு வர விடாமல் நான் முட் டுக்கட்டை போட்டேன்? என்று விவாதம்செய்ய அவர் தயாரா? என்று நான் கேட்டேன். ஆனால் அதற்கு அவரிடமி ருந்து எந்தப் பதிலும் இல்லை" -என்றார். (வ)

## ஆரம்ப நிகழ்வு

புதுமடம் றோ.க.த. பாடசாலையில் வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு இன்று வியாழக்கிழமை பி.ப.2.30 மணிக்கு புதுமடம் கிராம அபிவிருத்தி அமைப்புத் தொழிற் பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திருமதி சு.சூரியராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப் பாளர் செ.சந்திரராஜா கலந்து கொள்ளவுள்ளார். (400)


## நளின் வாடிக்கையாளர் கவனத்திற்கு

**மீளப்பெறாத பொருள்கள் தொடர்பாக**

தங்களால் திருத்துவதற்கு வழங்கப்பட்டு 2மாதங்களிற்கு மேலாக மீளப்பெறாத பொருள் களை தயவுசெய்து எதிர்வரும் 04.04.2014 ஆம் திகதிக்கு முன்னர் அவற்றிற்கான குறிப்புசீட் டுகளை சமர்ப்பித்து மீளப்பெற்றுக்கொள்ளவும் பொறுப்பேற்க தவறும் பட்சத்தில் குறிப்பிட்ட பொருட்களுக்கு நளின் நிர்வாகம் பொறுப்பேற் காது.

**வடக்கின் முன்னணிக் கணனி வலயமைப்பு**

**NALIN** Information Technologies (Pvt)Ltd

195/4 Parameswara junction Palaly road,Jaffna.

0212221166, 0777867974 facebook/nalinit.


## மரண அறிவித்தல்

### விஸ்வலிங்கம் சுந்தரலிங்கம்



ஊர்காவற்றுறை கதிரேசன் கோவில் வீதி பருத்தியடைப்பைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வ லிங்கம் சுந்தரலிங்கம் நேற்று (02.04.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மஞ்சரத்தினத்தின் அன்புக்கணவரும் லிங்கேஸ்வரன் காலஞ் சென்ற சுமதி மற்றும் சுரேந்திரன், சுபாசினி, கோகிலராஜ் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2014) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப.4 மணியள வில் தகனத்திற்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**41/8, செம்மணி வீதி, செட்டியார் தோட்டம், நல்லூர்**

**தகவல்: பிள்ளைகள்**

## நன்றி கூறுகின்றோம்

எமது அன்புத்தாய் **திருமதி செலீனம்மா அந்தோனிப்பர்ணாந்து வின்** மறைவை யொட்டி எமது வீட்டுக்கு வருகை தந்து எமது துயரில் பங்கு கொண்டு செபித்த யாழ். ஆயர் அவர்கட்கும், இறுதி யாத்திரைத் திருப்பலியில் பங்கு பற்றி செபித்த குருமுதல்வர் யாழ். அமல மரிதியாகிகளின் முதல்வர் குருக்கள், அருட்சகோதரிகள், அருட் சகோதர்களுக்கும் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து நன்றி கள் அத்துடன் தூர இடங்களில் இருந்து குறிப்பாக முல்லைத்தீவு பங்கிலிருந்து வந்தவர்களுக் கும், வீட்டிற்கு வந்து வழிபாடு நடத்திய அயல் பங்குகளை சேர்ந்த மக்களுக்கும், முன்னாள் பங்கு மக்களுக்கும் ஏனைய இடங்களிலிருந்து வந்தவர்களுக்கும் மலர்வளையம் சாத்தியவர் களுக்கும், அஞ்சலிப்பிரசுரம் வெளி யிட்டவர்களுக்கும் இங்கு வரமுடியாமல் தொலை பேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக் கும் அரச, அரச சார்பற்ற உத்தி யோகத்தர்கள் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் நன்றிகள். இறுதி யாத்திரை திருப்பலிக்கு ஒழுங்குகளை மேற் கொண்ட மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலய பங்குத் தந்தைக்கும், பங்குமக்களுக்கும் மரண செய்தி கேட்டு உதவிய அனைவருக்கும் எமது நன்றிகள்

**பிள்ளைகள்**

**(பங்குத்தந்தை முல்லைத்தீவு) அருட்பணி அ.ப. அன்ரனிப்பிள்ளை**


## ஓய்வு பெற்றுவிட்டீர்களா?

65 வயதுக்குட்பட்ட ஆர்வமுள்ள வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு, அரச காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தில் காப்புறுதி ஆலோசகராகப் பணியாற்றி நல்ல வருமானத்தை ஈட்ட ஓர் அரிய வாய்ப்பு!!

குறிப்பு: முழுநேரமாகவோ, பகுதி நேரமாகவோ பணியாற்றலாம்.

- 2 வார பயிற்சிக் காலமுடையது
- பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
- **பணிநிலையங்கள்:** யாழ்ப்பாணம்,சாவகச்சேரி, முல்லைத்தீவு, நெல்லியடி, கிளிநொச்சி, வவுனியா.

அடிப்படைத் தகைமைகள்:

★ G.C.E.(O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி

★ 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண் டும். தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுய விவரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 28.04.2014ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய வாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (46410)(5.8)

**விளம்பர இல. 4497**
**மே/பா.உதயன்**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## ஆயுள்வேத மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு


நவாலி, ஏப்.3

வலி.தென் மேற்கு பிரதேச சபை ஆனைக்கோட்டை உப அலுவலக இலவச ஆயுள் வேத மருத்துவமனையில் கடந்த வருடம் 6,544 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

குறித்த மருத்துவமனையில் வாதம், முட்டு, இருமல், தலையிடி ஆகிய நோய்களுக்கு சிறுவர் முதல் பெரியோர் வரை தினமும் 20 பேர் முதல் 30 பேர் வரை சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

வாரத்தில் ஒவ்வொரு சனிக் கிழமைகளிலும் சண்டிலிப்பாய் முதியோர் பராமரிப்பு நிலையத்தில் இந்த ஆயுள் வேத மருத்துவமனை நடமாடும் வைத்திய வைத்திய சேவையை நடத்தி வருகின்றது.

இதனால் அதிகமானோர் அங்கு பயன்பெற்று வருவதாக வைத்திய அதிகாரி தி.சுதர்மன் தெரிவித்துள்ளார். (வ-100)



உலக மக்களின் நலன் கருதி ஓம் நமசிவாய அகண்ட நாம பிரார்த்தனை

## ஓம் நமசிவாய அகண்ட நாம பிரார்த்தனை

தென்மராட்சி, ஏப்.3

சாவகச்சேரி வாரிவனநாத சிவன் ஆலயத்தில் உலக உயிரினங்களின் நலன் கருதி நடத்தப்படும் ஓம் நமசிவாய அகண்ட நாம பிரார்த்தனை நேற்று ஆரம்பமானது.

ஆலய பிரதம குரு கு.தெட்சணாமூர்த்தி குருக்கள் தலைமையில் வழிபாடுகளும் ஓம் நமசிவாய பிரார்த்தனையும் இடம்பெற்று வருகிறது.

மூன்று தினங்கள் நடைபெறவுள்ள பிரார்த்தனையில் 2 லட்சம் ஓம் நமசிவாய மந்திரம் சிவபக்தர்களால் ஓதப்படவுள்ளது. (வ-9)

## கடும் நிபந்தனைகளுடன் மூவருக்கு பிணை அனுமதி

### கொலைக் குற்றச்சாட்டு தொடர்பில்

யாழ்ப்பாணம், ஏப்.3

ஆனைக்கோட்டை, ஆறுகால் மடம் பகுதியில் கடந்த வருடம் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிக் கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மூன்று பேர் கடுமையான பிணை நிபந்தனையுடன் யாழ்.மேல் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இது தொடர்பான பிணை விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டுப் பிணை அனுமதி வழங்கப்பட்டது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த தங்கராசா சரத்பாபு என்ற குடும்பஸ்தர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார். குறித்த குடும்பஸ்தருக்கும் அவரது மனைவியின் தந்தையாருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக கொலையுண்டவரது மனைவியின் தந்தையார் மற்றும் ஒரு சகோதரனும் ஒன்றுவிட்ட சகோதரன் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

குறிப்பிட்ட கொலைக் குற்றச் சாட்டின் பேரில் இதுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஒரே குடும்ப உறவினர்களான குறித்த 3 பேர் சார்பாகவும் சட்டத்தரணி வி.திருக்குமரன் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்திருந்தார். அதனைப் பரிசீலித்த நீதிமன்று கடுமையான நிபந்தனைகளுடன் பிணை அனுமதி வழங்கியது. அதன்படி ஒவ்வொருவரும் தலா 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 3 ஆள்பிணைகளிலும் விடுவிக்கப்பட்டனர். தவிர அவர்கள் ஒவ்வொருநாளும் யாழ். பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திடவேண்டும் என்றும் அவர்கள் எவரும் வெளிநாடு செல்லக் கூடாது என்றும் நிபந்தனை விதித்துள்ளது நீதிமன்று. (வ-4)

# நுளம்பு ஒழிப்பு செயற்பாடுகள் குடாநாட்டில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.3

சுகாதார அமைச்சினால் அறிவிக்கப்பட்ட தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வார செயற்பாடுகள் யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்துச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிலும் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன. சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள போதிலும் மலேரியா தடுப்புப் பிரிவினர், சுகாதாரத் தொண்டர்கள் ஆகியோருடன் பொலிஸாரும் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரச் செயற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

வாரத்தில் முதல் நாளான நேற்று அனைத்துப் பாடசாலைகளிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஏற்கெனவே சுகாதார வலயங்களாகப் பிரிக்கப்பட்ட பொது சுகாதாரப் பரிசோதர்கள் பிரிவுகளில் கட்டுப்பாட்டு வாரச் செயற்பாடுகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளிலும் மாநகர சபை குடும்பநல உதவியாளர்கள் மற்றும் பொது அமைப்புக்களைச் சேர்ந்தோர் நுளம்பு ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வீடு வீடாகச் சென்று பொதுமக்களை நேரடியாகச் சந்திக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட குறித்த குழுவினர் மக்கள் மத்தியில் நுளம்பைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

அத்துடன் வீட்டுக் குடியிருப்புக்களைச் சுற்றி பார்வையிட்டதோடு நுளம்புப் பெருக்கத்துக்கு காரணமாகக் காணப்பட்ட இடங்களை இனங்கண்டதோடு அவற்றுக்கு எதிரான நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

நுளம்பு கட்டுப்பாட்டு வார விழிப்புணர்வு நடவடிக்கையில் மாநகர பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கலந்து கொள்ளவில்லை. சுகாதாரப் பரிசோதகர்கள் தொடர்ந்தும் தமது வெளிக்களப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.


அவர்கள் தொடர்ந்தும் மாநகர சபை சுகாதார பகுதி அலுவலகங்களில் கடமைகளில் ஈடு பட்டு வருகின்றனர். (வ-9-17-135)



துப்புரவுப் பணிகளில் ஈடுபடும் பணியாளர்கள்

## கிணறுகளில் திடீரென குறைந்த நீர்மட்டம்

### நீர்வேலி, கோப்பாய் பகுதி விவசாயிகள் சிரமத்தில்



கோப்புப்படம்

யாழ்ப்பாணம், ஏப்.3

நீர்வேலி, கோப்பாய் பிரதேசங்களில் உள்ள தோட்ட நன்னீர் கிணறுகளில் நீர் மட்டம் திடீரென குறைந்தமையால் விவசாயிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். தற்போதைய கடும் வறட்சியின் காரணமாகத் தோட்டக் கிணறுகளில் தண்ணீர் மட்டம் வெகுவாக குறைவடைந்துள்ளது.

தண்ணீரின் மட்டம் குறைவடைந்தமையால் தோட்டங்களில் மரக்கறிப் பயிர்களுக்கு முழுமையாகத் தண்ணீரை பாய்ச்ச முடியாது விவசாயிகள் சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இதன் காரணமாக விவசாயிகள் காலையும், மாலையுமாக இரண்டு தடவைகள் பயிர்களுக்குச் சுழற்சி முறையில் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். (வ-7)




யாழ்.சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் நுழைவாயிலில் புதிதாக அமைக்கப்பட்ட பெயர்ப் பலகை அண்மையில் குருநகர் பெண்கள் -ஒஸ்லோ அமைப்பின் அங்கத்தவர் ஜோன்மேரியால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. இந்தப் பெயர்ப் பலகை நிறுவுவதற்கு குருநகர் பேகன் ஒஸ்லோ அமைப்பு நிதியுதவி வழங்கியிருந்தது. (வ-51)

## டிராக்டருடன் மோதியது கூலர் வாகனம்; மூவர் காயம்

வேகமாக வந்த கூலர் வாகனமொன்று அதே திசையில் சென்ற டிராக்டருடன் மோதியதில் மூவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு மிருசுவில் உசன் சந்தியில் (ஏ-9 வீதியில்) இடம்பெற்றது. கூலர் வாகனம் மோதியதில் டிராக்டரில் பயணித்த இருவரும் கூலர் வாகனச் சாரதியும் காயமடைந்தனர்.

கூலர் வாகன சாரதியான பைசால், (வயது-36) என்பவரும் டிராக்டரில் பயணித்த மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த அருளம்பலம் விக்னேஸ்வரராசா, (வயது-56) கந்தையா செல்லத்துரை, (வயது -65) ஆகியோரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பைசால் மற்றும் கந்தையா செல்லத்துரை ஆகியோர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (வ-9)

## பொற்பதி, அன்னங்கை வீதிகளில் தற்காலிக திருத்தம் முன்னெடுப்பு

### உரிய நிதி கிடைக்கும்வரை என்கிறார் வடக்கு வீதி அபிவிருத்தி திணைக்களத் திட்டப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஏப்.3

கொக்குவில் - பொற்பதி வீதி, கோண்டாவில் அன்னங்கை வீதி என்பவற்றை உரிய நிதி கிடைத்ததும், சிறந்த முறையில் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது குறிப்பிட்ட இரு வீதிகளிலும் தற்காலிக திருத்தங்கள் முன்னெடுக்கப்படும் என்று வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்கள திட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இரண்டு வீதிகளும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார், உறுப்பினர் சுரேஷ்குமார் ஆகியோர் வீதி அபிவி ருத்தித் திணைக்களத் திட்டப் பணிப்பாளரை நேரடியாகச் சந்தித்தனர்.

இதன்போது குறிப்பிட்ட வீதிகளின் நிலைமை குறித்தும், அதனூடாக போக் குவரத்துச் செய்வதில் மக்கள் எதிர்கொள்ளும் இடர்கள் குறித்தும் எடுத்துக் கூறி அவ் வீதிகளை உடன் திருத்தி அமைக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

அதை அடுத்து உடனடியாக தற்காலிக திருத்த வேலைகளை மேற்கொள்வதாகவும் உரிய நிதி கிடைத்ததும் இரண்டு வீதிகளும் சிறந்த முறையில் திருத்தியமைக்கப்படும் என்றும் திட்டப் பணிப்பாளர் தெரிவித்திருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. (வ-7)

# பேஸ்புக், ருவிட்டர், கூகுளின் வருமானம் 500 கோடி?

## இந்திய நாடாளுமன்றத் தேர்தல் விளம்பரங்களினால்

புதுடில்லி,ஏப் 3

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் காரணமாகக் கூகுள் இணையத்தளம், ருவிட்டர், பேஸ்புக்போன்றசமூக வலைத் தளங்களுக்கு 500 கோடி ரூபா வருமானம் கிடைக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் எதிர் வரும் 7ஆம் திகதி முதல் மே 12 வரை நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலின் விளம் பரங்களுக்காக மட்டும் அனைத்து அரசியல் கட்சிகளும் மொத்தமாக 500 கோடி இந்திய ரூபா வரை செலவு செய்யலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தேர்தலில் சுமார் 81 கோடி பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இதில் முதல் முறையாக வாக்களிக்க இருப்பவர்கள் மாத்திரம் 10 கோடி, 30 வயதிற்கு உட்பட்ட இளைஞர்கள் என்றால் அது 20 கோடியைத் தாண்டிவிடும். இவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் சமூக வலைதளங்களான கூகுள், பேஸ்புக், ருவிட்டர் போன்றவற்றில் கணக்கு வைத்திருப்பவர்கள். தகவல்களை இணையதளத்தில் பறிமாறிக் கொள்பவர்கள். இந்த இளைஞர் பட்டாளத்தை அரசியல் கட்சிகளும் தற்போது அதிக அளவில் குறி வைக்கத் தொடங்கியுள்ளன. இளைஞர்களை ஈர்க்கும் வகையில் இத்தகைய சமூக வலைத்தளங்களில் விளம்பரம் செய்வதற்காக அரசியல் கட்சிகள் பல நூறு கோடிகளை செலவு செய்ய திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

# வாரணாசியில் மோடியை நிச்சயம் தோற்கடிப்பேன்

*கெஜ்ரிவால் முழக்கம்*

புதுடில்லி,ஏப் 3

வாரணாசி தொகுதியில் பா.ஜ.க பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியை கண்டிப்பாகத் தோற் கடிப்பேன் என்ற ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கெஜ்ரி வால் தெரிவித்துள்ளார். டில்லியில் ஆம் ஆத்மி வேட்பாளர் ராஜ் மோகன் காந்தியை ஆதரித்துப் பிரசாரம் மேற்கொண்ட கெஜ்ரிவால் கூறியதாவது:-

நான் நாடாளுமன்றத்துக்குச் செல்ல வேண்டும் என்றால் எளிதில் வெற்றி பெறக்கூடிய தொகுதியில் போட்டியிட்டிருப்பேன். என்னுடைய குறிக்கோள் மோடியைத் தோற்கடிப்பது தான். ஆகையால் நான் இந்தத் தேர்தலில் வார ணாசி தொகுதியில் போட்டியிடுகிறேன்.



*தேர்தல் பிரசாரத்தில் முழங்கும் கெஜ்ரிவால்*

காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தியையும் தோற்கடித்தே ஆகவேண்டும். அதனால் தான் அமேதியில் குமார் விஸ்வாஸ் நிறுத்தப்பட்டுள்ளார். ஊழலையே நம்பிருக்கும் கட்சியின் தலைவர்களான இவர்கள் இருவரையும் தோற்கடிக்க வேண்டியுள்ளது என்றார். மேலும் தேர்தலுக்கு பிறகு பா.ஜ.கவில் இணையக்கூடும் என்ற தகவலை அவர் திட்டவட்டமாக மறுத்துள்ளார். (கு)



உத்தர பிரதேச மாநிலம் அலகாபாத்தில், மோடி, ராகுல், அரவிந்த் கெஜ்ரிவால் போன்று முகமூடி அணிந்துகொண்டு பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள். (கு)

# நான் இப்போது கட்சியில் இல்லை தி.மு.க குறித்துக் கேட்கக்கூடாது

*மு.க. அழகிரி கூறுகிறார்*

சென்னை,ஏப் 3

நான் தற்போது கட்சியில் இல்லை என்பதால், என்னிடம் திருச்சி தி.மு.க. வெற்றி வாய்ப்பு குறித்தெல்லாம் கேள்வி எதுவும் கேட்கக்கூடாது என்று கூறினார் மு.க.அழகிரி.



*அழகிரி*

தஞ்சாவூரில் கட்சியின் நிர்வாகி ஒருவரின் இல்லத்தில் நடைபெற்ற திருமண வெள்ளிவிழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு திரும்பும் வழியில், திருச்சியில் மதிய உணவு முடித்துக் கொண்டு ஹோட்டலில் இருந்து வெளியே வந்தார் மு.க.அழகிரி. அப்போது அவரிடம் செய்தியாளர்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

தி.மு.கவில் இருந்து நீக்கியது தொடர்பாக வழக்குப் போடுவேன் என்று முன்னர் கூறினீர்களே. இப்போது அது குறித்து எதுவும் நடவடிக்கை எடுத்தீர்களா என்று செய்தியாளர்கள் கேட்டனர்.

அதற்கு அவர், தி.மு.கவில் இருந்து நீக்கியது குறித்து அதிகாரபூர்வக் கடிதம் எனக்கு இதுவரை வரவில்லை. வைகோ நீக்கப்பட்ட போது, அவருக்கு அதிகாரபூர்வக் கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் எனக்கு இதுவரை வரவில்லை என்றார். தமிழ்நாடுமுழுவதும் ஆதரவா ளர்கள் கூட்டத்தைக் கூட்டி, எல்லா இடங்களுக்கும் செல்வீர்களா என்று செய்தியாளர்கள் கேட்டனர். அதற்கு அவர், எனது ஆதரவாளர்கள் இருக்கும் குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்வேன் என்று பதிலளித்தார்.

திருச்சியில் தி.மு.கவுக்கு வெற்றி வாய்ப்பு எப்படி உள்ளது என்று செய்தியாளர்கள் கேட்டனர்.

அதற்கு அவர், நான் கட்சியில் இல்லை, எனவே திருச்சி வெற்றி வாய்ப்புக் குறித்தெல்லாம் என்னிடம் கேட்கக் கூடாது என்றார். (கு)

# சிலிண்டர் வெடித்து விபத்து சென்னையில் தம்பதியர் சாவு

சென்னை தண்டையார்பேட்டையில் வசித்து வந்த சுப்பிரமணியம் என்பவர் வீட்டில் நேற்று அதிகாலை சிலிண்டர் வெடித்ததால் ஏற்பட்ட விபத்தில் அவரும், அவரது மனைவி துரைச்சியும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். அவர்களது 13 வயது மகள் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று முன் தினம் இரவு சிலிண்டரை அணைக்காமல் சென்றபோது, எரிவாயு வீடு முழுவதும் பரவியுள்ளது. நேற்றுக் காலை, பக்கத்து வீட்டில் மின் விளக்குக்கான ஆளியைப் போட்டபோது, சிலிண்டர் பயங்கரச் சத்தத்துடன் வெடித்துள்ளது. இதில், வீட்டுக்குள் இருந்த சுப்பிரமணியம் மற்றும் துரைச்சி ஆகியோர் உயிரிழந்தமை விசாரணையில் தெரிய வந்துள்ளது. (கு)


## சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் கேள்வி அறிவித்தல் - 2014

### சாவகச்சேரி பிரதேசசபையால் கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

01. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட் C - 8 ) பதிவு செய்யப்பட்டவர்கள் கீழ் குறிப்பிடப்பட்ட தொகையைச் செலுத்தி, கேள்விப் பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தலைவர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
03. ஒவ்வொரு கேள்விகளும் தனித்தனியாக உறையிலிடப்பட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட்டு கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
04. கேள்விகள் பரிசீலிக்கப்படும் போது கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

கேள்விப் படிவம் வழங்கப்படும் ஆரம்பத் திகதி : 04.04.2014 மு.ப. 10.00மணிமுதல் (அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்)

கேள்வி படிவம் வழங்கப்படும் இறுதித் திகதி :- 22.04.2014 பி.ப 2.00 மணிவரை.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி:- 23.04.2014 ந.ப 12.00 மணிவரை.

கேள்விகள் திறக்கப்படும் திகதி :- அன்றைய தினம் (23.04.2014) பி.ப 2.00 மணியளவில் கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

05. மேலதிக விவரங்களை சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் (கொடிகாமம்) அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல. | வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூபா | மீளளிக்கப்படாத கேள்விப்படிவப் பணம் ரூபா | மீளளிக்கப்படாத VAT+NBT 12%+3% ரூபா |
|---|---|---|---|---|
| 01. | உலாந்தா காட்டு வீதி | 7500.00 | 750.00 | 112.50 |
| 02. | அறுகம்புல வீதி | 5000.00 | 750.00 | 112.50 |

துரைராஜா சிற்றம்பலம்,
தவிசாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை,
தலைமை அலுவலகம், கொடிகாமம்,
2014.04.02

# சிலியில் செவ்வாய் இரவு நிலநடுக்கம்


## இடிபாடுகளில் சிக்கி 5 பேர் சாவு; அவசரகால நிலை அங்கு பிரகடனம்

சன்ரியாகோ,ஏப் 3
தென் அமெரிக்க நாடான சிலியில் நேற்று முன்தினம் இரவு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து வடக்குக் கரையோரப் பகுதிகளில் அலைகள் தாக்கின. நிலநடுக்கத்தின் தாக்கம் ரிச்டரில் 8.3 ஆகப் பதிவாகியது. உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் இரவு 8.46 மணியளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

சிலியின் வடக்குக் கடற்கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அறிவுறுத்தப்பட்டனர். வடக்குச் சிலியில் இருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக வெளியேறினர்.

சின்குவா செய்தி நிறுவனத் தகவலின்படி வடக்குப் பகுதியில் இருந்து 10,000 பேர் பத்திரமான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து மின்சாரம் தடைப்பட்டதால் நகரமே இருளில் மூழ்கியது.



தமது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வீதிக்கு வந்துள்ள மக்கள் கூட்டம்.




அடுக்குமாடி கட்டட வளாகத்தில் தீப்பிடித்து எரிவதைக் காணலாம்.

***5 பேர் பலி***

முதல்கட்டத் தகவலின்படி 5 பேர் உயிரிழந்தமை தெரிய வந்துள்ளது. உள்துறை அமைச்சர் ரோட்ரிகோ. 5 பேரும் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என கூறியிருக்கிறார். முன்னதாக 8.0 அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் அறிவித்திருந்தது. ஆனால் தற்போது நிலநடுக்கம் 8.3 ஆக பதிவாகியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

***கைதிகள் தப்பிப்பு***

சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டதை அடுத்து, வடக்கு சிலியில் உள்ள ஒரு சிறைச்சாலையில் இருந்து 300இக்கும் மேற்பட்ட பெண் கைதிகள் தப்பித்தனர். இவ்விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (த)



கிறிஸ்தவர்களின் தவக்காலம் தற்போது அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில், பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் நேற்றுப் புதன்கிழமை வத்திக்கானில் உள்ள சென்.பீற்றர்ஸ் சதுக்கத்தில் கூடியிருந்த மக்களைச் சந்தித்தார். இதன் போது அவர் அங்கு வந்திருந்த சிறுவன் ஒருவனுடன் அன்பு முத்தத்தைப் பகிர்ந்து கொண்டார். (த)

## ஒரே மாதத்தில் 3 முறை அதிர்ஷ்டம் வென்ற தம்பதி

நியூயோர்க், ஏப் 3
அமெரிக்காவில் வேர்ஜினியா மாகாணம் போர்ட்ஸ்மவுத் பகுதியைச் சேர்ந்த தம்பதிக்கு ஒரே மாதத்தில் மூன்று முறை அதிர்ஷ்டம் கதவைத் தட்டியுள்ளது.

கொல்வின் மற்றும் ஜாடெரா ஸ்பென்ஸர் தம்பதிக்கு கடந்த வாரத்தில் சுரண்டல் சீட்டிழுப்பில் 10 லட்சம் அமெரிக்க டொலர் (130 கோடி ரூபா) கிடைத்துள்ளது. இவர்களுக்கு சீட்டிழுப்பில் பரிசு கிடைப்பது கடந்த ஒரு மாதத்தில் இது 3ஆவது முறையாகும்.

கடந்த மார்ச் 12ஆம் திகதி பவர்போல் குலுக்கல் என்னும் சூதாட்டத்தில் சுமார் 130 கோடி ரூபா கிடைத்தது. அதேபோன்று கடந்த மார்ச் 26ஆம் திகதி, வோர்னினியா சீட்டிழுப்பில் 50 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் (சுமார் 65 லட்சம் ரூபா) பரிசு கிடைத்தது. இப்படித் தொடர்ந்து அதிர்ஷ்ட மழை கொட்டுவதால் இந்தத் தம்பதி வுதிக்குமுக்காடிப் போயுள்ளனர்.

ஆனால், இத்துடன் நாங்கள் நின்று விடப்போவதில்லை என்று கூறும் இந்தத் தம்பதியினர் மேலும் பரிசுக் கூப்பன்களை வாங்கியும், சூதாட்ட விளையாட்டுகளில் ஈடுபட்டும் வருகின்றனர். (த)

## நான்சி பவல் பதவி விலகலில் எந்தப் பின்னணியும் இல்லை

### அமெ. வெளியுறவு அமைச்சு விளக்கம்



வொஷிங்ரன்,ஏப் 3
இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் நான்சி பவல் பதவி விலகலின் பின்னணியில் எந்தவொரு முக்கிய விவகாரமும் இல்லை. அவர் முன்கூட்டியே திட்டமிட்டபடிதான் ஓய்வு பெற்றுள்ளார் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நான்சி பவல் தனது பதவியில் இருந்து விலகிவிட்டதாக அண்மையில் அறிவித்தார். இந்தியாவில் மக்களவைத் தேர்தல் நடைபெறவுள்ள சூழ்நிலையில் பவலின் பதவி விலகல் மிகுந்த கவனத்தைப் பெற்றது.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நடைபெற்ற சில சம்பவங்களால் நட்புறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. அதை மறுசீரமைப்பு செய்வதற்கு வசதியாக நான்சி பவல் பதவி விலகியதாகவும், அவருக்குப் பதிலாக வரும் புதிய தூதர், இந்தியாவுடன் இணக்கமான நட்புறவை ஏற்படுத்துவார் என்றும் சொல்லப்பட்டது.

இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத் துறை துணைச் செய்தித் தொடர்பாளர் மேரி ஹார்ப் கூறியதாவது:

நான்சியின் பதவி விலகலுக்குப் பின்னால், முக்கியமான காரணம் ஏதும் இல்லை. அவரது ராஜினாமா குறித்து கிளப்பி விடப்படும் செய்திகளில் சிறிதும் உண்மையில்லை. வெளியுறவுத் துறையில் 37 ஆண்டுகள் பணிபுரிந்துள்ள நான்சி, முறைப்படி தனது ஓய்வு அறிவிப்பை வெளியிட்டுள்ளார்-என்றார்.(த)

## ரஷ்யாவுடன் உறவை முறித்தது நேட்டோ

பிரசல்ஸ்,ஏப் 3
ரஷ்யாவுடனான இராணுவ நடவடிக்கைகள் உள்ளிட்ட ஏனைய அனைத்து விதமான உறவுகளையும் முறித்துக்கொள்வதாக நேட்டோ அறிவித்துள்ளது.

ரஷ்யாவுடன் கிரைமியாவை இணைத்துக் கொண்டமையானது, ஐரோப்பிய பாதுகாப்புக்கான மாபெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதெனவும் நேட்டோவின் பொதுச் செயலாளர் அண்டர்ஸ் போக் தெரிவித்துள்ளார். 28 நாடுகள் அங்கம் வகிக்கும் நேட்டோ மாநாடு பிரஸ்ஸல்சில் நடைபெற்றது.

இதன்போது கிரைமியா பிராந்தியத்தைரஷ்யாவுடன் இணைத்தமைக்கு கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது. (த)

## உறுதியான தகவலின்றி விமானத் தேடுதல் பணி

### ஆஸி. முன்னாள் விமானப் படை தளபதி கருத்து

பேர்த், ஏப் 3
எந்த ஓர் உறுதியான தகவலும் இல்லாமல், மலேசிய விமானத்தைத் தேடும் பணிகள் நடந்து வருவதாக ஆஸ்திரேலியாவின் முன்னாள் விமானப் படைத் தளபதி மார்ஷல் அங்குஸ் ஹூஸ்டன் கூறியுள்ளார்.

இந்தியப் பெருங்கடலில் நொருங்கி விழுந்ததாகக் கருதப்படும் மலேசிய விமானத்தைத் தேடும் பணியில் நேற்று இங்கிலாந்து நாட்டின் நீர்மூழ்கிக் கப்பலும் இணைந்துள்ளது.

இதனை அடுத்து பேர்த்தில் உள்ள விமானத் தளத்திற்கு மலேசியப் பிரதமர் நிஜாப் ரசக் விரைந்துள்ளார். ஏழு நாடுகள் இணைந்து மேற்கொண்டு வரும் தேடல் பணிகள் குறித்து அவர் ஆலோசிக்க உள்ளார்.

இங்கிலாந்தின் றோயல் கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல் நேற்றுக் காலை வடமேற்கு பேர்த்திலிருந்து தேடல் பகுதிக்கு விரைந்தது. அதனுடன், 10 விமானங்கள் மற்றும் 9 கப்பல்கள் நேற்றைய தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளன.

ஒஸ்கார் விருது வென்ற நியூசிலாந்துத் திரைப்பட இயக்குநர் பீற்றர் ஜாக்சன், தனது சொந்த ஜெற் விமானத்தைத் தேடல் பணிக்காக இணைத்துள்ளார்.

இந்த நிலையில், மலேசிய விமானத் தேடல் குறித்து கருத்து தெரிவித்துள்ள ஆஸ்திரேலியாவின் முன்னாள் விமானப் படைத் தளபதி மார்ஷல் அங்குஸ் ஹூஸ்டன், மாயமான மலேசிய விமானத்தின் பாகங்களைத் தேடும் பணி பெரும் சிக்கல் வாய்ந்ததும் கடினமானதாகவும் உள்ளது. எந்த உறுதியான தகவலும் இல்லாமல் இந்தத் தேடல் நடந்து வருகிறது என்றார். (த)

> **“ஒஸ்கார் விருது வென்ற நியூசிலாந்துத் திரைப்பட இயக்குநர் பீற்றர் ஜாக்சன் தனது சொந்த ஜெற் விமானத்தைத் தேடல் பணிக்காக இணைத்துள்ளார்.**

# தேவை

## Offset Minder

மன்னார், வவுனியா இல் இயங்கி வரும் அச்சகங்களுக்கு
Hamada 700, Hamada C48
ஆகிய அச்சு இயந்திரங்களை இயக்கக் கூடிய மைன்டர் தேவை.

**உணவு, தங்குமிட வசதி இலவசமாக வழங்கப்படும்.**

சம்பளம் ரூபா 20,000.00
**OT** வழங்கப்படும் (43237)

தொடர்புகளுக்கு:
077 9291102


## வாழ்வாதார உதவிகள்

யாழ்ப்பாணம், ஏப்.3

'வறுமையற்ற இலங்கை' திட்டத்தின் கீழ் 15 பயனாளிகளுக்குத் தையல் இயந்திரங்களும் மூன்று பயனாளிகளுக்கு மீன்பிடி வலைகள் வழங்கும் நிகழ்வும் இன்று வியாழக்கிழமை நல்லூர் பிரதேச செயலகத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ் திரி அலன்டீன் கலந்து கொள்வார். (க-7)


**புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு**

35 நாளில் 2kg இற்கு மேல் வளர்ச்சியடையக்கூடிய No-1 புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. விலை 90/=
A.K.பாம் பருத்தித்துறை
T.P :077 249 1956 (48453) (3.6.4)


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்.3

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவத்தை முன்னிட்டு இன்று வியாழன் மாலை 5.45 மணியளவில் அபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து மூலமூர்த்தி பூஜையும், வசந்த மண்டப பூசையும் நடைபெற்று விநாயகப் பெருமான் வீதிவலம் வருவார். (க)

◆ ◆ ◆

அச்சுவேலி வடக்கு (சரசாளி)அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுதர் தேவஸ்தானத்தின் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாக உள்ளது.

ஆலய பிரதம குரு இ.நித்தியகஜேந்திரன் ஐயர் தலைமையில் இடம்பெறும் இந்த உற்சவத்தில் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் இடம்பெற்று 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை புதுவருடத் தினத்தன்று தீர்த்தோற் சவமும் இடம்பெறவுள்ளன. (க)

◆ ◆ ◆

தென்மராட்சி, ஏப்.3

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந் திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறும்.

சங்கத்தானை மீனாட்சி அம்பாள் ஆலய அடியார்களால் கொடியேற்றத்துக்கான கொடிச்சேலை நாளை மறுதினம் காலை 7 மணிக்கு ஆலயத்திலிருந்து ஊர்வலமாக கொண்டு செல்லப்படும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். "கிரியா கிரம ஜோதி" சிவஸ்ரீ மு.வைத்தியநாதக் குருக்கள் தலைமையில் பெருந்திருவிழா இடம்பெறும். (வ-9)

◆ ◆ ◆

வடமராட்சி, ஏப்.3

கரவெட்டி அருள்மிகு வெல்லன் விநாயகர் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை புதுவருட தினத்தன்று தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (க-173)

◆ ◆ ◆

கிளிநொச்சி, ஏப்.3

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கண்ணகை புரம் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பங்குனித் திங்கள் பெருவிழா எதிர்வரும் 7 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (க-18)

## குருசடித்தீவு புனித அந்தோனியார் திருவிழா இன்று ஆரம்பம்

கொழும்புத்துறை, ஏப்.3

நாவாந்துறை குருசடித்தீவு புனித அந்தோனியார் ஆலயத்திருவிழா இன்று 3 ஆம் திகதி மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக வழிபாடுகளின்றி சேதமடைந்திருந்த ஆலயம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு கடந்த மாதம் திறந்து வைக்கப்பட்டதையடுத்து முதலாவது திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற வுள்ளது.

நாளை மாலை 5 மணிக்கு திருச்சிலுவைப் பாதைத் தியானமும் திருப்பலியும் நடைபெறும். நாளை மறுதினம் மாலை 5 மணிக்கு நற்கருணை விழாவும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

திருவிழாத் திருப்பலிக்கு வருகை தரும் பக்தர்களின் வசதி கருதி காலை 5.30 மணியிலிருந்து படகுச் சேவை பண்ணை வீதியிலிருந்து நாவாந்துறை கடற்றொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-135)

## பொங்கல் விழாவும் குருபூசை நிகழ்வும்

வலி.வடக்கு, ஏப்.3

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி பொங்கல் விழா இடம்பெறவுள்ளது.

இதேவேளை 10 ஆம் திகதி யோகர் சுவாமிகளின் 50 ஆவது குருபூசை நிகழ்வும் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அன்னபூரணி மண்டபத்தில் முற்பகல் 10 மணியளவில் தேவஸ்தானத்தின் தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெற வுள்ளது. (க)


# குறைந்த விலையில் உன்னதமான பயணம்



உலகில் எந்தப்பகுதிக்கும் சென்றுவர விமான பயணச்சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் பாஸ்போர்ட் பெற்றுத்தரும் சேவையும் வழங்கப்படும்.
*Conditions apply

(சி/13089)

## ஹேலீஸ் டிரவல்ஸ் & டூர்ஸ்

உங்கள் உல்லாச பயணத்திற்கு ஒரே தெரிவு!

யாழ்ப்பாணக்கிளை: 275, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 1878 மனோ : 077 773 0818

Skyline


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# புறநிலைப் படிப்புக்கள் அலகு
# Extre-Mural Studies Unit
# University of Jaffna

## பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகு பின்வரும் பாடநெறிகளுக்கான விண்ணப்பங்களைத் தகுதியானவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றது. விரிவுரைகள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை நடைபெறும். 18 வயதுக்கு மேற்பட்ட எவரும் இப்பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.**

**பதிவுக் கட்டணம் ரூபா 500.00**

**பயில விரும்புபவர்கள் சுயமுகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் தங்களின் சுயவிவரக்கோவையினை இணைத்து இணைப்பாளர், புறநிலைப் படிப்புக்கள் அலகு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி பதிவினை மேற்கொள்ளலாம்.**

**பாடநெறிகளைப் பயில விரும்புபவர்கள் எத்தனை பாடநெறிகளுக்கும் விண்ணப்பிக்க முடியும். ஆயினும் ஒரே நேரத்தில் ஒரு பாடத்துக்கே அனுமதிக்கப்படுவர்.**

**விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி 05.05.2014**

01. அனர்த்த முகாமைத்துவத்திற்கான அடிப்படைகள் (Fundamentals of Disater management)
02. தொழிலியலுமைக்கான மென்திறன்விருத்தி (Soft skills for Employability)
03. விசேட தேவை மாணவர்களுக்கான கல்வி (Special needs Education)
04. முன்பள்ளிக் கல்வி (Pre-School Education)
05. ஆரம்பக் கல்வி (Primary Education)
06. தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (English For Communication)
07. அலுவலர்களுக்கான ஆங்கிலம் (English For Office Staff)
08. அலுவலக முகாமைத்துவம் (Office Management)
09. மனித உரிமைகள் (Human Rights)
10. மனிதவள முகாமைத்துவம் (Human Resources Management)
11. சிறுதொழில் முகாமைத்துவம் (Small Business Management)
12. தாதிப்பராமரிப்பும் முதலுதவியும் (Nursing and First aid)
13. சோதிடக் கலை (Astrology)
14. வழிகாட்டலும் ஆற்றுப்படுத்தலும் (Guidance and Counseling)
15. சிறுவர் - இளையோர் உளவியல் (Child & Adolescence Psychology)
16. யோகாவும் உளவியலும் (Yoga Psychology)

**மேற்படி பாடநெறிகளில் தகுதியும் திறமையும் படைத்தவர்கள் வளவாளர்களாகப் பணியாற்ற விரும்பின் தங்களுடைய துறைசார் திறமைகளை உறுதிப்படுத்தக்கூடியவாறு தங்களைப் பற்றிய சுயவிவரக் கோவையினை இணைப்பாளர், புறநிலைப் படிப்புக்கள் அலகு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.**

**பதிவாளர்** (சி/13142)(7.6.3)

## வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்
## 2014 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எல்லைக்குட்பட்ட கோழி இறைச்சிக்கடைகள் மீள் கேள்வி வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.**

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :03.04.2014-08.04.2014 பி.ப ஒரு மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :09.04.2014 ந.ப.12.00 மணிவரை
கேள்வி திறக்கும் திகதி :09.04.2014 பி.ப. 2.00 மணி

| கோழி இறைச்சிக் கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம் NBT தவிர | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை NBT தவிர | மாத வாடகை NBT தவிர |
|---|---|---|---|---|
| மானிப்பாய்ப்பட்டின உப அலுவலகம் | 1000.00/= | 5000.00/= | 309375.00 | 400.00/= |
| மானிப்பாய் பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | | | | |
| பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் | 500.00/= | 1500.00/= | 15000.00/= | 250.00/= |
| மாதகல் கோழி இறைச்சிக்கடை | | | | |

**கேள்வி விண்ணப்பப்படிவத்தினை உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.**

**சண்முகம் சிவகுமாரன், பதில் தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**

(சி/13143)(3.6.4)

# ஒதியமலையில் 300 ஏக்கரில் சிங்களவரை குடியேற்ற முயற்சி

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் மக்கள் முறைப்பாடு

நெடுங்கேணி, ஏப்.3

முல்லைத்தீவு, ஒதியமலை, தனிக்கல்லு பகுதிகளில் தமிழ் மக்களின் 300 ஏக்கர் வரையான காணிகளில் சிங்களக் குடும்பங்களைக் குடியேற்ற இராணுவத்தினர் முயற்சித்து வருவதாக அப்பகுதி மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் முறையிட்டுள்ளனர்.

இது குறித்து அப்பகுதி மக்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தனிக்கல்லுப் பகுதியில் எமது பூர்வீகக் காணிகளைப் பார்வையிடுவதற்கு இராணுவத்தினர் அனுமதி மறுத்துள்ளனர். அது மட்டுமன்றித் தற்போது அந்தப் பகுதியில் வீதிகளை அமைக்கும் பணிகளிலும் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

நாம் தற்போதும் அகதிகளாக வேறு இடங்களிலேயே வாழ்ந்து வருகின்றோம். எமது காணிகளில் உள்ள வளங்கள் எவற்றையும் பெற்றுக் கொள்ள முடியாத நிலையே காணப்படுகிறது. வயல் நிலங்கள், தோட்டக் காணிகளை இழந்து தொழில் செய்ய முடியாத நிலையில் வாழ்வாதார நெருக்கடிகளை எதிர்கொண்ட நிலையிலேயே நாம் வாழ்ந்து வருகின்றோம். எனவே எமது பூர்வீகநிலங்களை மீட்டு அங்கு நாம் குடியேற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நடவடிக்கைஎடுக்க வேண்டும்என்று அவர்கள் தெரிவித்துள்ளார்.

காணி அபகரிப்புத் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கவனத்துக்கு கொண்டு சென்றதையடுத்து சம்பவ இடத்தை சிவசக்தி ஆனந்தன், நெடுங்கேணி பிரதேச சபை தவிசாளர் பாலசுப்பிரமணியம் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களான ம.செந்தூரன். ஆ. மகாலிங்கம் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

அத்துடன் குறித்த காணிகளை மீட்டு உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் உறுதியளித்தனர். (ஐ-435)

# இழந்த உரிமைகளைப் பெற அறவழியில் போராடுவோம்

## கூட்டமைப்பு எம்.பி. வினோ கோரிக்கை

கிளிநொச்சி, ஏப். 3

நாங்கள் இழந்தவை ஏராளம். போர் காரணமாக பல்வேறு வகையில் அளவிட முடியா இழப்புக்களைச் சந்தித்திருக்கின்றோம். ஆனாலும் இழந்த எமது உரிமைகளை நாம் விரைவில் அடைந்தே தீருவோம். இவ்வாறு தெரிவித்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம்.

வன்னி விழிப்புலன் அற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் எழுகை அமைப்பின் ஊடாக விழிப்புலனற்ற அங்கத்தவர்களைக் கொண்ட 130 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எழுகை அமைப்பானது போரால் பாதிக்கப்பட்ட பல்வேறு தரப்பினருக்கும் பல தரப்பட்ட உதவிகளைச் செய்து வருகின்றது.

வாழ்க்கையை ஒரு போராட்டமாக நடத்தி வரும் உங்களைப் போன்றவர்களுக்கு இந்த உதவிகள் பெரிதும் துணையாக இருக்கும் என நான் நம்புகிறேன்.

நாங்கள் கட்புலனை இழந்து நிற்கின்றோம். ஆனால் எங்களுடைய இலட்சியங்கள், நோக்கங்களை இழந்து விட முடியாது. எங்களுடைய மண்ணில் நாங்கள் நிம்மதியாக, பாதுகாப்பாக, சுதந்திரமாக, அனைத்து உரிமைகளைப் பெற்று வாழ வேண்டும். அதற்காக நாம் அறவழியில் போராட வேண்டும். தற்போது சர்வதேச நெறிமுறைகளுக்கு உட்பட்ட வகையில், சட்டதிட்டங்களுக்கு அமைவாக நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம். நிச்சயமாக எங்களுக்கு விடுதலை கிடைக்கும் - என்றார். (ஐ-55)

## வித்தியானந்த முதலிடம்

தமிழ் மாணவர்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் நோக்குடன் யாழ். விஞ்ஞான சங்கம் வருடம்தோறும் நடத்திவரும் வடமாகாண பாடசாலைகளுக்கிடையேயான விஞ்ஞானப் போட்டி கடந்த 15ஆம் திகதி யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

இதில் உயர்தர மாணவர்களுக்கான குழுப்போட்டியின் இறுதிச்சுற்றில் முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ் சென்பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவைகலந்துகொண்டன.

இதில் அதிக புள்ளிகளைப் பெற்று, வித்தியானந்தக் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (ஐ-102)



*முள்ளியவளை முறிப்புச்சந்தியிலிருந்து உடுப்புக்குளம் செல்லும் வீதியில் நிர்மாணிக்கப்பட்ட பாலம் நிர்மாணிக்கப்பட்ட சில நாள்களிலேயே சேதமாகியது. பாலம் பழுதடைந்து 2 வருடங்கள் கழிந்துவிட்ட நிலையிலும் இன்றுவரை மீள நிர்மாணிக்கப்படாமையினால் இப்பகுதி மக்கள் இடர்களை எதிர்கொண்டுள்ளனர். (ஐ-102)*

# மக்களைப் பாதுகாக்க ரயில் கடவைகள் தேவை

## கரைச்சிப் பிரதேச சபை உபதலைவர் கோரிக்கை

கிளிநொச்சி, ஏப்.3

இராணுவத்தினர் தமது முகாம்களுக்கு முன்பாக தடுப்புக்களை அமைத்து போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கின்றனர். ஆனால் ரயில் பாதையை குறுக்கறுக்கும் வீதிகளுக்கு பாதுகாப்பு கடவைகள் அமைக்க அதிகாரிகள் மறுத்து வருகின்றனர். இதனால் மக்கள் உயிராபத்துக்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார் கரைச்சிப் பிரதேச சபையின் உபதலைவர் வ.நகுலேஸ்வரன்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் குறைபாடுகளை எங்களிடம் மக்கள் முன் வைக்கின்றனர். எனவே அவற்றைத் தீர்த்து வைக்க வேண்டியதும், சுட்டிக்காட்ட வேண்டியதும் எமது கடமையாகும். அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னர் யாழ் தேவி ரயில் சேவை இடம் பெற்ற போது பயன்படுத்தப்பட்ட பாதை அமைப்பின் அடிப்படையிலேயே தற்போதும் ரயில் பாதை அமைக்கப்பட்டுள்ளது. ஆனாலும் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் உருவான புதிய வீதிகள் ரயில் பாதையைக் கடப்பதால் அவற்றுக்கு பாதுகாப்பு கடவைகள் இடப்படவில்லை. இதனால் மக்கள் உயிர் ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அபிவிருத்தி என்ற அடிப்படையில் கால மாற்றத்துக்கு ஏற்ப சிந்தித்துச் செயற்படுவதே பொருத்தமானது.

முறிகண்டியில் இருந்து கிளிநொச்சி நகரம் வரை 21 ரயில் கடவைகள் தற்போது உள்ளன. அவற்றில் 7 கடவைகளுக்கு மாத்திரமே பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எஞ்சியவை தமது வரைபடத்தில் இல்லை என ரயில்வே அதிகாரிகள் அசமந்தமாகக் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதனை விடுத்து மக்களின் பாதுகாப்புக் கருதி குறித்த வீதிகளுக்கு பாதுகாப்புக் கடவைகள் அமைக்கப்படவேண்டும் - என்றார். (ஐ)

# முக்கொம்பன் பாடசாலை மாணவர்கள் இடைவிலகல்

கிளிநொச்சி, ஏப்.3

பூநகரியில் முக்கொம்பன் கிராமத்தில் பாடசாலைகளில் இருந்து இடைவிலகும் மாணவர் தொகை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கிராமத்தில் 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. குறித்த கிராமத்தில் முக்கொம்பன் அ.த.க. பாடசாலை இயங்கிவருகின்றது. இந்தப் பாடசாலையில் இருந்தே 10 வரையான மாணவர்கள் இடைவிலகி வீடுகளில் நிற்பதாகவும் கூலித் தொழில்களில் ஈடுபடுவதாகவும் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். வறுமை காரணமாக குறித்த மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை எனவும் போக்குவரத்து மற்றும் வளப்பற்றாக்குறை காரணமாகவும் இவ்வாறான இடைவிலகல்கள் அதிகரிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்கள் பாடசாலைகளை விட்டு இடைவிலகும் சம்பவங்கள் குறித்து கிளிநொச்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பேரின்பநாயகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:

பாடசாலைகளில் இருந்து இடைவிலகும் மாணவர்களது விவரங்களை காலத்துக்குக் காலம் சேகரித்து வருகிறோம்.

குறித்த பாடசாலையில் இருந்து இடைவிலகிய மாணவர் குறித்தும் விவரங்கள் கிடைத்துள்ளன. விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ-18)

# 4.2 மில். ரூபா செலவில் வட்டக்கச்சிக்கு பொது நூலகம்

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட வட்டக்கச்சி பொதுநூலகம் 4.2 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட வட்டக்கச்சிபொது நூலகம், வட்டக்கச்சி பொதுச் சந்தை, ஆயுள்வேத வைத்திய சாலை, கரைச்சி பிரதேச சபையின்உப அலுவலகம்ஆகியவை கடந்த போர்க் காலத்தில் சேதமடைந்தன. தற்போது பொதுச் சந்தை புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் வட்டக்கச்சி பொது நூலகம் பிரதேச சபையின் 4.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் சுவிஸ்கரன் கருத்துத்தெரிவிக்கையில்:-

2014 ஆம் ஆண்டு வரவு- செலவுத்திட்டத்தில் பிரதேச சபை உறுப்பினர்களான செல்லத்துரை, சிவச்செல்வன் ஆகியோருக்கும் எனக்குமாக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 4.2 மில்லியன் ரூபா செலவில் இந்த நூலகம் அமைக்கப்படவுள்ளது. அதற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துள்ளார். (வ-55)

# முத்துஐயன்கட்டு நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் இம்முறை ஆயிரம் ஏக்கரில் மட்டுமே செய்கை

## கடும் வறட்சி காரணமாக இந்த நிலை

கிளிநொச்சி, ஏப். 3

முல்லைத்தீவு முத்துஐயன்கட்டு நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள குளங்களின் நீர் மட்டங்களைக் கருத்தில் கொண்டு இம்முறை 1000 ஏக்கர் நிலப்பரப்பில் சிறு போக நெற்செய்கை மற்றும் உபஉணவு பயிர்ச் செய்கை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது குறித்த கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதன்படி முத்துஐயன்கட்டுக்குளம், மருதமடுக்குளம், கணுக்கேணிக் குளம், தண்ணி முறிப்புக் குளம், மடவாளன்சிங்கன் குளம் ஆகிய குளங்களில் மிகக்குறைந்த அளவிலேயே நீர்மட்டம் உள்ளது. இதன் காரணமாகவே இவற்றின் கீழ் 1000 ஏக்கரில் செய்கையை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சில குளங்களின் கீழ் உபஉணவு பயிர்ச் செய்கை மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி மருதமடுக்குளத்தின் கீழ் 60 ஏக்கரில் நெற்செய்கையும் 51 ஏக்கரில் உபஉணவுப் பயிர்ச்செய்கையும், உடையார்கட்டு குளத்தின் கீழ் 303 ஏக்கரில் நெற்செய்கையும், கணுக்குளத்தின் கீழ் 100 ஏக்கரில் நெற்செய்கையும் 34 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச் செய்கையும் தண்ணிமுறிப்புக் குளத் தின் கீழ் 100 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச் செய்கையும், மட வாளசிங்கன்குளத்தின் கீழ் 50 ஏக்கரில் நெற் செய்கையும் 45 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச் செய்கையும் முத்துஐயன்கட்டுக் குளத் தின் கீழ் 200 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச்செய்கையும் மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 10 ஆம் திகதி குளங்களில் இருந்து தண்ணீர் திறக்கப்படும் என முத்துஐயன்கட்டு நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவித்தார்.

கடந்த வருடம் இந்தக் குளங்களின் கீழ் 14 ஆயிரம் ஏக்கரில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டது. கடும் வறட்சிகாரணமாக இந்த வருடம் 518 ஏக்கரில் நெற்செய்கையும் 530 ஏக்கரில்உபஉணவுபயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-55)

# பயணிகள் சிரமம்

கிளிநொச்சி, ஏப்.3

முல்லைத்தீவு ,மாந்தை கிழக்கு, கொல்லவிளாங்குளம் தொடக்கம் வன்னிவிளாங்குளம்வரையான அம்பாள்புரம் ஊடான வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் இருந்து வருவதால் அவ் வீதியைப் பயன்படுத்தும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்துக் குட்பட்ட கொல்லவிளாங்குளம், அம்பாள்புரம் 6ஆம் கட்டை, வன்னிவிளாங்குளம் உள்ளிட்ட பகுதிகளின் பிரதான வீதியாகக் காணப்படும் குறித்த வீதி இதுவரை புனரமைக்கப்படாதது மட்டுமன்றி இதனூடான போக்குவரத்துக்களும் சீராக இடம்பெறுவதில்லை.

இதனால் குறித்த வீதியூடாகப் பயணிக்கின்ற பொதுமக்களும் மேற்படி கிராமங்களைச் சேர்ந்த 600 இற்கும் மேற்பட்ட குடும்பங்களும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (வ-55)

# மாட்டிறைச்சி விற்க அனுமதி வழங்குக

## விற்பனையாளர் வேண்டுகோள்

கிண்ணியாவில் மாட்டிறைச்சி விற்பனை செய்வதற்கான அனுமதியை வழங்குமாறு மாட்டிறைச்சி விற்பனையாளர்கள் கோரி வருகின்றனர்.

கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக கிண்ணியாவில் மாட்டிறைச்சி விற்பனை செய்வது தடை செய்யப்பட்டிருந்தது. எனினும் மாடுகளுக்கு ஏற்பட்ட கோமாரி நோய்முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளமையால் மீண்டும் மாட்டிறைச்சியை விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்குமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

தற்பொழுது விற்பனைக்கு மாட்டிறைச்சி இல்லாததனால் கோழி இறைச்சி, மீன், இறால் ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன. (ச)

# கட்டுப்பாட்டை இழந்ததால் விபத்தில் சிக்கியது ஓட்டோ



விபத்தில் சிக்கிய ஓட்டோ


அக்கரைப்பற்று.ஏப்.3

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கரைப்பற்று, கல்முனை பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் ஓட்டோ ஒன்று விபத்துக்குள்ளானது.

அட்டாளைச்சேனை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னால் பிரதான வீதியைக் கடந்தபோது ஓட்டோவின் சாரதி தனது வாகனத்தின் கட்டுப்பாட்டை இழந்தமையால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

கல்முனையில் இருந்து பொத்துவிலுக்குப் பயணித்த வேளையிலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் ஓட்டோவுக்கு சேதம் ஏற்பட்ட போதிலும் அதில் பயணித்த 4 பேரும் எவ்வித காயங்களும் இல்லாமல் தப்பித்துக் கொண்டனர் என்று பொலிஸார் கூறினர். (ச)



திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றபோது மாதுமை அம்பாள் சமேத கோணேஸ்வரப் பெருமான் பக்தர்கள் புடை சூழ தேரில் வீதியுலா வந்து அருட்காட்சி கொடுத்தார். (ச-40)

# ஆசிரியர் விவரத்திரட்டை 93 வீதமானோர் ஏற்பு

## கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் கோரப்பட்ட ஆசிரியர் விவரத்திரட்டை 93 வீதத்துக்கும் அதிகமான ஆசிரியர்கள் பூர்த்தி செய்து அனுப்பி வைத்துள்ளமையின் மூலம் இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்று கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ. நிஸாம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் ஆசிரியர்களின் விவரங்களைத் திரட்டுவதற்காக வழங்கப்பட்ட படிவங்களை 93.6 வீதமான ஆசிரியர்கள் பூர்த்தி செய்து அனுப்பி வைத்துள்ளார்கள்.

ஒருசில ஆசிரியர் அவசியமான தொழிற் சங்கங்கள் குறிப்பிட்ட படிவத்தைப் புறக்கணிக்குமாறு கேட்டுக் கொண்டபோதிலும், ஆசிரியர்கள் அவர்களின் கருத்துக்கு செவிசாய்க்கவில்லை. இதன் மூலமாக ஆசிரியர்கள் அவசியமான தகவல்கள் திரட்டப்படுவதன் உண்மைத் தன்மையை உணர்ந்துள்ளார்கள் என்பது தெளிவாகின்றது.

ஆசிரியர்கள் இதனை ஒரு இனரீதியான செயற்பாடாகப் பார்க்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர்களின் எதிர்கால நலனை முன்னிட்டு, கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் தகவல் தளமொன்றை ஏற்படுத்துவதற்காக ஆசிரியர்களின் விவரங்களைத் திரட்டிக் கொண்டிருக்கின்றது. அதற்கு அமைவாக திணைக்களத்தினால் வழங்கப்பட்ட படிவங்களைப் புறக்கணிக்குமாறு ஒன்று ஆசிரியர் தொழிற் சங்கம் ஆசிரியர்களிடம் கேட்டுக் கொண்ட போதிலும், ஆசிரியர்கள் அதற்குச் செவி சாய்க்கவில்லை.

கிழக்கு மாகாணத்தில் உள்ள 17 வலயங்களில் 21 ஆயிரத்து 167 ஆசிரியர்கள் சேவையாற்றுகின்றனர். அவர்களில் 19 ஆயிரத்து 814 ஆசிரியர்கள் குறிப்பிட்ட படிவங்களை பூர்த்திசெய்து அனுப்பிவைத்துள்ளார்கள். மீதமாக உள்ள ஆசிரியர்கள் எதிர் வரும் புதன்கிழமை வரை படிவங்களைப்பூர்த்திசெய்து அனுப்புவதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது - என்றார். (ச)

# மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் மதிய உணவை நிறுத்த உத்தரவு

மட்டக்களப்பு.ஏப்.3

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்துக்குட்பட்ட சகல பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மதிய உணவு விநியோகத்தை உடனடியாக நிறுத்துமாறு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனால் இந்தக் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் உணவு தயாரித்து விநியோகம் செய்யும் சமுர்த்திப் பயனாளிகளான ஏழைகள் தாம் நட்டத்தை எதிர்கொண்டுள்ளதாகக் கூறுகின்றனர்.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திலுள்ள போஷாக்கு உணவு வழங்கும் சகல பாடசாலை அதிபர்களுக்கும் உணவுவிநியோகத்தை நிறுத்துமாறு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளேன் என்று உணவுப் போஷாக்கு இணைப்பாளர் எஸ்.எல்.எம். இப்றாஹிம் தெரிவித்தார்.

கணக்காளரிடமிருந்து கிடைக்கப்பெற்ற அறிவுறுதலுக்கமைய தாங்கள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்திருப்பதாக ஏறாவூர் கோட்டக்கல்வி அதிகாரி ஐ.எல். மஹ்ரூப் கூறினார். (ச)


2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி சிவமலர் செல்வரட்ணம்

திதி: சதுர்த்தி

தோற்றம் 25.08.1942 மறைவு 26.03.2012



அணையாத நினைவோடு
ஆண்டிரண்டு ஆனதுவோ – எம்
அன்னை.... நீ கண்ணயர்ந்து
காலம் கடந்தும் எம் விழிநீர்
சொரியுதம்மா! உங்கள்
நினைவுகளோடு
நீங்கள் விதைத்த ஆலவிருட்சம்
நாம்
எம் நிழலில் களைப்பாற முன்னர்
காலன் உங்களைக் களைந்ததன்
காரணம் தான் என்ன
அன்னையே... எம்
அன்புத் தெய்வமே...!
மழதந்து எமைவளர்த்தீர்கள்
பிணிதீர வழிசெய்து
களைதீர நீர் சொரிவீர்கள்
கலையாதம்மா உங்கள் நினைவு
மழசுமந்து நிற்கின்றோம் இன்றும்
உங்கள் நினைவுகளை என்றும்
எம் உள்ளமதில்.

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
ஏழாலை மத்தி, ஏழாலை.

(46346)(2.3.6)



5ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 17.09.1972



மகிமைக்குள் 03.04.2009

கிறிஸ்து எனக்கு ஜீவன்
சாவு எனக்கு ஆதாயம் (பிலிப் 1:21)

கடந்த 03.04.2009 புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மாத்தளன் வலஞர்மட பகுதியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது சிக்கி கர்த்தருக்குள் நித்திரையான

திருமதி பாஸ்கரன் விஜயகுமாரி

அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவாக
இன்று (03.04.2014) வியாழக்கிழமைஅவரை நினைவுகூரும்

கந்தசாமி பாஸ்கரன் (கணவர்),
பார்த்தன், ஜனேசன், சரிரோஸ் (பிள்ளைகள் - புதுக்குடியிருப்பு),
ஆறுமுகம் விஜயலட்சுமி (தாய்- [illegible]),
போதகர் ஆறுமுகம், விஜயநாதபிள்ளை (சகோதரர்கள் - நெதர்லாந்து),
ஆறுமுகம் ராஜநாதர் (நெதர்லாந்து),
வி.கலைவாணி (நெதர்லாந்து), ரா.கவிநிதா (நெதர்லாந்து) மச்சாள்மார்,
வி.போல்ராஜ், வி. பர்வராஜ் (மருமக்கள் - நெதர்லாந்து),
ரா.இம்மானுவேல், ரா. யோகனா (நெதர்லாந்து), ரா.யோவான்.

ஆண்டுகள் ஐந்து ஓடினாலும் உம் நினைவுகள் அகலவில்லை

ஆறுமுகம் ராஜகுமார், நெதர்லாந்து.

கர்த்தருக்குள் மரிக்கின்றவர்கள் இது முதல் பாக்கியவான்கள் (வெளி : 14.13

# அனைத்துலக சமூகத்துடன் ஜனாதிபதி பேச வேண்டும்

## ஐக்கிய தேசியக்கட்சி வேண்டுகோள்

கொழும்பு,ஏப்.3

அனைத்துலக சமூகத்துடன் இனியாவது இலங்கை ஜனாதிபதி பேச்சு நடத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி கோரியுள்ளது.

இதுகுறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்ததாவது:-


காமினி ஜெயவிக்கிரம பெரேரா

மிகப்பெரிய பிரச்சினைகளுக்கு நாடு முகம் கொடுத்துள்ள நிலையில், நிலைமைகள் கையை மீறிச் செல்வதைத் தடுக்க வேண்டும் என்றால், இலங்கை ஜனாதிபதி அனைத்துலக சமூகத்துடன் இப்போதாவது பேச வேண்டும். இல்லாவிட்டால் அதன் விளைவுகளை மக்களே அனுபவிக்க நேரிடும். தேர்தல்களில் வென்றுள்ளதால், ஐ.நா. தீர்மானங்களைப் பற்றித் தாம் கவலைப்படப் போவதில்லை என்று மஹிந்த ராஜபக்ஷ சொல்கிறார்.

எனவே இப்போது கூட ராஜபக்ஷ இறங்கி வராது போனால், ஐ.நா. விசாரணையின் முடிவில், பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும். அது இலங்கையின் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிக்கும்.

எமது ஏற்றுமதியில் 85 வீதத்தை ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்காவுமே கொள்வனவு செய்கின்றன.

இந்தியாவும், சீனாவும், எமது ஏற்றுமதியில் 6 வீதத்தைத் தான் பங்களிப்பு செய்கின்றன.

தன்னிறைவுப் பொருளாதாரத்தைக் கொண்டதும், இலங்கையை விடச் சக்தி வாய்ந்ததுமான ஈரானே, அமெரிக்கா மற்றும் நட்பு நாடுகளின் தடைகளைச் சமாளிக்க முடியாமல் போராடிக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் இலங்கையின் நிலை குறித்து யோசித்துப் பார்க்க வேண்டும்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் முக்கியமான பரிந்துரைகளை ராஜபக்ஷ அரசு நடைமுறைப்படுத்தியிருந்தால், அனைத்துலக விசாரணை கோரும் தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டிருக்காது.

இந்தத் தீர்மானம் போரின் இறுதிக்கட்டத்தை மட்டும் முன்னிலைப்படுத்திக் கொண்டு வரப்படவில்லை.

போருக்குப் பின்னர் தொடரும் சிவில் சமூகம் மீதான உரிமை மீறல்கள், ஊழல், சிறுபான்மை மதத்தவர்கள் மீதான தாக்குதல்கள் எல்லாவற்றினாலும் தான் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது- என்றார். (ச)

# நீர்மின் உற்பத்தி பாதித்தாலும் மின்சாரத் துண்டிப்பு இல்லை

## மின்சார சபை தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.3

நீர் மின் உற்பத்தி வெகுவாக குறைவடைந்துள்ளபோதும் எந்தக்காரணம்கொண்டும்மின்சார விநியோகம் துண்டிக்கப்பட மாட்டாது என்று மின்சார சபை தெரிவித்துள்ளது.

தடையின்றி பாவனையாளர்களுக்கு தொடர்ந்து மின்சாரம் வழங்கப்படும் என்று மின்சார சபை பிரதி பொது முகாமையாளரும் மின்சார சபை பேச்சாளருமான செனஜித் தசநாயக்க தெரிவித்தார்.

அதேவேளை மக்கள் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நீரேந்துப் பகுதிகளில் கடந்த சில மாதங்களாக மழை வீழ்ச்சி குறைந்துள்ளதால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளன. இந்தநிலையில் நீர் மின் உற்பத்தி 15 வீதமாக குறைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

**வறட்சியான காலநிலை ஏற்பட்டபோதும் தடையின்றி மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

எரிபொருள் மூலமே கூடுதலாக மின் உற்பத்தி செய்யப்படுகிறது. அதனால் மின்சார சபைக்கு அதிக செலவாகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

வறட்சியான காலநிலை ஏற்பட்டுள்ள போதும் தடையின்றி மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விரைவில் நுரைச்சோலை இரண்டாம் கட்டத்தினூடாக மின் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்ட பின் எரிபொருள் செலவு குறைவடையும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# மாணவர்களுக்கு விளக்கமறியல்

கொழும்பு,ஏப்.3

கைது செய்யப்பட்ட ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் 14 பேரையும் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுகேகொட நீதிவான் நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் அவரது அலுவலகம் மீது தாக்குதல் மேற் கொண்டதான குற்றச்சாட்டில் இந்த மாணவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

**சந்தேக நபர்களை நுகேகொட நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்திய போதே விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.**

இந்த தாக்குதல் சம்பவம் கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் நுகேகொட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ச)

# இலங்கைக்கு ரோந்துப் படகை கையளித்தது ஆஸ்திரேலியா

## கடற்படைத் தளபதியிடம் ஒப்படைப்பு


ரோந்துப் படகொன்று இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ்அட்மிரல் ஜெயநாத்திடம் ஆஸ்திரேலியாவின் கெய்ன்ஸ் கடற்படைத் தளத்தில் வைத்து ஞாயிற்றுக்கிழமையன்று கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதர் அட்மிரல் திசார சமரசிங்க , ஆஸ்திரேலியாவில் இருந்து இலங்கைக்கு ரோந்துப் படகை கொண்டு வரவுள்ள இலங்கைக் கடற்படைக் குழுவினர், ஆஸ்திரேலிய சுங்க மற்றும் எல்லைப் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கொழும்பு,ஏப்.3

இலங்கைக் கடற்படைக்கு முதலாவது ரோந்துப் படகை ஆஸ்திரேலியா ஞாயிற்றுக்கிழமை கையளித்துள்ளது.

கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்க இலங்கைக்கு வந்திருந்த ஆஸ்திரேலியப் பிரதமர் ரொனி அபோட், இரண்டு ரோந்துப் படகுகளை அன்பளிப்பாக வழங்குவதாக அறிவித்திருந்தார்.

அகதிகள் படகுகளைக் கட்டுப்படுத்தவும், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளைப் பலப்படுத்தும் வகையிலும் இந்தப் படகுகளை அன்பளிப்பாக வழங்க ஆஸ்திரேலியா முன்வந்திருந்தது.

அதற்கமைய முதலாவது படகு ஆஸ்திரேலியாவின் கெய்ன்ஸ் கடற்படைத் தளத்தில் வைத்து இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ்அட்மிரல் ஜெயநாத் கொலம்பகேயிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதர் அட்மிரல் திசார சமரசிங்க, ஆஸ்திரேலியாவில் இருந்து இலங்கைக்கு ரோந்துப் படகை கொண்டு வரவுள்ள இலங்கை கடற்படைக் குழுவினர், ஆஸ்திரேலிய சுங்க மற்றும் எல்லைப் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த ரோந்துப் படகு இலங்கைக் கடற்படையால், ஆழ்கடல் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

ஐங்கரன் மீடியா சொலூஷன் பெருமையுடன்
வழங்கும்
SharmilaTravels
யாழ்
CREAM SODA
கோடைத் திருவிழா - 2014
எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டையொட்டி ஐங்கரன் மீடியா சொலூஷன் ஏற்பாடு செய்யும் கோடைத் திருவிழா 2014 ஐ முன்னிட்டு ஏப்ரல் 5ஆம் திகதி முதல் பின்வரும் விளையாட்டு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.
❖ சைக்கிளோட்டம்

❖ மரதன்

❖ உதைபந்தாட்டம்

❖ கிரிக்கெட்

❖ கரப்பந்தாட்டம்

இவ்வருடத்தில் இலங்கையின் மாபெரும் கோடைத் திருவிழாவான இந்நிகழ்வில் இடம்பெறவுள்ள மேற்படி விளையாட்டுப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பங்களை மோகன் சவுண்ட்ஸ் பெரிய தம்பிரான் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும் அல்லது 077 703 0234 - மோகன் உடன் தொடர்பு கொள்ளவும்.
மேலும் யாழ் மண்ணில் முதல் தடவையாக தென்னிந்திய இசைக் குழுவினரின் பிரமாண்டமான இசைக் கச்சேரியுடன் ராகம்ஸ் இசைக் குழுவினரின் இசைக்கச்சேரி மற்றும் சிறுவர்களுக்கான களியாட்ட நிகழ்வுகளும் ஏப்ரல் 19ஆம், 20ஆம் திகதிகளில் யாழ். தொழிநுட்பக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.
ஐங்கரன் மீடியா சொலூஷன் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அனுசரணைகளை வழங்கவும். வியாபார காட்சியறையில் பெற்றுக்கொள்ளவும் நீங்கள் அழைக்க வேண்டியது. விஜேந்திரன்
அனுமதி இலவசம்
(வி/12773/763)
077 303 0301

உங்கள் ஆலய திருவிழாக்களில்...
அகில உலகப் புகழ்
ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரை
அழைத்து மகிழ விரும்புகிறீர்களா?
(30.07.2014 வரை)

தொடர்பு: வில்லிசைச் சக்கரவர்த்தி கலைமாமணி, டாக்டர் எஸ்.எஸ். சர்மா (குருஜி) -சங்கானை, முருகமூர்த்தி கோயிலடி.
(46293)(5.6.4)
T.P:077 706 4247

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## விட்டேனா பார் என்ற போக்கு சாதகமான பிரதிபலனைத் தருமா...?

இலங்கை தொடர்பான அமெரிக்கத் தீர்மானத்துக்கு அனைத்துலக மட்டத்தில் ஜெனிவாவில் அவர்களால் அதனைச் செய்ய இயலுமானால், எங்களால் இதனைச் செய்ய முடியாமலா போகும் என்ற தோரணையில், இலங்கை அரசு சூட்டோடு சூடாகச் செயற்பட்டுள்ளது. அதாவது, அமெரிக்கத் தீர்மானத்துக்கு ஆதரவு திரட்டிய விஸ்வநாதன் உருத்திரகுமாரன் தலைமையிலான நாடு கடந்த தமிழீழ அரசு, கத்தோலிக்க மதகுருவான எஸ்.ஜே. இமானுவேல் தலைமையிலான உலகத் தமிழர் பேரவை உட்பட 15 தமிழர் அமைப்புகள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்படுகின்றன எனக்கூறி அவற்றைத் தடைசெய்வதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்பு இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட மிகமிகக், காட்டமானதும், பிரதானமானதுமான நடவடிக்கையாக இது கருதப்படுகிறது.

போரின் இறுதிப்பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஐ.நாவின் சுயாதீன விசாரணை உட்பட பல விடயங்களை ஜெனிவாத் தீர்மானம் வலியுறுத்துகிறது. ஆனால் இலங்கை அரசு இந்த விசாரணையை எப்படி எதிர்கொள்வது என்பதில் கவனம் செலுத்தவில்லை.

இலங்கை தொடர்பான தீர்மானத்துக்குப் பழிவாங்கும் நடவடிக்கைதான் வெளிநாடுகளில் இயங்கும் தமிழர் அமைப்புகளுக்கு விதிக்கப்படும் தடை. இந்தத் தடை தொடர்பான விவரங்கள் இன்னும் ஒருவார காலத்தில் வெளியிடப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அறிவித்திருக்கிறார்.

தான் செயற்படுத்த உள்ள தடையை நியாயப்படுத்தும் விதத்தில், 2001 செப்ரெம்பர் 28இல் ஐ.நா.பாதுகாப்புச்சபையில் நிறைவேற்றப்பட்ட 1,373 ஆவது தீர்மானத்துக்கு இணங்க இலங்கை அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது. பயங்கரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கையில் நாடுகள் ஒன்றுக்கு ஒன்று ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று பாதுகாப்புச்சபையின் தீர்மானம் கூறுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் மற்றும் 15 புலம்பெயர் தமிழர் அமைப்புகளுக்கும் தடைவிதிக்கும் இலங்கை அரசு, பாதுகாப்புச் சபையின் தீர்மானத்துக்கிணங்க இந்த அமைப்புகள் செயற்படும் நாடுகள் இலங்கையுடன் ஒத்துழைக்கவேண்டும் என்று எதிர்பார்க்கலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையின்போது செயற்படுத்தப்பட்ட பயணத்தடை, நிதி முடக்கல் உட்பட்ட அழுத்தங்களைச் செயற்படுத்த இலங்கை அரசு முயற்சிக்கலாம். இந்த நடவடிக்கை புலம்பெயர் தமிழர் அமைப்புகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான மோதல் மேலும் அதிகரிக்கவே வழிவகுக்கும்.

குறிப்பிட்ட அமைப்புகள் இயங்கும் பிரதான நாடுகள் இலங்கைக்கு எதிரான அமெரிக்கா, கனடா, பிரிட்டன், பிரான்ஸ் என்பதை இலங்கை அரசு மறந்துவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது. இலங்கை அரசு விதிக்கும் தடையை அந்த அமைப்புகள் இயங்கும் நாடுகளில் செயற்படுத்த முடியாது போகலாம்.

இந்த அமைப்புகள் போட்டிக்கு இலங்கை அரச தலைவர்களுக்கு பயணத்தடை, சொத்து முடக்கம் போன்றவற்றைத் தாம் செயற்படும் நாடுகளில் வலியுறுத்த முடியும். ஏற்கனவே பிரிட்டிஷ் அரசுக்கு இது தொடர்பாக அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரிட்டனின் இல்போர்ட் நோர்த், மிட்செம் ஆகியவற்றைச் சேர்ந்த பிரிட்டிஷ் கன்ஸர்வேட்டிவ் தொழிற்கட்சி எம்.பிக்கள் இதற்கு ஆதரவு வழங்கி வருகின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் ஜூலை மாதம் ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகருக்கு பயணம் செய்யத் திட்டமிட்டுள்ளார். பொதுநலவாய அமைப்பின் தலைவர் என்ற ரீதியில் கிளாஸ்கோவில் நடைபெறும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ள அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 2010 டிசெம்பரில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் ஜனாதிபதி ஆற்றவிருந்த உரையைத் தடுப்பதில் புலம் பெயர் தமிழர் அமைப்புகள் தமது நோக்கத்தை நிறைவேற்றின. அதே பாணியில் கிளாஸ்கோவில் ஜனாதிபதிக்கு எதிராகப் பெருமளவில் ஆர்ப்பாட்டம் நடத்த, அவை திட்டமிட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், ஆர்ப்பாட்டம் நடத்துவதற்குத் தமது பிரஜைகளுக்கு உரிமை உண்டு என்று கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதர் ஜோன் ரன்கின் சமீபத்தில் கருத்து வெளியிட்டுள்ளார். ஆகவே இந்த ஆர்ப்பாட்டத்தை பிரிட்டன் தடைசெய்யப்போவதில்லை. புலம்பெயர் தமிழர் அமைப்புகள் மீதான அரசின் தடை செயற்படுத்தப்படும்போது இந்த அமைப்புகளின் நடவடிக்கைகள் மேலும் பலமுறும் சாத்தியம் உண்டு.

2009 போர் முடிவடைந்த பின்னர் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகின்றன. போர்க்குற்றம் தொடர்பாக அனைத்துலக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன. அமெரிக்கத் தீர்மானத்தில், ஐ.நாவின் சுயாதீன விசாரணை என்ற அம்சம் இடம்பெற்றதற்கு புலம்பெயர் தமிழர் அமைப்புகளே பிரதான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்த அமைப்புகளுடன் சமரசம் பேசுவதற்கு இலங்கை அரசு ஆரம்பத்தில் முயற்சி செய்தது. ஆனால் முயற்சி தோல்வியடைந்தது. ஆனால் அந்தத் தோல்வியை தாங்கிக் கொள்ள இயலாத நிலையில், ஜெனிவாப் பெறுபேற்றை உள்வாங்கிக் கொள்ள முடியாத பின்னணியில், மேற்குறித்த அமைப்புகளைத் தடைசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இலங்கைத் தமிழர் செறிந்து வாழும் நாடுகளில் செல்வாக்குடன் இயங்கும் அந்த அமைப்புகள் மீதான தடை, அனைத்துலக அரங்கில் இலங்கை மீது 'பூமராங்' போன்று திரும்ப வந்து தாக்கவும் காலாக அமையலாம். விட்டேனா பார் என்ற போக்கு சாதகமான பிரதிபலனைத் தருமா...?

# இராணுவத் தலையீடுகள்

## வடபகுதியில் மீண்டும் ஆரம்பித்துள்ளன

வடக்கில் பொது நிர்வாகம் முற்றுமுழுதாக செயற்படுத்தப்படுவதாகவும், மீள்குடியேற்றம் மற்றும் மீள் கட்டுமானப் பணிகளில் பாதுகாப் புப் படையினர் ஈடுபடுத்தப்படுவது தற்போது படிப்படியாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை அரசு கூறிவருகிறது. இலங்கை அரசின் இந்தப் பரப்புரைகள் முற்றிலும் பொய்யான வையாகும்.

இவ்வாறு அனைத்துலக நெருக்கடிகளுக்கான ஆய்வுக்குழு International Crisis Group அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இலங்கையில் 2009இல் உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் அதன் வடக்கு மாகாணத்தில் அதிகரித்துள்ள இராணுவமயமாக்கல் தொடர்பாக அனைத்துலக நாடுகள் மிகவும் விசனமடைந் துள்ளன. வடக்கில் குவிக்கப்பட்டுள்ள அதிகளவான படையினர், வடக்கு மாகாண ஆட்சியில் இராணுவத்தின் மிக ஆழமான ஈடுபாடு போன்றவை நாட்டில் நிலையான சமாதானத்தை எட்டுவதற்கு மிகவும் அவசியமான ஜனநாயக நிறுவகங்களை மீள ஒழுங்குபடுத்துவதில் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளன.

வடக்கில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தை அகற்ற வேண்டும் என இலங்கை அரசின் மீது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை உட்பட பல்வேறு அனைத்துலக அமைப்புக்கள் அழுத்தம் கொடுத்து வருகின்ற நிலையில், வடக்கில் இராணுவத்தினரின் எண்ணிக்கை கணிசமானளவு குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை அரசு தெரிவித்து வருகிறது. வடக்கில் பொது நிர்வாகம் முற்று முழுதாக செயற்படுத்தப்படுவதாகவும், மீள்குடியேற்றம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளில் பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்படுவது தற்போது படிப்படியாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை அரசு கூறிவருகிறது. இலங்கை அரசின் இந்தப் பரப்புரைகள் முற்றிலும் பொய்யானவை யாகும்.

வடக்கில் தற்போதும் மிக அதிகளவான படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதை பல்வேறு தரவுகள் சுட்டி நிற்கின்றன. வடக்கில் வாழும் பொதுமக்களின் நிர்வாகங்களில் இலங்கைப் படையினர் தலையீடு செய்வதுடன், மக்களின் அன்றாட வாழ்வை படையினர் கட்டுப்படுத்துகின்றனர் என்பதையும், கண்காணிக்கின்றனர் என்பதையும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் படையினரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஆதாரப்படுத்துகின்றன.

மே 2009இல் வடக்கில் நிறுத்தப்பட்டிருந்த 70,000 பாதுகாப்புப் படையினர் தற்போது 12,000 இராணுவ வீரர்களாகக் குறைக்கப்பட்டுள்ளனர் எனவும், வடக்கு முழுவதிலும் பத்திற்குக் குறைவான இராணுவ முகாங்களே உள்ளதாகவும், ஜனவரி 19 அன்று, இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரையொன்றில் குறிப்பிட்டிருந்தார். இதற்கு இரண்டு நாள்களின் பின்னர், மே 2009இல் வடக்கில் கிட்டத்தட்ட 120,000 ஆகக் காணப்பட்ட படையினரின் எண்ணிக்கை 2013இன் இறுதியில் 80,000 ஆக அதாவது மூன்றில் ஒரு பங்கால் குறைக்கப்பட்டதாக ஜெனிவாவில் இராஜதந்திரிகள் மத்தியில் உரையாற்றிய போது இலங்கை அதிபரின் செயலர் லலித் வீரதுங்க குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை அதிபரும் அவரது செயலரும் வடக்கில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கை தொடர்பில் முரண்பட்ட தகவலைக் கூறியுள்ளனர். போரின் முடிவில் வடக்கில் 300,000 இராணுவ வீரர்கள் இருந்தனர் எனவும் வீரதுங்க குறிப்பிட்டமை போன்று 200,000 பேர் இருக்கவில்லை எனவும் இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அறிவித் திருந்தார். 2009 இலும் அதற்குப் பின்னரும் வடக்கில் நாட்டின் மொத்தப் படையினரின் மூன்றில் இரண்டு பங்கு படையினர் குவிக்கப்பட்டிருந்தனர் என்பதே உண்மையாகும்.

இதனை அடிப்படையாகக் கொண்டு வீரதுங்கவின் அறிவிப்பை நாங்கள் ஏற்றுக்கொண்டாலும் கூட, வடக்கில் தற்போது 120,000 படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

வீரதுங்க தனது உரையில் இராணுவத்தினர் எண்ணிக்கையை மட்டுமே குறிப்பிட்டிருந்தார். ஆனால் அவர் குறிப்பிட்ட எண்ணிக்கையை விட வடக்கில் கடற்படை, வான்படை, சிறப்புப் படை உட்பட பல்வேறு துறைகளில் ஆயிரக் கணக்கானோர் நிலை கொண்டுள்ளனர். இவற்றை எல்லாம் கணக்கிடும் போது வடக்கில் வாழும் ஐந்து பொது மக்களுக்கு ஒருவர் என்கின்ற விகிதம் காணப்படுகிறது. இந்த விகிதமானது தற்போது காஷ்மீரில் நிறுத்தப்பட்டுள்ள படையினரின் எண்ணிக்கை மற்றும் செச்செனியாவில் இரண்டாம் உலகப் போரின் போது நிறுத்தப்பட்டிருந்த படையினர் மற்றும் வடஅயர்லாந்தில் போர் இடம்பெற்ற வேளையிலும், அல்ஜீரியா மீதான பிரான்சின் ஆக்கிரமிப்பின் போதும் இவ்வளவு அதிக எண்ணிக்கையில் படையினர் குவிக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் இலங்கையின் வடக்கில் போர் முடிவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்த நிலையிலும் கூட, ஐந்து பொது மக்களுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் படையினர் குவிக்கப்பட்டுள்ளமை மிகவும் உயர்ந்த விகிதமாகும்.

வடக்கில் குவிக்கப்பட்டுள்ள படையினரின் எண்ணிக்கை தொடர்பில் முரண்பாடு காணப்படுகின்றமை புதிய விடயமல்ல. யாழ். மாவட்டத்தில் இராணுவத்தின் எண்ணிக்கை மிகக் கணிசமான அளவில் குறைக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது 15,600 படை வீரர்கள் மட்டுமே அங்கு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ 17.06.2012இல் அறிவித்திருந்தார். ஆனால் 09.07.2012 அன்று யாழ்ப்பாணத்தின் பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் சிவில் இராணுவ ஒருங்கணைப்பு நிலையத்தின் இணையத்தளத்தில் யாழ். மாவட்டத்தில் 35,000 இற்கும் மேற்பட்ட படையினர் தனது கட்டளையின் கீழ் செயற்படுவதாக அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. இதனால் கோத்தபாய ராஜபக்ஷவின் அறிவிப்பு தொடர்பில் பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டன. இந்த முரண்பாடு சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து ஒருங்கிணைப்பு நிலையத்தின் இணையத் தளத்திலிருந்து இப்புள்ளி விவரம் நீக்கப்பட்டது. போருக்குப் பின்னான இலங்கையின் வடக்கில் பிரசன்னமாகியிருந்த படையினரின் எண்ணிக்கை தொடர்பில் மீண்டும் மீண்டும் தவறான தகவல்கள் வழங்கப்பட்டதானது அனைத்துலக சமூகத்தின் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்திய அதேவேளையில் வடக்கில் ஜனநாயகத்தை மீள நிலைநாட்டுவதற்காக இலங்கை அரசினால் நேரடியாக எடுக்கப்படும் முயற்சிகள் தொடர்பிலும் முரண்பாடான நிலையைத் தோற்றுவித்துள்ளது.

போர் முடிவடைந்ததன் பின்னர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பாதுகாப்புப் படைகளின் தலைமையகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மக்களின் பொருளாதார அபிவிருத்தி தொடக்கம் அவர்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குதல் மற்றும் சட்ட ஒழுங்குகளை நிலைநாட்டுதல் போன்றவற்றில் இராணுவத்தினர் தலையீடுகளை மேற்கொள்கின்றனர் என்பதை இவ்வாறான புதிய இராணுவத் தலைமையகங்கள் அமைக்கப்பட்டமை சுட்டிநிற்கின்றன.

இதற்கும் மேலாக, கிளிநொச்சி படைத் தலைமையகத்தின் கீழ் கடற்படை, வான்படை, சிறப்பு அதிரடிப்படை மற்றும் காவல் துறையின் துணை ஆயுதப் பிரிவும் உள்ளன. கிளிநொச்சி படைத் தலைமையகத்தைச் சேர்ந்த வீரர்கள் சைக்கிள்களில் நாளாந்த ரோந்துப் பணிகளில் ஈடுபடுகின்றனர்.

இவற்றுக்கப்பால் கிளிநொச்சியில் உள்ள பாதுகாப்புப் படையினர் கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் மக்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். உள்ளூர்வாசிகள் பலர் இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்குத் தகவல் வழங்குநர்களாகச் செயற்படுவதாக நெருக்கடிகள் குழுவால் கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்ட நேர்காணலின் மூலம் அறியப்படுகிறது.

இது கிளிநொச்சி வாழ் மக்கள் மத்தியில் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. பொதுமக்களைக் கட்டுப்படுத்துதலும் கண்காணித்தலும் என்பது இராணுவத்தின் முதன்மையான நோக்காகக் காணப்படுவதால் மக்கள் அசௌகரியங்களைச் சந்திக்க வேண்டியேற்பட்டுள்ளது. கண்காணிப்புக் கருவிகளை விடுதிகளில் பொருத்த வேண்டும் என இராணுவத்தினர் தமக்கு அறிவுறுத்தியுள்ளதாக பணியாளர் ஒருவர் தெரிவித்திருந்தார். கிளிநொச்சியிலுள்ள சாதாரண விடுதிகளில் கூட இவ்வாறான கண்காணிப்புக் கருவிகளைப் பொருத்த வேண்டும் என கட்டளையிடப்பட்டுள்ளதானது வடக்கில் சமாதானத்தைக் கட்டியெழுப்பி விட்டதாக இலங்கை கூறுவது தொடர்பில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மக்களின் வாழ்வின் ஒவ்வொரு விடயத்திலும் இராணுவத்தினரின் கண்காணிப்பு தொடர்கிறது. இது இலங்கை அரசின் நல்லிணக்க முயற்சியைக் கேள்விக்குள்ளாக்குகிறது.

இவ்வாறான இராணுவத் தலையீடுகள் வடக்கில் தொடர்கின்ற போதிலும், பொது மக்களின் விவகாரங்களில் இராணுவம் தலையிடுவது நிறுத்தப்பட்டுள்ளதாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளை இலங்கை அரசு நம்பவைக்க முயல்கிறது. போர் முடிவடைந்து ஐந்து ஆண்டுகள் முடிவடைகின்ற நிலையிலும் மக்களுக்கான கட்டுமானத் திட்டங்களில் இராணுவத்தின் கண்காணிப்பும் தலையீடும் தொடர்கிறது. கிளிநொச்சியில் இந்திய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் வீட்டுத் திட்டங்கள் தொடக்கம், கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் தாதியர்களுக்கான விடுதிகள் அமைத்தல் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் வீதிகள் அமைக்கும் திட்டங்களிலும் இலங்கை இராணுவத்தினர் ஈடுபடுவதாக கிளிநொச்சி படைத்தலைமையகத்தின் இணையத் தளத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. பொது மற்றும் தனியார் துறைகளுக்குத் தேவையான ஆளணிகளை ஒழுங்குபடுத்தும் திட்டம் தொடர்பாகவும் படைத்தலைமையகத்தின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தொழிற் சந்தையில் அதிகாரம் மிக்க இராணுவத்தின் தலையீடு காணப்படுவது தொடர்பாக நெருக்கடிகள் குழு கேள்வி எழுப்பியிருந்தது.

கிளிநொச்சி படைத்தலைமையகம் முற்றிலும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளமை தெளிவான ஒன்றாகும். அண்மையில் இடம் பெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது கிளிநொச்சி படைத் தலைமையகம் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியால் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் பரப்புரை நிகழ்வுகளின் ஒளிப் படங்களைத் தனது இணையத் தளத்தில் பதிவு செய்துள்ளது. இதன்மூலம் இது எவ்வளவு தூரம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. வடக்கில் அதிகளவான படையினர் குவிக்கப்பட்டுள்ளதை மறுக்கின்ற இலங்கை அரசின் முயற்சிகள் உள்நாட்டிலும் அனைத்துலக அரங்கிலும் உள்ள பார்வையாளர்களை அதிருப்தியடையச் செய்துள்ளன. வடக்கில் வாழும் மக்களின் ஒவ்வொரு விடயங்களிலும் இலங்கைப் படையினர் தமது கட்டுப்பாட்டையும் கண்காணிப்பையும் மேற்கொள்கின்றனர் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமாகும். இதன்விளைவாக வடக்கில் மீளிணக்கப்பாடு மற்றும் நிலையான சமாதானத்தை எட்டுவதென்பது மிகவும் கடினமான ஒன்று என்பது புலப்படுகிறது.

நன்றி:- புதினப் பலகை – நித்தியபாரதி

செ.கிரிதரன்

# வடமாகாணத்தில் வர்த்தக நடவடிக்கைகள்

அண்மையில் வெளிவந்த பத்திரிகைச் செய்திகளில் வடமாகாணத்தில் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பெரும் இடத்தைப் பிடித்திருந்தன.
போரின் பின்னர் இந்தப் பிரதேசத்தில் வர்த்தக முறைமைகள் பெரிய மாற்றங்களைச் சந்தித்துள்ளன. இங்கு பெரியளவிலும் சிறிய அளவிலும் தொழில் செய்த பலர் இங்கிருந்து வெளியேறிவிட்டார்கள். சிலர் மரணமடைந்து விட்டார்கள். இந்த நிலையில் புதியவர்கள் பலர் தற்போது வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.
வெளிநாடுகளில் வசிப்பவர்கள் இங்குள்ள தமது உறவினர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வியாபாரத்தை மேற்கொள்ளுமாறு கூறிப் பணத்தை அனுப்பி வைக்கின்றனர். இது மிகவும் சிறந்த செயற்பாடு தான். ஆனாலும் நிர்வாகத் திறமையின்மையால் இவர்களின் நடவடிக் கைகள் தோல்வியைச் சந்திக்கின்றன.
2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வங்கிகளைப் பொறுத்த மட்டில் எண்ணற்ற கிளைகளை வடமாகாணம் முழுவதும் திறந்துள்ளன. முன் னர் வங்கிக் கிளையொன்றை ஆரம்பிக்க வேண்டுமெனில் ஓர் ஆய்வை மேற்கொள்வார்கள்.
இதன்போது ஏற்கெனவே அங்கு இருக்கும் வங்கிகளின் எண்ணிக்கை, அந்தப் பகுதியின் சனத்தொகை, அவர்களின் வருமானம் , தொழில் முயற்சியின் வகை, நிலத்தின் தன்மை, காலநிலை, பாடசாலைகளின் எண்ணிக்கை, மதங்களைப் பின்பற்றுவோரின் எண்ணிக்கை, சுற்றுலா மையங்களின் விவரங்கள், புதிய வங்கி ஒன்றை ஆரம்பிப்பதால் ஏற்படக்கூடிய தாக் கங்கள் என்பன கருத்தில் கொள்ளப்பட்டு பல்வேறு மட்டத்தில் அலசி ஆராயப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்படும்.
போட்டித் தன்மையின் காரணமாக ஒவ்வொரு வியாபாரியையும் பல வங்கிகளின் உத்தியோகத்தர்கள் சில வேளைகளில் ஒரே வங்கியின் வெவ்வேறு கிளை உத்தியோகத்தர்கள் சந்தித்து தங்களிடம் கடன்பெறுவது இலகுவானது, இலாபகரமானது என்று கூறி தம் பக்கம் ஈர்க்க முயற்சிக்கிறார்கள்.
வியாபாரியோ ஒருவரையும் மனத் தாங்கலுக்கு உட்படுத்தக் கூடாது என்று நினைத்து எல்லா வங்கிகளிலும் கடனைப் பெறுகிறார்.
இங்கேதான் தவறு ஆரம்பிக்கிறது. ஒருவர் கடனைப் பெறுவதற்குத் தகுதி உள்ளவரா என அறிவதற்குப் பல்வேறு வகையான கணிப்பீட்டு முறைகள் காணப்படுகின்றன.
கடன் வழங்கும் போதும், பெறும் போதும் முக்கியமான மூன்று விடயங்களை வங்கியாளர்களும் வர்த்தர்களும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.
அவை:-


### கடனின் நோக்கம்

திருப்பிச் செலுத்தும் தகைமை
வழங்கப்படும் பிணை அல்லது பொறுப்பு என்பனவாகும்.

வங்கியாளர்கள் தெரிவித்த கருத்தின் பிரகாரம் கடன்கள் செலுத்தப்படாமல் இருப்பதற்குரிய காரணங்களாகப் பலவற்றைக் கூற முடியும். இதில் கடனாகப் பெற்ற பணம் உரிய தேவைக்குப் பயன்படுத்தப்படாமை முதலிடம் வகிக்கின்றது. இந்தப் பணம் பெரும்பாலும் வேறு தேவைகளுக்கே பயன்படுத்தப்படுகிறது.
அதேவேளை வங்கிகளும் தவணைப் பணம் கணிக்கப்படும் முறை, வட்டி எவ்வாறு கணிக்கப்படுகிறது, தாமதக் கட்டணம் எவ்வாறு அறவிடப்படுகிறது போன்ற விடயங்களை கடன் பெறுபவர்களுக்கு உதாரணங்கள் மூலம் விளக்கிக் கூற வேண்டும்.
ஈடு வைக்கப்படும் கட்டடம், காப்புறுதி செய்யப்பட்டு அதற்குரிய கட்டணம் கிரமமாகச் செலுத்தப்படல் வேண்டும். தவறுமிடத்து இந்தத் தொகையும் கடன் தொகையாக அனுமானிக்கப்படும் என்பது பலருக்குத் தெரிவதில்லை.

### திருப்பிச் செலுத்தும் திறன் :

'இப்போது கடனை எடுப்போம் பிறகு பார்ப்போம்' என்று நினைத்தால் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியதுதான்.
பொறுப்பு :-
வங்கிகள் கடன் வழங்கும்போது பொறுப்பை (Security) எதிர்பார்க்கும். அது தனிப்பட்டவர்களின் பிணை, வாகனம், காணி கட்டடம் என்பவற்றின் மீதான ஈடு, ஆயுள் காப்புறுதிப் பத்திரம் போன்ற பலவாகும்.
பொதுவாக காணி, கட்டடங்களின் மதிப்பிட்ட பெறுமதியின் 50 வீதம் அல்லது 60 வீதம் வரைக்கும் வங்கிகள் கடன் வழங்குகின்றன.
ஆனால் தேவையைப் பொறுத்தே கடன் தொகை தீர்மானிக்கப்பட வேண்டும். சொத்தின் பெறுமதியின் 50 வீதம் கொடுத்துவிட வேண்டியது தான் என்று தீர்மானிக்கலாகாது. தேவைக்கு மேல் கடன் வழங்கினால் வீணான விதத்தில் பணத்தை செலவழித்துவிட்டு திருப்பிச் செலுத்துவதற்கு திண்டாடுவர்.
மேலும் காணிகளின் பெறுமதி எப்போதும் மாறாது இருப்பதோ அல்லது உயர்ந்து கொண்டு செல்வதோ இல்லை.
பொறுப்பின் பெறுமதியை மட்டும் நம்பி வங்கிகள் கடன் வழங்கக்கூடாது. பெறுமதியானவை அரசியல், புவியியல், வானிலை, காலநிலை மக்களின் நாகரிக மாற்றம் போன்ற பல காரணிகளால் மாறுபட்டுக் கொண்டிருக்கும்.
தற்போது வர்த்தகர்களால் தெரிவிக்கப்படும் குறைகளிலொன்று தென்பகுதியில் இருந்து வரும் லொறிகள் நேரடியாக கிராமப்புறங்களில் உள்ள கடைகளுக்குப் பொருள்களை விநியோகிக்கின்றன என்பதாகும். இன்று எழுந்துள்ள இந்தப் பிரச்சினை தவிர்க்க முடியாதது. இதற்கு மாற்று வழிகளைத்தான் தேட வேண்டும்.



எமது பிரதேசத்தில் உற்பத்தியாகும் பொருள்களை அறிந்து அவற்றை உரிய முறையில் சந்தைப்படுத்தும் போது இங்குள்ள உற்பத்தியாளர்களுக்கும் வர்த்தர்களுக்கும் சிறந்த இலாபம் கிடைக்க வழியுண்டு.
உதாரணமாக பனங்கட்டி, பனாட்டு, புழுக்கொடியல், பனையோலையால் செய்யப்பட்ட கைவினைப் பொருள்கள், கருவாடு போன்ற பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள், திராட்சை இரசம், நெல்லி இரசம், வெற்றிலை போன்றவற்றை தென்னிலங்கையிலிருந்து வருபவர்கள் பெருமளவு கொள்வனவு செய்கிறார்கள். இதனால் கிடைக்கும் வருமானம் முழுக்க முழுக்க எமது பிரதேசத்திலேயே தக்க வைக்கப்படும்.
தொடர்ந்தும் நாம் ஏனைய பகுதிகளில் இருந்து வரும் பொருள்களை வாங்கி விற்பதுதான் எமது தொழில் என்று இருக்கக்கூடாது.
சமீப காலங்களில் மதுபான உற்பத்தியாளர் முதல் தளபாட விற்பனை செய்பவர் வரையில் எப்படியாவது தமது பொருள்களை யாழ்ப்பாணத்தில் விற்றுக் காசாக்கிவிடலாம் என்றுதான் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வட பகுதியில் இருப்பவர்கள் தாராளமாகப் பணம் செலவு செய்து எல்லாவற்றையும் வாங்குவார்கள் என்று இங்கு தமது கிளைகளையும் கடைகளையும் ஆரம்பிக்கிறார்கள். வங்கிகளும் இதற்கு விதிவிலக்கல்ல.
அதே போன்ற நிறுவனங்களை வட பகுதியில் அமைப்பதற்கும் உரிய தரப்பினர் முயற்சி எடுக்க வேண்டும். இந்தியாவில் பெங்களூர் என்ற இடம் இவ்வாறான விடயங்களுக்குப் பெயர் பெற்றது.
மாறிவரும் வர்த்தக சூழ்நிலைகளுக்கேற்ப எமது நடவடிக்கைகளையும் மாற்றினால்தான் எமது இனம் தப்பிப்பிழைக்க முடியும்.
சார்ள்ஸ் டார்வினின் கூர்ப்புத் தத்துவம் இதையே கூறுகின்றது. வர்த்தகத்துக்கும் இது பொருந்தும்.

## இவர்களைத் திருத்துவது யார்..?

வாசகர் நிமுகம்

நான் கடந்த 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.10 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து குப்பிளான் செல்லும் தனியார் மினி பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். மினி பஸ் சுன்னாகம் ஜெற்மோட்டர்ஸ் நிறுவனக் கட்டடத்தைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தது. அப்போது மதவடிக்குச் சிறிது தூரத்துக்கு முன்னால் அந்த பஸ் திடீரென நிறுத்தப்பட்டது. பிரயாணிகளுக்குக் காரணம் புரியவில்லை.
அப்போது பஸ்ஸின் இடது புறமாக சைக்கிளில் வந்த சிறுவன் ஒருவன் சைக்கிளை நிறுத்தி விட்டு நின்று கொண்டிருந்தான். சிறுவன் வீதி ஒழுங்கு முறையை மீறி வந்தானா? அல்லது போக்குவரத்துக்கு ஏதும் இடைஞ்சலாக நடந்து கொண்டானோ என்பது தெரியவில்லை.
மினிபஸ்ஸின் நடத்துநர் அந்தச் சிறுவனைப் பார்த்துக் காது கொடுத்துக் கேட்க முடியாத கெட்ட வார்த்தைகளால் பலமுறை திட்டித் தீர்த்தார். பஸ்ஸில் பெரியோர்கள், இளம் பெண்கள், குடும்பப் பெண்கள் பலர் இருந்தனர். அவர்களை அந்த நடத்துநர் கண்டு கொள்ளவில்லை. படு கேவலமான வார்த்தைகளை அள்ளி வீசினார்.
சாரதியும் தனது ஆசனத்தில் இருந்து இறங்கிச் சென்று அந்தச் சிறுவனை அடிப்பது போன்று பாவனை செய்தார்.
மினிபஸ்ஸில் இருந்த ஆண்கள், பெண்கள் மட்டுமன்றி வீதியோரத்தில் காணப்பட்ட வீடுகளில் இருந்த பெண்களும் நடத்துநரின் வாயிலிருந்து வந்த நாகரீகமற்ற வார்த்தைகளைக் கேட்டு கூச்சத்துடன் நெளிந்ததைக் காண முடிந்தது.
எனது இருக்கைக்கு பின்னால் அமர்ந்திருந்த பெரியவர்கள் இருவர் நடத்துநரின் பேச்சால் மிகவும் அசௌகரியப்பட்டதை அவர்களின் பேச்சில் இருந்து அவதானிக்க முடிந்தது. அவர்களில் ஒருவர் "உந்த பண்பற்றவனுக்கு தாய், சகோதரிகள் இல்லையா? உப்பிடிக் கீழ்த்தரமாகக் கதைக்கிறான்...." என்றார். அதற்கு மற்றவர் "முந்தியெண்டால் உவனுக்கு பச்சை மட் டையடி கிடைத்திருக்கும்..." என்று பெருமூச்சு விட்டார்.
பெண்களாகிய நாங்கள் ஆண்களின் முகத்தைப் பார்க்க முடியாமல் வெட்கித் தலைகுனிந்து இருந்தோம். வேறு என்னதான் செய்வது...? பண்பாடு இல்லாத இவ்வாறானவர்களை யார்தான் திருத்துவது...? மேலும் குப்பிளான் செல்லும் பஸ்களில் ஏறும் மது வெறியர்கள் அட்டகாசம் புரிவதால் பெண்கள் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர். ஆனால் சாரதியோ அல்லது நடத்துநரோ இவற்றை ஒருபோதுமே கவனத்தில் கொள்வதில்லை. பயணிகள் முறையிட்டால், தனி வாகனத்தை வாடகைக்கு அமர்த்தி வந்தால், பிரச்சினை இல்லையே என அலட்சியமாக பதிலளிக்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

*எம்.றோஸ்மேரி, மல்லாகம்.*

## தவக்காலச் சிந்தனை



### தவக்காலம் வசந்தத்தின் ஆரம்பம்

ஒவ்வோர் ஆண்டும் நாம் கடைபிடிக்கும் இந்த வழிபாட்டுக் காலத்தைப் பற்றிய நமது எண்ணங்களை இந்தச் சிந்தனையின் மூலமாகச் சிறிது ஆழப்படுத்த முயல்வோம். தவக்காலத்தை ஒரு வசந்த காலமாக எண்ணிப் பார்ப்பது ஓர் அழகான எண்ணமாகும். புதுமையான எண்ணமாகும். பொதுவாகத் தவக்காலம் என்றதும் சாம்பல். சாக்குத்துணி. சாட்டையடி என்று சோகமான, துயரமான அடையாளங்கள் எமது மனதை நிரப்பும். ஆனால். தவக்காலம் வசந்தத்தைக் கொண்டுவரும் புதியதொரு ஆரம்பம் என்ற பொருளிலும் பாப்பது நல்லது. வசந்தம் கேட்பதற்கும் அழகான சொல். ஆனால் அந்த வசந்தம் வருவதற்கு முன்பாக வேதனைக்குரிய மாற்றங்கள் நடைபெற வேண்டும். மாற்றங்கள் என்றதும், முற்றிலும் அழிந்துபோன ஒன்று மீண்டும் உயிர்பெறுவதும் ஒரு மாற்றம்தானே.
மழைக் காலம் முடிந்து இலையுதிர் காலம் ஆரம்பிக்கும் போது மரம், செடி, கொடி போன்றவற்றில் உள்ள இலைகள் உதிர்ந்து ஒரு வெறுமையான தோற்றம் காணப்படும். பிறகு வசந்த காலம் ஆரம்பிக்கும் போது மீண்டும் அந்த மரம் செடி கொடிகளில் புதிய தளிர்கள் தோன்ற ஆரம்பிக்கும். அப்போது அவைகள் அனைத்தும் செழிப்பாகக் காணப்படும். அதுபோல நாமும் இந்த தவக்காலத்தில் எம்மை எமது செப, தவ முயற்சிகளால் நம்மில் உள்ள பழைய கெட்ட பழக்கங்களை உதறி விட்டு புதிய மனிதர்களாய் மாற முயற்சி செய்வோம்.
எமது வாழ்விலும் வசந்த காலத்தை ஆரம்பித்து வைக்கும் ஒரு ஆரம்பப் படியாகவே இந்தத் தவக் காலத்தை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

*எஸ். மரியசேவியர், அளவெட்டி.*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: கருத்து வேற்றுமை நீங்கும். இதனால் வாழ்க்கையில் சந்தோஷம் அதிகரிக்கும். துக்கமும், துன்பமும் நீங்கும். தடைப்பட்ட காரியங்களில் இருந்த தடைநீங்கி சாதகமாக நடந்து முடியும்.



**இடபம்**: எதிர்காலம் தொடர்பாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். திறமை வெளிப்படும். மனக்கவலை அகலும். நிம்மதியும், சுகமும் அதிகமாகும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். பலவகையிலும் பிறர் உதவி கிடைக்கப் பெறுவீர்கள்.



**மிதுனம்**: புத்திசாதுர்யம் அதிகரிக்கும். யாருக்கும் வாக்குறுதிகள் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பொறுப்புகள் ஏற்கும் போது கவனமாக இருப்பது நல்லது.



**கடகம்**: அனுபவபூர்வமான அறிவுத்திறன் கூடும். குடும்பத்தில் இருப்பவர்களுடன், அனுசரித்துச் செல்வது நன்மை தரும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரிடும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.



**சிங்கம்**: உங்களின் செயற்றிறன் கண்டு, சிலர் பொறாமைக் குணத்துடன் பேசுவர். சாந்த குணத்துடன் விலகுவது நல்லது. தொழிலில் உருவாகிற இடையூறுகளைச் சரி செய்வீர்கள். சிறு அளவில் பணக்கடன் பெறுகிற நிலை உண்டு.



**கன்னி**: கௌரவம், அந்தஸ்து உயரும். எதிர்பார்த்த உதவிகள் மற்றவர்கள் மூலம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் மந்தமான போக்குக் காணப்பட்டாலும் பணவரவுக்கு குறைவு இருக்காது. தொழிலில் கூட்டாளிகளுடன் அனுசரித்துச் செல்வது நன்மைதரும்.



**துலாம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாகப் பணிகளைக் கவனிப்பது நல்லது. வீண் அலைச்சலும் கூடுதல் உழைப்பும் இருக்கும். அந்தஸ்து உயரும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.



**விருச்சிகம்**:மனவருத்தம் நீங்கும். சகல காரியங்களும் சாதகமாக நடந்து முடியும். மரியாதையும், கௌரவமும் அதிகரிக்கும். சகல தரப்பினரிடம் இருந்தும் ஆதரவு கிடைக்கும். நன்மை தீமைகளைப் பற்றி கவலைப்படாமல் தலை நிமிர்ந்து நடப்பார்கள்.



**தனுசு**: தொழில் வியாபாரம் முன்னேற்றமடையும். போட்டிகள் குறையும். தொழில் தொடர்பான தகராறுகள் நீங்கும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நிர்வாக திறமை வெளிப்படும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.



**மகரம்**: சிலர் உங்களை ஏளனமாக பேசுவர். மனதில் சஞ்சலம் கொள்ளாமல், சொந்தப் பணியில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழிலில் திட்டமிட்ட இலக்கு கால அவகாசத்தில் நிறைவேறும். சேமிப்புப் பணம் செலவுக்கு பயன்படும்.



**கும்பம்**: நீங்கள் செய்யும் காரியங்களுக்கு சகல தரப்பினரிடம் இருந்தும் ஆதரவு கிடைக்கும். சொத்துத் தொடர்பான பிரச்சினைகள் நீங்கும். தனித்திறமை வெளிப்படும். சக ஊழியர்களிடம் இருந்த கருத்து வேற்றுமை நீங்கும்.



**மீனம்**: எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சூரியன் சஞ்சாரத்தால் பகைகள் விலகும். அடுத்தவர்களால் இருந்த பிரச்சினைகள் சரியாகும். பணவரவு எதிர்பார்த்தபடி கிட்டும். தர்மசிந்தனை அதிகரிக்கும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

## நாளை

**பங்குனி-21 வெள்ளிக்கிழமை | 04.04.2014**

திதி: பஞ்சமி மு.இ.11.55 வரை
நட்சத்திரம்: ரோகினி
பி.இ.04.35 வரை

சுபநேரம்: 06.10-07.40 வரை
இராகுகாலம்:.10.40-12.10 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...

## பிராணன்



சுடப்பொருள் ஐந்து நிலைகளுக்கு உள்ளாகிறது என்பதே படைப்புத் தத்துவம். ஐந்து நிலையாவன : ஆகாச நிலை, ஒளிநிலை, வாயு நிலை, திரவ நிலை, திட நிலை என்பனவாம். இவை அனைத்தும் மிகமிக நுண்ணிய ஆகாசம் என்ற மூல பூதத்திலிருந்து தோன்றியவை.

பிரபஞ்சத்தில் நிலவும் சக்தியின் பெயர் பிராணன் ஆகும். பஞ்ச பூதங்களில் உறையும் சக்தி இதுவே. பிராணனை உபயோகிக்கும் சிறந்த கருவி மனமே. மனம் கருவி. மனத்தின் பின்னால் இருக்கும் ஆன்மா பிராணனைப் பற்றிக் கொள்கிறது. பிராணனே உலகத்தை இயக்கும் சக்தி; ஒவ்வோர் உயிர் வடிவிலும் அதைக் காணலாம். இந்த உடல், நிலையற்றது. மனமும் அது போலவே. இரண்டும் கூட்டுப்பொருளாதலால் அழிந்தே ஆக வேண்டும். இவற்றின் பின்னால் நிற்கும் ஆன்மா அழிவதில்லை. பிராணனைக் கட்டுப்படுத்தி இயக்கும் சுத்த அறிவே ஆன்மா. ஆனால் நம்மைச் சுற்றிக் காணப்படும் அறிவு என்றும் பூரணமானதல்ல. பூரண அறிவு பெற்றவர்களே கிறிஸ்து போன்ற அவதார புருஷர்கள். அறிவு எப்போதுமே தன்னை வெளிப்படுத்த விரும்புகிறது. ஆகவே பல்வேறு நிலைகளில் வளர்ச்சி பெற்ற உடல்களையும், மனங்களையும் படைக்கிறது. உண்மையில் – அடிப்படையில் – சகல உயிர்களும் சமம்.

மனம் மிக நுண்ணியது. பிராணன் வெளித்தோன்றும் கருவி மனமே. ஆற்றல் வெளிப்பட சடப்பொருள் தேவை.

இந்தப் பிராணனை எவ்வாறு பயன்படுத்துவது என்பதுதான் அடுத்த கேள்வி. நாம் எல்லோரும் அதை உபயோகிக்கிறோம். ஆனால் எவ்வளவு வருந்தத்தக்க முறையில் அதை வீணாக்குகிறோம்! அனுபவத்தின் விளைவே அறிவு, என்பதே ஆரம்ப நிலையின் முதல் கொள்கை. ஐம்புலன்களுக்கு அப்பால் இருப்பதையும் அனுபவித்தால்தான் அவை நமக்கு உண்மையாகும்.

# பிரிட்டனில் ஆரம்பமாகும் பகலொளி சேமிப்பு

பிரிட்டனில் கோடைக்காலம் வருவதால் பிரிட்டன் கடிகாரங்களில் ஒரு மணி நேரம் முன்னோக்கி வைக்கும் வழக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் கோடை நேரம் என்று குறிப்பிடப்படும் கால வேளையில் கடிகாரங்களை ஒருமணிநேரம் முன்னோக்கி வைக்கும் வழக்கம் உள்ளது. வரும் ஒக்ரோபர் வரை கடைப்பிடிக்கப்படும் இவ்வழக்கத்துக்கு பகலொளி சேமிப்பு நேரம் என்ற மற்றொரு பெயரும் உள்ளது.

இந்த வழக்கம் வருவதற்கான காரணத்தை ஆராய்கையில் கடந்த 1907 ஆம் ஆண்டு பிரிட்டனில் வாழ்ந்து வந்த வில்லியம் வில்லேட் என்ற குதிரைச் சவாரியாளர் அதிகாலை நேரங்களில் அங்குள்ள காடுகளின் வழியே நீண்ட சவாரிகளை மேற்கொள்ளுவார்.

**பிரிட்டனில் கோடை நேரம் என்று குறிப்பிடப்படும் காலவேளையில் கடிகாரங்களை ஒரு மணி நேரம் முன்னோக்கி வைக்கும் வழக்கம் உள்ளது.**

அவர் பெரும்பான்மையான மக்கள் உறங்கிக் கொண்டிருக்கும் நேரங்களில் பயணிப்பதால் பகல் வெளிச்சம் வீணாவதைத் தடுக்கும் முறையில் இத்தகைய நேர மாற்றத்தை அந்தக் கால கட்டத்திலேயே அறிமுகப்படுத்தியதாகத் தெரிய வந்துள்ளது.

இந்த ஒரு மணி நேர கூடுதல் சூரிய வெளிச்சத்தால் நிறைய சுகாதார நலன்கள் ஏற்படும் என்று கூறப்படுகிறது.

குறிப்பாகப் பருவகாலப் பாதிப்பினால் ஏற்படக்கூடிய மனச் சோர்வு நீங்குவது மட்டுமல்லாமல் நேர அதிகரிப்பால் ஒருவரது ஆற்றல்கள் சேமிக்கப்படுவதாகவும், போக்குவரத்து விபத்துகள் மற்றும் குற்றங்கள் போன்றவை குறைவதாகவும் இந்த நேர மாற்றத்தின் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் மக்களுக்கு இந்த நேர மாற்றத்தினை நினைவு கூரும் வகையில் 'ஸ்பிரிங் ஃபார்வேர்ட், ஃபால் பேக் வார்ட்' என்ற சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

# சுடோக்கு


## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | 5 | | 4 | 3 | 7 |
| | 5 | 6 | | | 7 | | | 2 |
| 3 | 4 | | 1 | 2 | | 8 | | |
| 6 | 2 | | | | | | 8 | |
| | | 3 | | | | 6 | | |
| | 8 | | | | | | 4 | 9 |
| | | 8 | | 7 | 1 | | 2 | 4 |
| 1 | | | 5 | | | 7 | 6 | |
| 5 | 7 | 4 | | 6 | | | | 1 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 4 | 2 | 5 | 7 | 6 | 9 | 3 |
| 9 | 6 | 5 | 4 | 3 | 1 | 7 | 2 | 8 |
| 3 | 2 | 7 | 9 | 8 | 6 | 1 | 5 | 4 |
| 2 | 4 | 1 | 8 | 7 | 9 | 3 | 6 | 5 |
| 7 | 3 | 8 | 1 | 6 | 5 | 9 | 4 | 2 |
| 5 | 9 | 6 | 3 | 2 | 4 | 8 | 7 | 1 |
| 4 | 1 | 2 | 6 | 9 | 3 | 5 | 8 | 7 |
| 6 | 5 | 3 | 7 | 4 | 8 | 2 | 1 | 9 |
| 8 | 7 | 9 | 5 | 1 | 2 | 4 | 3 | 6 |





## சமூகச் சீர்கேட்டுக்கான காரணம்

# மாறிவரும் கலாசாரம்

இன்றைய நவீன காலத்தில் மாறி வரும் கலாசாரம்தான் சமூக சீர் கேட்டுக்கான காரணமாக அமைந் துள்ளது. முன்னைய காலப் பெண் கள் கோயிலுக்குச் செல்லும்போது சேலை, பாவாடை, தாவணி, முழுப் பாவாடை என அணிந்து செல்வார் கள்.
ஆனால் இன்றைய காலத்தில் பெண் கள் ஜீன்ஸ், ரொப் அணிந்து கோயி லுக்குச் செல்கின்றனர்.
இன்றைய காலத்தில் தமக்கே உரித்தான கலாசாரங்களை மறந்து மேலைத்தேய பண்பாடு, கலாசா ரங்களை ஆண்கள், பெண்கள் கடைப்பிடித்து வருகின்றனர். அத னால் நாட்டில் சமூகச் சீர்கேடுகள் அதிகரித்துள்ளன.
பெண்கள் திருமணமானவர்கள், திருமணமாகாதவர்கள் என்ற பாகு பாடு தெரியாத அளவுக்குத் தமது உடைகளை அணிந்து செல் வதனால் சமூகச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன.
முன்னைய காலத்தில் கீழ்ப்படி தல், ஒழுக்கம் எனப் பல அம் சங்களைக் கொண்டிருந்த இளைஞர் கள் தற்காலத்தில் வேறுபட்ட விதமாகச் செயற்படுகின்றனர். பெரியோர்களை மதித்து நடப்பது இன்றைய காலத்தில் இளையோர் மத்தியில் குறைவடைந்து காணப்படுகிறது.
எனவே இன்றைய காலத்தில் மாறிவரும் கலாசார மோகங்களில் மூழ்கியுள்ள இளையோர்களால்தான் சமூகத்தில் சீரழிவுகள் இடம்பெற்று வருகின் றமை யாவரும் அளித்த ஒன்றேயாகும்.

*உ.தர்சிகா, வல்வெட்டி*

## விமர்சனம்




**பெரியோர்களை மதித்து நடப்பது இன்றைய காலத்தில் இளையோர் மத்தியில் குறைவடைந்து காணப்படுகிறது.**

## வறுமை

கடவுள் விதித்த விதியால்
பூமியில் பிறந்து விட்டோம்
வறுமையின்
வலியறியா வயதினில்
பசிக் கொடுமையால்
பாலுக்காய் ஏங்குகின்றோம்
பிறக்க வைத்த கடவுள்
தருவதற்கு மறந்து விட்டான்
வறுமையின் கோரப்பிடியில்
உயிருக்கு ஊசலாடும்
உறவுகள் ஆயிரம்
நிமிடத்திற்கும், செக்கனுக்கும்,
பிரிகின்றன
பசியின் சாபத்தால்
துள்ளித் திரியும் மழலைகள்
கண்களை மூடிக் கொள்கின்றன
வேதனையும், சோதனையும்
ஏழைக்கு மட்டுமா?
கடவுள் பணம் படைத்த
வம்சத்திலா பிறந்தான்
ஏழை எம்மை
எளியவராய் வதைப்பதற்கு!

*எஸ்.ரணேஸ், வவுனியா*

## இளைஞர்களே சிந்தியுங்கள்



நாளைய உலகின்
கற்ற சிற்பிகள்
நம் இளைஞர்கள்!
என்கின்றனர் சான்றோர்
அன்றிலிருந்து இன்றுவரை!

ஆன்றோர் வார்த்தை
அருமருந்துதான் அனைவருக்கும்
இருந்தபோதும் இன்று அது
ஐயப்பாடாகவே இருக்கிறது!

ஞாலத்தில் இளைஞர்கள்
காலத்தின் தேவை மறந்து
மங்கையொடு மதுவின் மேல்
இன்பம் கொண்டு
தன்னிலை மறந்து
தவழ்கின்றார்
போதையினில்!

ஆதலினால் நிதமும் இங்கே
அவர்களது உழைப்புடனே
ஆன்றோர் சேர்த்த சொத்தும்
அழிவடைந்தே செல்வதனால்
வீடுகளில் தினம் தினமும்
சண்டைகளும் சச்சரவுகளும்
வளர்ந்தே!
நாளடைவில் அவை
கொலை கொள்ளையென
விலைவாசி போல் அதிகரித்தே
நாட்டின் அபிவிருத்தியையும்
நலிவடையச் செய்து விடுகின்றன

ஆதலினால் இளைஞர்களே!
சற்றே சிந்தியுங்கள்
சிறப்புடனே எம்மை
பாரினிலே பெற்று வளர்த்திட்ட-நம்
அன்னையும்
அன்னை மண்ணும்
அழலாமா?
எமது இத்தீய செயல்களினால்!

*நிஜாத், அல்வாய்*



## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் இளவல்கள் வட்டம் என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங் கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங் களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-......................................
முகவரி :-......................................

......................
திகதி

......................
கையொப்பம்

**இளவல்கள் வட்டம்** ,
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



நீங்களும் எழுதலாம்....

**சமூகச் சீர்கேட்டுக்கு காரணம்**

**தகவல் தொழில்நுட்பமா? மாறி வரும் கலாசாரமா?**

உங்கள் கார ணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## நிதானமும் விடாமுயற்சியும் இருந்தால் வாழ்க்கையில் முன்னேற வழி கிட்டும்

ஒழுக்கம், சுயமதிப்பு போலவே நிதான மும், விடாமுயற்சியும், வாழ்க்கையில் முன்னேற உதவக் கூடிய இரு கருவிகள்.
இந்த வளரிளம் பருவத்தில் நம்மிடம் இருக்க வேண்டிய கடமைகள், பொறுப்பு கள், அவை மீது ஆற்ற வேண்டிய செயல் மற்றும் அதற் குண்டான செயல் திட்டங் களை வடிவமைக்க நிதானம் தேவை.
இந்தப் பருவத்தவர்கள் தம்மிடம் நிதான குணத்தை வளர்த்துக் கொண்டால் தம் மிடம் காணப்படும் விடயங்களை ஆராய்ந்து, சரியானவைகளைத் தேர்ந்தெடுத்து அவற் றைப் பின்பற்ற மனதளவில் மாற்றங்களை நல்ல முறையில் கையாண்டு எளிதாக வென்று விடலாம்.



# வடக்கு, கிழக்குச் சிறுவர்களுக்கு கண்கள் தொடர்பான நோய்கள்

## சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு,ஏப்.3
வடக்கு, கிழக்கைச் சேர்ந்த சிறுவர்கள் பலர் கண் தொடர்பான நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
எனவே இந்த இரண்டு மாகாணங்களினதும் வைத்தியசாலைகளுக்கு கண் நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கக் கூடிய வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

**நோய்களினால் பாதிக்கப்பட்டவர்க ளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக மாகாணங்களின் வைத்தியசாலைகளது வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளன.**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் கண் நோய்களால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.
நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக மாகாணங்களின் வைத்தியசாலைகளது வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளன என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச)

**உதவியாளர் தேவை**

தனியார் வைத்திய நிலையமொன்றுக்கு உதவியாளர் ஒருவர் தேவை.
தொ.பே: (46347) (45.6)
078 913 5060, 077 132 9310

**வீடு வாடகைக்கு**

திருநெல்வேலி, பலாலி வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:
077 937 2357/077 937 2354 (46348) (12.3.6)

## சிந்தை என்பது என்ன?

அவாக்களின் ஒன்றிணைப்பே சிந்தையாகும். இன்றைய ஆத்மீக ஆவலர்கள், பக்தர்கள் தமது ஆசைகளைப் பெருக்குகிறார்களேயொழிய அவற்றைக் குறைக்கவோ, அழிக்கவோ முயற்சிக்கிறார்களில்லை.
எமது ஆசைகளை நீக்கினால் ஒழிய நாம் தன்னை அறிதல் என்பதை அறிய மாட்டோம். அடையமாட்டோம்.
நாம் எம்மைத் தனித்தனியே மாற்றிக் கொண்டால் தான், உலகை மாற்றலாம்.
உலகம் வேறொன்றுமல்ல. தனிப்பட்டோரது இணைப்பேயாம். தனியொருவனை மாற்றுதலே உலக மாற்றத்திற்கு அடிப்படையாயுள்ளது.
ஆகவே, மனிதன் முதலில் தன்னுள் இருக்கும் தீயதை நீக்க வேண்டும். தன்னுள் புனிதமான குணங்களை வளர்க்க வேண்டும்.



நன்றி:தெய்வீகம் மலரும் பொழுது

**சாயி சிந்தனை**

**University of Jaffna – Sri Lanka**
**Faculty of Management Studies & Commerce**

**Postgraduate Diploma in Management (PGDM)**
**Leading to the Degree in Master of Business Administration (MBA)**
**Intake I – 2014/2015**

The Faculty of Management Studies & Commerce of the University of Jaffna is pleased to announce the commencement of the Postgraduate Diploma in Management (PGDM) for the academic year 2014/2015 and invites applications for the admission from suitability qualified candidates. The course is offered commencing from May 2014 and will be offered in modular form. Details of the courses can be obtained from the Faculty of Management Studies & Commerce or via the internet on the Faculty website: ***http://www.jfn.ac.lk/maco***

**ELIGIBILITY REQUIREMENTS**

1. Graduates in any discipline in any recognized University.
OR
2. Professional Qualifications with five years experience.
OR
3. Any other qualifications and/or experience, which would be acceptable to the selection board with the approval of the Senate.

**PROGRAMME STRUCTURE**

Structure - Semester based Course Unit System
Semester duration - Each semester extends for 20 weeks
Duration - Two years (Full time)
Medium of instruction - English

**COURSE FEE**

Total course fee would be LKR Three hundred and fifty thousand per student. This can be paid in two installments as given below:

| Detail | Year 1 (PGDM) | Year 2 (MBA) |
|---|---|---|
| Registration / Renewal | LKR 10,000 | LKR 10,000 |
| Tuition fee | LKR 175,000 | LKR 125,000 |
| Examination fees | LKR 15,000 | LKR 15,000 |
| **Total** | **LKR 200,000** | **LKR 150,000** |

**Application Fees: LKR 2000/=**

**APPLICATION PROCEDURE**


Application form & Paying in voucher can be downloaded from the Faculty website at ***http://www.jfn.ac.lk/maco*** or obtained from **Dean, Faculty of Management Studies & Commerce, University of Jaffna, Thirunelveli, Jaffna**, by sending a self addressed stamped envelope 100 x 225mm in size. **The closing date for applications will be 30.04.2014.** Please forward complete application form to the above address and indicate **"Application for MBA"** in the top left hand corner of the envelope.

**Registrar**
**University of Jaffna, Sri Lanka** (சி/13136)(3.6.4)

# தேர்தல் முடிவுகளை ஏற்கவே முடியாது

## சீலரத்ன தேரர் கூறுகிறார்

கொழும்பு,ஏப்.3
மாகாண சபைத் தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஜனசெத பெரமுனவின் தலைவர் பத்தர முல்லே சீலரத்ன தேரர் தெரிவித்தார்.
ஜனசெத முன்னணி கடந்த திங்கட்கிழமை மாலை ஏற்பாடு செய்திருந்த ஊடகவி யலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.



*சீலரத்ன தேரர்*

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஜனசெத முன்னணிக்கு வாக்களித்த மற்றும் வாக்களிக்காத அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
மக்கள் சில கட்சிகளுக்கு வாக்களித்து சிலரை தெரிவு செய்துள்ளனர். அவர்கள் சிறு கட்சிகளைத் தெரிவு செய்துள்ளனர். அவர்களினால், வேலை வாய்ப்புக்களோ அல்லது பிரதேசத்தில் ஏதேனும் வேலைகளையோ முன்னெடுத்துச் செய்து முடிக்க இயலுமா என்ற கேள்வி எழுகின்றது.
இந்த தேர்தல் பெறுபேறுகளை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசிய கட்சி ஆகியவற்றுக்கான வாக்கு வங்கிகளும் தற்போது வீழ்ச்சி கண்டு வருகின்றன- என்றார். (ச)

# கோபி உள்ளிட்ட குழுவை கைது செய்ய பொலிஸ் குழு

கொழும்பு.ஏப்.3
விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர் கோபி உள்ளிட்ட உறுப்பினர்களை கைது செய்ய மேலதிக பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார்.
மேலதிக பொலிஸ் குழு தனது தேடுதல் வேட்டையைத் தொடங்கியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.



*அஜித் ரோகண*

இந்தநபர்கள் தொடர்பில் தகவல் அறிந்தால் தெரிவிக்குமாறு பொலிஸார் பொது மக்களிடம் கோரி வருகின்றனர்.
அரச விரோத துண்டுப் பிரசுரம் விநியோகம் தொடர்பில் கோபி மீது பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.
விடுதலைப்புலிகள் அமைப்பை மீளக் கட்டியெழுப்பி அதற்கு தலைமை வகிக்க கோபி உள்ளிட்ட குழுவினர் முனைவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ச)

# வாக்காளர் கருணையே எனக்கு கிடைத்த வெற்றி

## ஹிருணிகா தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.3
எனது தந்தைக்குக் கிடைக்காத அளவுக்கு எனக்கு வாக்குகள் கிடைத்தமை வாக்காளர்களின் கருணையே என்று கொழும்பு மாவட்டத்தில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்று மேல் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தந்தை இல்லாத பெண் என்ற ரீதியில் பெரும்பாலானோர் எனது பக்கம் பார்வையைச் செலுத்தியுள்ளனர். அதன்மூலமே இந்த வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது.
என்னால் இயன்ற அளவுக்கு மக்களுக்குச்சேவைசெய்யஎதிர் பார்த்துள்ளேன்-என்றார். (ச)



*ஹிருணிகா*



# 6 ஆவது வாரப் பரிசு மழையில் நனைந்த வெற்றியாளர்கள்



ஆறாவது பரிசுமழையின் போது உதயன் பத்திரிகை நிறுவன அதிகாரிகளிடம் இருந்து ஸ்ரீ.பவனிகன், லி.ஜனனி, அ.விஜயகுமாரி, அ.ஜெயராஜா .இ.ஜசிதா, ஆர்.ரமில்டன், த.பிறேமா, த.லக்ஷாயினி, சி.அசோக்க மாலா, ப.கதாகரன், இ.கிருசாந்தினி, தி.இரதி, சி.நிலக்ஷனா, ஸ்ரீ.சொரூபிகா, இ.சிவப்பிரியா, இ.உதயகரன்- பரிசுகளைப் பெற்றுக் கொண்டனர்.

யாழ்ப்பாணம்,ஏப்.3

சூரியகாந்தியின் கொண்டாடுங்கள் குதூகலியுங்கள் பரிசு மழையில் 23.03.2014 ஆம் திகதி வெற்றியாளர்களுக்கான பரிசுக் கூப்பன்கள் வழங்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை உதயன் பணிமனையில் நடைபெற்றன.

பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 50 வெற்றியாளர்களுக்கு பரிசுக் கூப்பன்கள் வழங்கப்பட்டன.

அவர்களுக்கான பரிசுக் கூப்பன்களை யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் ஹோட்டல் 7,500 ரூபா பெறுமதியான ஒரு பரிசுக் கூப்பனையும், யாழ்ப்பாணம் ஈ.கொம் கொம்பியூட்டர் ரிரெய்னிங் சென்ரர் தலா 3,500 ரூபா பெறுமதியான 10 பரிசுக் கூப்பன்களையும், யாழ்ப்பாணம் ஜோர்தன் இன்ஸ்ரிரியூட் தலா 500 ரூபா பெறுமதியான 5 பரிசுக் கூப்பன்களையும், யாழ்ப்பாணம் சென் அன்ரனீஸ் தலா 500 ரூபா பெறுமதியான 4 பரிசுக் கூப்பன்களையும், யாழ்ப்பாணம் நளின் இன்வோமேஷன் ரெக்னோலோஜி நிறுவனம் தலா 500 ரூபா பெறுமதியான 2 பரிசுக் கூப்பன்களையும், சுன்னாகம் அபி பேபி மாட்ஸ் தலா 500 ரூபா பெறுமதியான 5 பரிசுக் கூப்பன்களையும், யாழ்ப்பாணம் வனிகா சேர்ஜிகல்ஸ் தலா 500 ரூபா பெறுமதியான இரண்டு பரிசுக் கூப்பன்களையும் கிளிநொச்சி பொன்னம் பலம் ஸ்ரோர்ஸ் தலா 500 ரூபா பெறுமதியான 2 பரிசுக் கூப்பன்களையும் உடையார் கட்டு தாயன்பு தலா 200 ரூபா பெறுமதியான 5 பரிசுக்கூப்பன்களையும் பளை மோகன் ஸ்ரோர்ஸ் தலா 200 ரூபா பெறுமதியான 5 பரிசுக் கூப்பன்களையும் புதுக்குடியிருப்பு பொதிகை மல்ரி சென்ரர் தலா 200 ரூபா பெறுமதியான 5 பரிசுக் கூப்பன்களையும் புதுக்குடியிருப்பு அறிவொளி புத்தகசாலை தலா 200 ரூபா பெறுமதியான 4 பரிசுக் கூப்பன்களையும் வழங்கியிருந்தனர்.

பரிசுக் கூப்பன்களைப் பயன்படுத்தி பரிசுக் கூப்பனில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் பொருள்களை கொள்வனவு செய்து வெற்றியாளர்கள் பயன்பெற முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(வ-10- 21)


## கேள்வி அறிவித்தல்
## நகராட்சி மன்றம் பருத்தித்துறை

### நவீன கட்டடத் தொகுதிக் கடைகளை வாடகைக்கு வழங்குதல்-2014

பருத்தித்துறை நகரத்தில் அமைந்துள்ள நவீன கட்டடத் தொகுதி கீழ்த்தளத்தில் உள்ள (9) கடைகளை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகைத் தொகைக்கு அமைவாக வாடகைக்கு வழங்குவதற்கான ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் பருத்தித்துறை நகராட்சிமன்ற நகரபிதாவால் கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி :16.04.2014 மு.ப.11.00 மணிவரை.
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி :17.04.2014 மு.ப.11.00 மணிவரை.
கேள்வி திறக்கப்படும் திகதி :17.04.2014 பி.ப. 14.30 மணி.

| | விவரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வரிகள் நீங்கலாக ஒரு கடைக்கு) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | மீளளிக்கமுடியாத கேள்விப்படிவக் கட்டணம்.(VAT, NBTஉட்பட) |
|---|---|---|---|---|
| 01. | B தொகுதியில் 07,09 ஆம் இலக்ககடைகள் | 1200,000/= | 10,000/= | 1140/= |
| 02. | C தொகுதியில் 10, 11, 12, 13, 14, 15 மற்றும் 16 ஆம் இலக்க கடைகள் | 700,500/= | 10, 000/= | 1140/= |

மேலதிக விவரங்களை நகராட்சிமன்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
01.04.2014

சபா.ரவீந்திரன் J.P.U.M
நகரபிதா, நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

(சி/13140)(3.6.4)



## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.03.2013 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள், 22.04.2014 இலிருந்து காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி யாழ். பிராந்திய தலைமையகத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | - |
| நெல்லியடி | - |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
மக்கள் வங்கி, பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/13141)
(2-6.3)

# மரண அறிவித்தல்கள்



## மணிவாசகன் குகதாசன்

சிவன்கோயிலடி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் பிராஸ்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட மணிவாசகன் குகதாசன் 31.03.2014 திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மணிவாசகன் மற்றும் குணபாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அருமைத்துரை மற்றும் குளகசோதி தம்பதியரின் அன்பு மருமகனும், சுகந்தினியின் பாசமிகு கணவரும், காஞ்சனா, அபிசன், லோசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாளினி, காலஞ்சென்ற வரதராஜன் மற்றும் கிரிஷா, சிவச்சந்திரன், சிவேந்திரன் ஆகியோரது அன்புச் சகோதரனும், சத்தியமூர்த்தி, சர்வேஸ்வரன், இரனுஷா, பத்மினி, உமாகாந்தன், கோமதி, கவிதா, தனேஸ், சோபனா ஆகியோரின் மைத்துனரும், ஜெயதேவி, ஆனந்தராசா, பரணிராசசிங்கம், சிந்துமதி, செல்வக்குமார் ஆகியோரின் சகலனும், மல்லிகாதேவியின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிராஸ்ஸில் இன்று (03.04.2014) வியாழக்கிழமை இலங்கை நேரப்படி 5மணிக்கு நடைபெறும். அஞ்சலி நிகழ்வுகள் இங்கு அவரது இல்லத்தில் பிற்பகல் ஒருமணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன்கோயிலடி, வட்டுக்கோட்டை. (48401) (45.3.6) தகவல்: குடும்பத்தினர்.

---



## திருமதி நாகம்மா காசிப்பிள்ளை

கண்டி வீதி, நுணாவில் சந்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா காசிப்பிள்ளை 02.04.2014 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - அம்முனிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, பூபாலசிங்கம் மற்றும் இராசம்மா, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நேசமணி, செல்வநாயகி, சிலோஜனாதேவி, கணேசமூர்த்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் சிவனேஸ்வரராசா, பாலசுப்பிரமணியம், சுசிலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2014) வியாழக்கிழமை காலை 09.00 மணிக்கு நுணாவில் சந்தியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


நுணாவில் சந்தி, சாவகச்சேரி. (48602)(12)(3.6)

தகவல்: குடும்பத்தினர். 077 491 4558/077 919 5740

---

# மரண அறிவித்தல்

## வினாசி தர்மலிங்கம்



உரும்பிராய் மேற்கு, அன்னங்கை, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வினாசி தர்மலிங்கம் 01.04.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசி - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சொர்ணமாவின் அன்புக் கணவரும், சுவிஸில் வாழ்பவர்களான சுபாஸ்கரன், பாஸ்கரன், கருணாகரன், ஜெயந்தி, சாந்தி, தலாகினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப.02.00 மணியளவில் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் மேற்கு, அன்னங்கை, கோண்டாவில். (48404)(12)(3.6)

தகவல்: குடும்பத்தினர்.

---

# பிற்போடப்பட்டுள்ளது

திருமதி அன்னம்மா இராசதுரை

நாளை 04.04.2014 மற்றும் 05.04.2014 ஆகிய திகதிகளில் நடைபெற இருந்த திருமதி அன்னம்மா இராசதுரை அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளன. இதுபற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

உரும்பிராய் மேற்கு, அன்னங்கை, கோண்டாவில். (48605)(12.3.6)

தகவல்: இ.யோகராஜா (மகன்)

---

## நீர் தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.3

யாழ்.பல்கலைக்கழகப் புவியியற்றுறையின் ஏற்பாட்டில் இன்று வியாழக்கிழமை பி.ப. 3 மணி முதல் 4.30 மணி வரை "யாழ்.மாவட்ட நீர்வளப் பேணுகையும் இரணைமடுக் குள தண்ணீர் விநியோகத் திட்டமும்" என்ற பொருளில் கருத்தரங்கு ஒன்று புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

புவியியற்றுறைத் தலைவர் கலாநிதி எஸ்.சுதாகர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கின் வளவாளர்களாக யாழ்.பல்கலைக்கழக பொறியியற்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவகுமார், கலாநிதி எஸ்.ரி.பி.இராஜேஸ்வரன், திட்ட இணைப்பாளர் மரியதாசன் குரூஸ் ஆகியோர் பங்கு பற்றி தமது கருத்துக்களை முன் வைக்கவுள்ளனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் கல்வியியலாளர்கள், ஆர்வமுள்ள பொதுமக்கள் இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றிப் பயன்பெற முடியுமென புவியியற்றுறைத் தலைவர் தெரிவித்துள்ளார். (க)

## குடும்பப் பதிவுகள்

நல்லூர், ஏப்.3

வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் குடும்பப் பதிவுகளை மேற்கொண்டவர்கள், தற்போது அவ்விடங்களில் வசிக்காதிருந்தால் தமது பதிவுகளை நீக்கிக் கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இத்தகையவர்கள் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை நீக்கித் தாம் தற்போது வதியும் கிராம அலுவலர் பிரிவுகளில் குடும்பப் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (க)

## கண்காட்சியும், கலை நிகழ்வும்

யாழ். பிரதேச செயலர் பிரிவிலுள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சியும், கலை நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம் மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் (ஓ.எல்.ஆர்.ஆலய வளாகம்) இவை ஆரம்பமாகவுள்ளன.

யாழ்.பிரதேச செயலர், திருமதி தெ.சுகுணரதி தலைமையில் இடம்பெறும் நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கிராம அபிவிருத்திப் பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன் கலந்து கொள்வார். (க)

## முதுகலைமாணி கற்கைநெறி

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் உயர் பட்டப் படிப்புக்கள் பீடத்தால் நடத்தப்படும் முதுகலைமாணி சைவசித்தாந்தக் கற்கை நெறிக்கான ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடத்தில் நடைபெறவுள்ளதால் இந்தக் கற்கை நெறிக்கு பதிவு செய்த அனைத்து மாணவர்களையும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உயர்பட்டப் படிப்புக்கள் பீடத்தின் பீடாதிபதி அறிவித்துள்ளார். (க)

---

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை திருமதி ய. முரளிதரன் அவர்களின் தாயார்

திருமதி செல்லம்மா சின்னையா

அவர்கள் காலமாகிவிட்ட செய்தி அறிந்து கவலையடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (48454)(48.3.6)

நலன்புரிக்கழகம்
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

---

# கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய அதிபர் முருகேசு முரளிதரன் அவர்களின் மாமியார்

திருமதி செல்லம்மா சின்னையா

அவர்களின் மறைவுச்செய்தியைக் கேட்டு துயரடைகிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (48467)(45.3.6)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## மாணிக்கம் சிவராசா



தோற்றம் 23.08.1945

மறைவு 13.04.2013

திதி : திருதியை 03.04.2014

ஒளிமயமான எங்கள் வாழ்வின் உயர்வுக்கு
உன்னத வழிகாட்டிய உத்தமரே!
எங்கள் உயிரிலும் இனிய இதய தெய்வமே!
உருண்டோடி விட்ட ஓராண்டு நினைவுகளோடு
மனமுருகி நின்று மனதார வணங்கி
மலரடி அஞ்சலி செய்கின்றோம்.

இல.80/10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

# 78 ஆவது பிறந்த தினமும் 107 ஆவது நாள் நினைவஞ்சலியும்

அமரர்

## செல்லப்பா பாலசிங்கம்



பிறப்பு 03 ⋆ 04 ⋆ 1936

இறப்பு 18 ⋆ 12 ⋆ 2013

அன்பான அப்பாவே!
பாசத்தின் திருவுருவே
நாள்கள் 107 ஓடி
மறைந்திட்டாலும்

உங்கள் பிரிவின் துயரமது ஆறாது ஒரு போதும்
பாசமாய் வளர்த்தெம்மை தாங்கி நின்றீர்
இனி எப்போ காண்போமென ஏங்குகின்றோம்
உங்களது ஆத்மாசாந்தி பெற அருள் வேண்டி
என்றென்றும் இறைவன் பாதம் துதிக்கின்றோம்.

ஆவரங்கால் மேற்கு, புத்தூர். (48400)(3.6.4)

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

# நான்காவது ஆண்டு நினைவுநாள்

மண்ணில் 20.07.1958

விண்ணில் 20.03.2010



உன் அழகும் உன் இளமையும்
என்றுமே பேசப்படுபவை!
உன் வாழ்வும் உன்வளமும்
என்றுமே நேர்மையானவை!
உன் இல்லறமும் உன் நல்லறமும்
என்றுமே முன்னோடித்தனமானவை!
உன் மரணமும் உன் மாற்றமும்
என்றுமே வெற்றிடம் தான்!
என்றுமே ஏமாற்றம் தான்!

அமரர் நடேசு கிருஷ்ணகுமாரன் (பொலிஷன்)

திதி: சதுர்த்தி (03.04.2014)

"சோபனம்", நக்கீரன் வீதி, அல்வாய் வடக்கு, அல்வாய். (261)(14)

குடும்பத்தினர். 021 490 2005

# சுத்திகரிப்பு பணியாளர்கள் பணிப் புறக்கணிப்பு

## சாவகச்சேரி நகரசபையில்

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை உள்ளூராட்சிச் சபைகளில் நியமிக்கக் கோரி வடமாகாண பிரதேச சபைகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் சுகாதாரப் பணி முடக்கத்துக்கு ஆதரவு தெரிவித்து சாவகச்சேரி நகர சபை சுத்திகரிப்பு பணியாளர்கள் இன்று அடையாள பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர். (வ-9)


**கண்ணீர் அஞ்சலி**

மன்ற உறுப்பினரும், மன்றத்தின் சேமிப்புத் திட்ட உறுப்பினருமான
**சரவணமுத்து சிவகுணேசன்**
(உரிமையாளர், அம்பாள் வெல்டிங்-சங்கத்தானை)
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி பொன்னம்மா சரவணமுத்து**
அவர்கள் 31.03.2014 அன்று காலமானார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் (ச/7665) (7.6.3)


# தென்மராட்சி முதியோருக்கு சுயதொழில் கடன்

தென்மராட்சி, ஏப்.3

தென்மராட்சி முதியோர் பேரவையினர், பிரதேசத்தில் சுயதொழில் மூலம் வருமானத்தை ஈட்டக்கூடிய நிலையில் உள்ள முதியோர்களுக்கு கடன் வழங்கவுள்ளனர்.

பிரதேசத்தில் வாழும் 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள் இந்தக் கடனுக்கு விண்ணப்பிக்கலாம் என்றும், அவர்களில் முதற்கட்டமாக பத்துப் பேருக்கு கடன் வழங்கப்படவுள்ளதாகவும் பேரவைத் தலைவர் மருத்துவர் எஸ்.எஸ். அருளானந்தம் அறிவித்துள்ளார். (வ-9)


விளம்பரத் தொடர்புகளுக்கு
0215671111 advt@uthayan.com
உதயன்



**வீட்டுக்கிருத்திய அழைப்பு**



கடந்த 05.03.2014 புதன்கிழமை
சிவபதமடைந்த எமது
குடும்பத்தலைவர்
அமரர் **செல்லத்துரை கோபாலகிருஷ்ணன்**
(சாரதி – இலங்கை போக்குவரத்து சபை,
காரைநகர் சாலை) (CTB)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (04.04.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாரதி வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

குடும்பத்தினர்.
077 600 6328,
(46408) (45.6.3)


# மாவட்ட செயலகம்,யாழ்ப்பாணம் தேசிய போட்டிக் கேள்வி அறிவிதல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/மாவட்ட செயலரால் கீழ்குறிப்பிடப்படும் நிர்மாண, வீதிகள் புனரமைப்பு வேலைகளுக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் மாவட்டத்திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 07.04.2014 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் திட்டமிடல் பணிப்பாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல.021 222 2427, 021 222 7583) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை மாவட்டத்திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 07.04.2014 முதல் 24.04.2014 வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரையான காலப் பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா.1000/= கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 24.04.2014ஆம் திகதியன்று பி.ப 1.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 24.04.2014ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு திறக்கப்படும்.
6. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாள்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும், கேள்விப் பிணைப் பொறுப்பு இலக்கமிடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல. | பிரதேச செயலர் பிரிவு | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான இக்ராட் தரம் | கேள்வி பிணைத் தொகை(ரூ) |
|---|---|---|---|---|---|---|
| JF/DPS/VW/CON/ 11/2013 | வேலணை | அல்லைப்பிட்டி சாமிக்கட்டு வீதி புனரமைப்பு. | 9.772 | 3 | C7 | 98,000.00 |
| JF/DPS/VW/CON/ 12/2013 | வேலணை | மண்டைதீவு கொண்டகம் வீதி புனரமைப்பு | 8.269 | 3 | C7 | 83,000.00 |
| JF/DPS/VW/CON/ 13/2013 | வேலணை | வேலணை அண்ணமார் வீதி புனரமைப்பு | 2.423 | 3 | C8 | 24,000.00 |
| JF/DPS/VW/CON/ 14/2013 | வேலணை | சரவணை கலைமகள் வீதி புனரமைப்பு | 3.518 | 3 | C7 | 35,000.00 |
| JF/DPS/VW/CON/ 15/2013 | வேலணை | நயினாதீவு கிழக்கு கடற்கரை வீதி புனரமைப்பு | 9.972 | 3 | C7 | 100,000.00 |
| JF/DPS/VW/CON/ 16/2013 | வேலணை | வேலணை மொங்கானைப்புலம் திருவள்ளுவர் வீதி புனரமைப்பு | 5.281 | 3 | C7 | 53,000.00 |
| JF/DPS/VW/CON/ 17/2013 | வேலணை | வேலணை செட்டிபுலம் முருகன் கோவில் வீதி புனரமைப்பு | 5.348 | 3 | C7 | 53,000.00 |
| JF/DPS/VW/CON/ 18/2013 | வேலணை | நவீன உபகரணங்களுடன் தொழில் பயிற்சி நிலையம் வேலணையில் அமைத்தல் | 6.999 | 3 | C7 | 70,000.00 |
| JF/DPS/VW/CON/ 19/2013 | வேலணை | வேலணையில் நவீன உபகரணங்களுடன் பூங்கா அமைத்தல் | 2.161 | 3 | C8 | 22,000.00 |
| JF/DPS/VW/CON/ 20/2013 | ஊர்காவற்றுறை | எழுவைதீவு வீதி புனரமைப்பு செய்தல் | 7.915 | 3 | C7 | 80,000.00 |
| JF/DPS/VW/CON/ 21/2013 | ஊர்காவற்றுறை | அனலைதீவு உப அலுவலக வளாகத்தில் கடைத்தொகுதி மற்றும் மதில் அமைத்தல் | 4.426 | 3 | C8 | 44,000.00 |
| JF/DPS/VW/CON/ 22/2013 | ஊர்காவற்றுறை | எழுவைதீவில் உப அலுவலக கட்டடம் மற்றும் நூலகம் அமைத்தல் | 6.168 | 3 | C7 | 62,000.00 |
| JF/DPS/VW/CON/ 23/2013 | ஊர்காவற்றுறை | அனலைதீவு குடியேற்றத்திட்ட வீதி புனரமைப்பு – கட்டம் -I | 3.91 | 3 | C8 | 44,100.00 |
| JF/DPS/VW/CON/ 24/2013 | வேலணை | வேலணை செட்டிபுலத்தில் உவர்நீர் தடுப்பணை அமைத்தல். | 3.485 | 3 | C8 | 35,000.00 |
| JF/DPS/VW/CON/ 25/2013 | வேலணை | நயினாதீவில் உவர்நீர் தடுப்பணை அமைத்தல் | 3.587 | 3 | C8 | 36,000.00 |

**சுந்தரம் அருமை நாயகம்,**
**அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,யாழ்ப்பாண மாவட்டம்.**

(ச/13145)(5.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி (கனகம்மா) பரிபூரணநாதன்



அல்வாய் தெற்கு, அல்வாயைப் (ஓடை) பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், பண்டாரிக்குளம் வவுனியாவில் தற்காலிகமாக வசித்து வந்தவருமான திருமதி பரமேஸ்வரி பரிபூரணநாதன் நேற்று முன்தினம் (01.04.2014) செவ்வாய்க்கிழமை பி.ப 2.15 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-பறுவதம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பரிபூரணநாதனின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான சிவபாக்கியம், சிவக்கொழுந்து மற்றும் அன்னலட்சுமி, காலஞ்சென்ற வடிவேலு மற்றும் கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, கைலாசப்பிள்ளை, பொன்னையா மற்றும் நாகேஸ்வரி, இந்திரராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், உதயகலா (ஜெயா), உதயகீதா (கீதா), உதயராதா (ராதா), சுபாசினி ஆகியோரின் அன்புத் தாயும், மனோரதன், யோகேஸ்வரன், கெங்காதரன், சிறீதரன் ஆகியோரின் அன்பு மாமியும், திவ்யா, திவாகர், அபினயா, நிவேதன், ராகவி, ராகுல், ஜவகர், மிதுஷன், ரதன், டேமிதன், சப்தவி, சஜிந்தர், வாகிஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டியாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.04.2014) வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் இல.34, உக்குளாங்குளம் வீதி, பண்டாரிக்குளத்தில் வசிக்கும் மருமகன் பொன்னுத்துரை சிறீதரனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அல்வாய் தெற்கு அல்வாய் அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 2.00 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.34,
பொன்மணி வாசா,
உக்குளாங்குளம்,
பண்டாரிக்குளம்,
வவுனியா,
077 611 0100 (43238) (10)

தகவல்:
மனோரதன் ஜெயா குடும்பம் (லண்டன்)
யோகேஸ்வரன் கீதா குடும்பம் (லண்டன்)
கெங்காதரன் ராதா குடும்பம் (கொலண்ட்)
சிறீதரன் சுபா குடும்பம் (வவுனியா)

## பாசிக்குடா-கொழும்பு பஸ் சேவை ஆரம்பம்

### *15 வருடங்களின் பின்னர்*



வாழைச்சேனை.ஏப்.3

பாசிக்குடா பிரதேசத்துக்கு வருகை தரும் உல்லாசப் பயணிகளதும் பாசிக்குடாவை அண்மித்த கிராம மக்களதும் நன்மை கருதி இலங்கை போக்குவரத்துச் சபையின் வாழைச்சேனை சாலையால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 08.30 மணிக்கு பாசிக்குடாவில் இருந்து கொழும்புக்கான பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1999 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்ட இலங்கை போக்குவரத்துச்சபை வாழைச் சேனை சாலையால் நடத்தப்பட்ட வாழைச்சேனை - கொழும்பு இரவு நேர பஸ் சேவை 15 வருடங்களின் பின்னர் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேவையால் வாழைச் சேனை, கல்குடா, பேத்தாளை, பாசிக்குடா, கல்மடு போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மிகவும் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த பஸ்சேவை தினமும் இரவு 8.30 மணிக்கு பாசிக் குடா சந்தியில் இருந்து கொழும்பு நோக்கிப் புறப்படும். அதேபோன்று கொழும்பில் இருந்து தினமும் இரவு 10 மணிக்கு புறப்பட்டு ஓட்டமாவடி, வாழைச்சேனை, பாசிக்குடா ஊடாக காத்தான்குடி வரை செல்லும் என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் வாழைச் சேனை சாலை முகாமையாளர் எம்.ஐ.ஏ.அஸீஸ் தெரிவித்தார். (ச)


**குறைந்த செலவில்**

உங்களின் வீடுகள், கம்பனிகள், நிறுவனங்கள், கடைகளில் உள்ள மலசல கூடங்கள் நிறைந்து விட்டதா அதனை குறைந்த செலவில் மிக சிறந்த முறையில் சுத்தம் செய்து தருகின்றோம்.

A.A.Club

தொடர்பு : 077 9921159


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் தங்கமுத்து குழந்தை

(செல்லமுத்து, ஓய்வு பெற்ற ஆசிரியை)



பெற்றிட்ட பிள்ளைகளாய்
எல்லோரையும் வளர்த்துமே
பேறுகளும் பலபெறவே
ஏணியான ஆசையம்மாவே!
உற்றவர் அல்லாதோர்
உன்னிடத்தில் வந்துமே
உதவிகள் பலவாறாய்
பெற்றனர் அறிவோமே! வற்றாத ஊற்றாக
அள்ளி நீ கொடுத்ததை
விளக்கமாக தினக்குறிப்பில்
எழுதியதை பார்த்தனால்
பற்றிய கோபத்தினால்
எம்மில் சாடுகிறார்கள்!
பாசமே எமக்களித்த சொத்தாகும்
ஆசையம்மாவே

இன்று (03.04.2014) நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மண்டபத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்,
சகோதரிகுடும்பத்தினர்.

100, அம்மன் வீதி, திருநெல்வேலி, மேற்கு

## முதலாம் ஆண்டு சிரார்த்த தின அழைப்பு

கடந்த 16.03.2013
இறைபதமடைந்த
எமது குடும்பத்தின் குல விளக்கு



### அமரர் இராமநாதர் சின்னத்தம்பி

தோற்றம் : 26.02.1934 — மறைவு : 16.03.2013

அவர்களின் முதலாவது வருட சிரார்த்த கிரியைகள் நாளை (04.04.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக தயவாக ஏற்றுக்கொள்ளவும்)

இரண்டாம் வட்டாரம், நெடுந்தீவு

குடும்பத்தினர்

(46412)(2.6)

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்



### திருமதி தையல்நாயகி வைகுந்தராஜா

(மண்டைதீவு)

மலர்வு 07.05.1950 — திதி:-சதுர்த்தி — உதிர்வு 25.03.2004

கனவுகளுடன் கருவறையில்
காத்திருந்தாய் எமை
மாதங்கள் பத்தில்...!
நினைவுகளுடன் இதயவறையில்
காக்கின்றோம் உமை
வருடங்கள் பத்தில்...!
விதை ஒன்று விருட்சமாகையில்
வீழ்ந்துவிட்டாயம்மா - ஆனாலும்
வீழ்ந்திடாத உனதன்பு
தாங்கி நிற்கின்றது
விழுதுகளாய் எமை...!

ஆடியம்பிட்டி ஒழுங்கை,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(C/13233)(2.6.3)

# மீனவரின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்

## பொன். ராதாகிருஷ்ணன் வலியுறுத்து

சென்னை, ஏப்.3

தமிழக மீனவர்கள் பாதுகாப்பை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும் என்று பா.ஜ.க.தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கைக் கடற்படையினரால் இராமேஸ்வரம் மீனவர்கள் கொடூரமான முறையில் தாக்கப்பட்டுள்ளதைத் தமிழக பாரதீய ஜனதா கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது.



பொன். ராதா கிருஷ்ணன்

தமிழக மீனவர்களின் படகுகளைச் சேதப்படுத்தியும், பைப், கல் மற்றும் கம்புகளாலும் சரமாரியாக நம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்கியுள்ளனர்.

இலங்கைக் கடற்படையினரின் இந்தச் செயல் காட்டுமிராண்டித்தனமானது. இரு நாட்டு மீனவர்களிடையே பேச்சு நடந்து வரும் நிலையில் இது போன்ற நடவடிக்கைகள் மீனவர்கள் பிரச்சினையில் தீர்வு ஏற்பட்டுவிடக்கூடாது என்ற எண்ணத்தில் இலங்கை அரசு இருப்பதையே காட்டு கிறது.

மத்திய அரசு உடனடியாக தமிழக மீனவர்களின் பாதுகாப்புக்கு உறுதி செய்ய வேண்டும் என்று தமிழக பாரதீய ஜனதா கட்சி அரசை கேட்டுக் கொள்கிறது" இவ்வாறு அவர் கூறியுள்ளார். (வ)

## சவூதி அரேபியாவின் பிரேத அறைகளில் இலங்கையர் 20 பேரின் சடலங்கள்?

### 'அரப் நியூஸ்' இணையத்தளம் தகவல்

சவூதி அரேபியாவின் பிரேத அறைகளில் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படாத மேலும் 20 சடலங்கள் காணப்படுவதாக 'அரப்நியூஸ்' '(ARAB NEWS)' இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஒக்ரோபர் மாதம் வரையான காலப்பகுதிக்குள் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து 30 வயதுக்குக் குறைவான 75 வீத பெண்களின் சடலங்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அந்த இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த காலப்பகுதிக்குள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்புக்களுக்காக சென்று உயிரிழந்த இலங்கைப் பெண்கள் குறித்து, அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் இலங்கை வர்த்தக சங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது.

இந்த உயிரிழப்புக்களில் அதிகளவானவை மாரடைப்பால் ஏற்பட்ட இறப்பு என்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வைத்திய அதிகாரியை மேற்கோள்காட்டி 'அரப் நியூஸ்' இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன், அவ்வாறு அனுப்பி வைக்கப்படுகின்ற சடலங்களில் பெரும்பாலானவற்றில் உள்ளக அவயங்கள் காணாமற் போயுள்ளதாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு நாட்டுக்கு வெளியே வாழ்ந்து வருகின்ற ஒரு இலங்கையர் வீதம் உயிரிழப்பதாக ரியாத் நகரிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி குறித்த செய்தி வெளியிட்டுள்ளது.

உயிரிழக்கும் இருவரின் சடலங்களை உறவினர்களுக்கு வழங்குவதற்காக, நாளாந்தம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 82 சதுர

கைகளுக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் ஒத்துழைப்பு கிடைக்கின்றது." - என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட கடற்படைப் பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய கருத்துத் தெரிவிக்கையில்,

கடல் வழியாக இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. புலனாய்வு துறையினருடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எனினும் அதிக போதைப் பொருள் வர்த்தக கொடுக்கல் வாங்கல் சர்வதேச கடல் எல்லையில் இடம்பெறுவதால் அதனை தடுக்க முடியாதுள்ளது. அத்துடன் ஒவ்வொரு மீன்பிடி படகுகளையும் சோதனை செய்வதும் இயலாத காரியம்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

### 3 கிலோ

செய்யப்பட்டவர்களில் ஒருவர் இந்தியா, திருச்சியைச் சேர்ந்தவர் என்றும் மற்றையவர் யாழ். சங்கானையைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் கூறுகின்ற னர்.

பல லட்சம் ரூபா பெறுமதியான குறித்த கஞ்சாவை மன்னாரூடாக கொழும்புக்குக் கொண்டு சென்று அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவந்தபோது சங்கானையைச் சேர்ந்த நபர் கைது செய்யப்பட்டார் .அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் பிரதான சந்தேக நபரான குறித்த இந்தியர் கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர்களை யாழ். பஸ் நிலையத்தில் வைத்து கடற்படையினர் சிவில் உடையில் சென்று கைது செய்திருந்தனர். அதையடுத்து அவர்களது உறவினர்கள் அவரை யாரோ கடத்திச் சென்றுவிட்டதாக யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர். எனினும் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட விடயம் உறவினர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. இதுகுறித்த விசாரணைகளைத் தற்போது பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர் என்று கூறப்படுகின்றது. (ற-4)

### சரணடைந்தோரை

போது எவ்வாறு தாம் ஒவ்வொரு இடமாக இடம்பெயர்ந்து சென்றனர் என்பதையும் விளக்கியதுடன், இறுதிப்போரின் போது சுமார் 5 இலட்சம் மக்கள் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர் என்றும் குறிப்பிட்டார்.

அதன் பின்னர் சாட்சியிடம் குறுக்கு விசாரணை மேற்கொண்டார் அரசதரப்பு சட்டத்தரணி சிஹான் டீ சில்வா,

2009 ஆம் ஆண்டு காணாமற்போதல் இடம்பெற்றுள்ள போதும் 2012 ஆம் ஆண்டுதான் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதே? என்று கேள்வியெழுப்பியதுடன், காணமற்போயுள்ளார் என்றுதான் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதே தவிர, சரணடைந்து காணாமற்போயுள்ளார் என்று அதில் கூறப்படவில்லை என்று வாதிட்டதுடன், இராணுவத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதற்காகவே இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

மனுதாரர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ரட்ணவேல் மற்றும் அன்ரன் புனிதநாயகம் ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். அரச சட்டத்தரணியின் வாதத்துக்குப் பதில் வாதம் செய்யப்பட்ட போது,

"போர் முடிந்தவுடன் நலன்புரி நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். சுதந்திரமாக விடப்படவில்லை. ஆள் கொணர்வு மனு இரத்த உரித்துக்கள் மட்டுமே தாக்கல் செய்ய முடியும். எனவே உடனடியாக மனுத்தாக்கல் செய்வதற்கான சூழ்நிலை காணப்படவில்லை. பொலிஸ் நிலையத்தில் சிங்களத்தில் எழுதிய முறைப்பாட்டுக்கு கையெழுத்திட்டமையால் அதில் என்ன எழுதியிருந்தது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை" என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் மே மாதம் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

### மனித உரிமை

செலுத்த வேண்டும் என்றும் அந்தப் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த பேரவையின் சிரேஷ்ட உறுப்பினர் யஹலெனா கெனடி, இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் நடைபெற்று வரும் நிலையில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீதான நெருக்குதல்கள் இலங்கையில் உக்கிரமடைந்திருந்தன. இந்த நிலைமைகள் குறித்து சர்வதேச சமூகம் கூடுதல் சிரத்தை எடுத்துக் கொண்டு கண்காணிக்க வேண்டியது அவசியமான ஒன்று - என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பேரவையின் மற்றுமொரு இணைத் தலைவரான ஸ்டெம்போர்ட் மோயோ கருத்துத் தெரிவிக்கும்போது,

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமைகளை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. குற்றச் செயல்கள் தொடர்பிலான விசாரணைகளுக்கு இலங்கை முழு அளவில் ஒத்துழைப்பு வழங்க வேண்டியதும் அவசியமானது" - என்று தெரிவித்துள்ளார். (ற)

### ஜெனிவா

பட்டதீர்மானத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசு, ஆக்கபூர்வமான முறையில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலர் கோரியுள்ளார். ஜெனிவா தீர்மானத்தை வரவேற்றுள்ள அவர் பொறுப்புக்கூறல் முக்கியமானது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். பொறுப்புக்கூறல் தொடர்பில் 2009 ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொதுச் செயலாளருக்கு வழங்கிய வாக்குறுதியை மீளவும் ஞாபகப்படுத்த விரும்புவதாகவும் பான் கீ-மூன் தெரிவித்துள்ளார்"- என்று குறிப்பிட்டுள்ளார். (ற-5)

### நாடாளுமன்றில்

கள் எண்ணிக்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. எனினும் 2012ஆம் ஆண்டு நடத்தப்பட்ட வாக்காளர் மீளாய்வின்படி 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற எண்ணிக்கையில் இருந்து 6 நாடாளுமன்ற உறுப்பினர் என்று குறைக்கப்பட்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையில் மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. அதேவேளை, 2012 ஆம் ஆண்டு 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற நிலையில் காணப்பட்ட வன்னி மாவட்டத்தின் எண்ணிக்கை தற்போது 6 ஆக அதிகரித்துள்ளது. (ற-5)

### மீளப்பெறப்பட்ட

முன்னெடுக்கப்பட்டு வந்தது. அதையடுத்து உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கும், வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோருக்கிடையே நேற்று மாலை முதலமைச்சரின் அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அந்தக் கலந்துரையாடலிலேயே மேற்படி முடிவு எட்டப்பட்டுள்ளது.

வலி.வடக்கு பிரதேச சபையின் பொதுச் சுகாதார பரிசோதகருக்கும், அந்தப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரிக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டிருந்தது. குறித்த முரண்பாடு இரு தரப்பு இணக்கத்துடன் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

ஆனாலும் மருத்துவ சங்கம் இந்த விடயத்தில் தலையிட்டதுடன், நீதிமன்றுக்கு கொண்டு சென்றது. அத்துடன் உள்ளூராட்சி மன்றங்களின் கீழுள்ள பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களை, சுகாதார வைத்திய அதிகாரிகளின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று கோரிப் போராட்டமும் நடத்தப்பட்டது.

அதையடுத்து இந்த விடயத்தில் வடக்கு ஆளுநர் தலையிட்டதுடன், பொலிஸார் மூலமாக வலுக்கட்டாயமாக பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு மாற்றம் செய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கையை எதிர்த்து வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களினால் போராட்டம் நடத்தப்பட்டது. பிரதேச சபைகளுக்கே, சுகாதார நிர்வாக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். மீளவும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியே அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். கோரிக்கையை நிறைவேற்றும் வரை சுகாதாரத் தொழிலாளர்கள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் பணிகளைப் புறக்கணிப்பதாகவும் அறிவித்தனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே நேற்றுமாலை முதலமைச்சர் அலுவலகத்தில் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களும், வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலின் முடிவில், உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு இணைக்கப்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மீளவும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இணைக்கப்படுவர்.

வலி.வடக்கு, மானிப்பாய், நல்லூர், கரைச்சிப் பிரதேச சபைகளுக்கு பொதுச்சுகாதார பரிசோதகர்கள் இணைக்கப்படுவார்கள்.

இருந்தபோதும் முன்னர் இருந்த பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைக்கப்பட மாட்டார்கள். அத்துடன் வடக்கிலுள்ள 32 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்குரிய பதவி வெற்றிடங்களை உருவாக்குவதென் றும், அவர்களுக்கான பதவி வெற்றிடங்கள் அனுமதிக்கப் பட்டுவரும் வரையில் சுகாதாரத் திணைக்களத்தினூடாக அவர்களது மாதாந்த சம்பளம் வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை, வலி.வடக்கு சுகாதார வைத்திய அதிகாரியை மாற்றுமாறு பிரதேச சபையால் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சர், குறித்த சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கிடையிலான முரண்பாடு குறித்து விசாரணை செய்யக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்த விசாரணைக்குழுவின் அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் - என்று தெரிவித்துள்ளார். (ற-5-86)

### வயோதிபரை

குறித்த முதியவர்மருதனார் மடம் சந்தைக்கு வாழைக்குலை கொடுத்து விட்டுத் தனது வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோதே விபத்தில் சிக்கியுள்ளார். மோட்டார் சைக்கிளில் பயணித்த தம்பதியர் முதியவரை மோதிவிட்டு அங்கு நிற்காது தப்பிச் சென்றுள்ளனர்.

அதன்பின்னர் வீதியில் பயணித்தவர்கள் இதுகுறித்து முதியவரின் உறவினர்களுக்கு அறிவித்துள்ளனர். சுமார் 8.30 மணியவிலேயே அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் சிகிச்சைகள் பயனளிக்காது பிற்பகல் 1.30 மணியளவில் அவர் உயிரிழந்துள்ளார்.

விசாரணைகளின் பின்னர் உடல் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ற-4)

### உறவுகளை

சமூக சேவை அமைச்சு ஆகியற்றுடன் இணைந்தே இந்த் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணாமற் போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு தனது பகிரங்க அமர்வுகள் மூன்றை நடத்தியுள்ளது. அதன்போது பல்வேறு முறைப்பாடுகள் ஆணைக்குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தினூடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று ஆணைக்குழுவினர் தெரிவித்திருந்தனர்.


இந்த நிலையில் கடந்த திங்கள் கிழமை சுகாதார அமைச்சு மற்றும் சமூகசேவைகள் அமைச்சின் 20 பிரதிநிதிகள் வரையில் ஆணைக்குழுவினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். அப்போது வடக்கு கிழக்கில் தமது உறவுகளை காணாமற் போய் தேடிக் கொண்டிருக்கும் உறவினர்களுக்கு உளநல ஆலோசனைகளை வழங்குவதென்றும், இதனை ஒவ்வொரு பிராந்திய மட்டத்திலுமுள்ள சுகாதார வைத்திய அதிகாரியினூடாக மேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ற-5)

## தாச்சிப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப்.3
யாழ்.மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுமதியுடன் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் மின்னொளியில் நடத்தி வரும் 'லீக்' முறையிலான தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக் கிழமை இரவு 7 மணிக்கு புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தையிட்டி வள்ளுவன் விளையாட்டுக் கழகம் மோதும். (த-288)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்.3
யாழ்.மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுமதியுடன் கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக் கழகம் தென்மராட்சிக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையே மின்னொளியில் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு மறவன்புலோ அம்பிகை விளையாட்டுக் கழக 'ஏ' அணியைஎதிர்த்துகைதடிவளர்மதி விளையாட்டுக் கழக 'பி' அணி மோதுகின்றது. (த-288)



இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இளைஞர் சேவைகள் மன்ற சம்மேளனமும் இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சும் இணைந்து உலக இளைஞர் தினத்தை முன்னிட்டு நடத்தும் அகில இலங்கை மட்ட சைக்கிள் ஓட்டப்போட்டி நேற்றுக் காலை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இருந்து ஆரம்பமாகியது.
இதில் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு போட்டியை ஆரம்பித்து வைத்தார். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உயர் அதிகாரிகள், இராணுவ, கடற்படை உயர் அதிகாரிகள் உட்படப் பலர் இதில் கலந்து கொண்டனர். (த-23-86)

## வதிரி டயமன்ஸ் அபாரம் திக்குமுக்காடிய யுங்கம்பன்ஸ்



நேற்றைய ஆட்டத்தின் ஒரு காட்சி


யாழ்ப்பாணம், ஏப்.3
வதிரி டயமன்ஸ் அணியின் ஓயாத கோல் அலைகளால் திக்குமுக்காடினர் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியினர்.
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் அணிக்கு 7 நபர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இதில் நேற்று இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகமும் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக 'பி' அணியினரும் மோதினர்.
ஆட்டம் ஆரம்பமானதிலிருந்து முடிவடையும் வரை டயமன்ஸ் அணியில் பீமர் என்று செல்லமாக அழைக்கப்படும் பிறேம்குமாரும் ரஜீவனும் மாறி மாறிப் போட்டுத் தாக்க அவர்களின் கோல் போடும் ஆற்றலைக் கட்டுப்படுத்த முடியாது திணறினர் யங்கம்பன்ஸ் அணியினர்.
இச் சூழ்நிலையில் இடைவேளைக்குமுன்பாக டயமன்ஸ் அணி வீரர்களான பிறேம்குமார் ரஜீவன் ஆகியோர் தலா இரு கோல்களையும், லக்ஷிதன் ஒரு கோலையும் அடித்தனர். இதனால் 5:0 என்ற அடிப்படையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.
இடைவேளையின் பின்னரும் டயமன்ஸ் அணியினரின் கோல் போடும் படலம் தொடர்ந்த வண்ணமே இருந்தது. யங்கம்பன்ஸ் அணியினரும் கோல் போடுவதற்கு எத்தனித்த போதும் அது கைகூடவில்லை. ஆனால் டயமன்ஸ் அணியின் முன்கள வீரர்களான பிறேம்குமார், ரஜீவன் ஆகியோர் மீண்டும் தலா இரண்டு கோல்களைப் போட 9:0 என்ற நிலையில் அவ்வணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குமுன்னேறியது.
அதற்கு முன்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் கரவைச் சுடர் விளையாட்டுக்கழகமும் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இவ்வாட்டத்தில் இரு அணி வீரர்களும் கோல்களைப் பெறுவதற்காகக் கடுமையாகப் போராடினார்கள்.
கரவைச் சுடர் அணியினருக்கு கோல் போடும் சந்தர்ப்பம் கிடைத்த போதும் அதனைப் பயன்படுத்த அவ்வணி வீரர்கள் தவறிவிட்டனர்.
ஆனால் இடைவேளைக்கு முன்னர் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த சதீஸ்குமார் தனக்குக் கிடைத்த 3 சந்தர்ப்பங்களை தக்க முறையில் பயன்படுத்தி சிறிய சிறிய இடைவெளியில் அடுத்தடுத்து மூன்று கோல்களை அடித்து அசத்தினார். இதனால் 3:0 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.
இடைவேளையின் பின் இரு அணி வீரர்களின் ஆட்டத்திலும் அனல் பறந்தது. பீரங்கிக் குண்டுகள் போல் இரு அணி வீரர்களும் கோல்க் கம்பங்களை நோக்கி தொலைவில் வைத்து உதைந்த பந்துகள் கோல்க் கம்பங்களுக்கு மேலாகவும், பக்கமாகவும் சென்று பார்வையாளர்களை வெறுப்பேற்றியது.
இடைவேளை முடிவடையும் வரை இரு அணியினராலும் மேலதிக கோல்கள் எவையும் போடப்படாததால் 3:0 என்ற அடிப்படையில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழ கம் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (த-400)

# ஹொக்கி போட்டி நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.3
இலங்கைப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தினல் நடத்தப்படும் அகில இலங்கைப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்களுக்கான ஹொக்கிப் போட்டிகள் நேற்றுப் புதன்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் அகில இலங்கைப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் தலைவி திருமதி கருணநாயக்க தலைமையில் ஆரம்பமானது.
முதலில் விருந்தினர்கள்

**விருந்தினர்கள் மைதானத் தின் நுழை வாயில் இருந்து தமிழர் பாரம்பரிய கலையாகிய பொய்க் கால் குதிரை ஆட்டம், நாதஸ்வர இசையுடன் மேடைக்கு அழைத்து வரப்பட்டனர்.**

விளையாட்டு மைதானத்தின் நுழைவாயிலில் இருந்து தமிழர் பாரம்பரிய கலையாகிய பொய்க் கால் குதிரை ஆட்டம், நாதஸ்வர இசையுடன் மேடைக்கு அழைத்து வரப்பட்டனர்.



போட்டியை ஆரம்பிக்கும் சத்தியப்பிரமாணம்

அதனைத் தொடர்ந்து தேசியக் கொடியை அகில இலங்கைப் பாடசாலைகளின் ஹொக்கிச் சங்கத்தின் தலைவியும் அகில இலங்கைப் பாடசாலை ஹொக்கிச் சங்கத்தின் கொடியை செயலாளர் விஜயசிங்கவும் ஏற்றி வைத்தார்கள்.
இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் த. குருகுலராஜா சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு போட்டியை ஆரம்பித்து வைத்தார். (த-23)

## சனி, ஞாயிறு தினங்களில் குழு நிலைப் போட்டிகள்

சாவகச்சேரி நகர சபையினரும் பொலிஸாரும் இணைந்து சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்தவுள்ள விளையாட்டுப் போட்டிகளின் குழுநிலைப் போட்டிகள் எதிர்வரும் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளன.
கரப்பந்தாட்டப் போட்டிகள் மின்னொளியில் சாவகச்சேரி கச்சாய் வீதி, ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழக மைதானத்திலும், மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் சாவகச்சேரி நகர சபை மைதானத்திலும் நடைபெறுமென நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (த-9)

## சைக்கிள், மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.3
தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான சைக்கிள், மரதன் போட்டிகள் எதிர்வரும் 5ஆம் திகதி, 6ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளன. மேற்படி போட்டிகளில் பங்குகொள்ள விரும்பும் போட்டியாளர்கள் இன்று வியாழக்கிழமைக்கு முன்னர் தங்களது பதிவுகளை தொண்டமானாறு விளையாட்டுக் கழகத் தலைவர், செயலாளருடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ள முடியும் எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-23)

## ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம்



யாழ்ப்பாணம், ஏப். 3
அராலி மத்தி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் 74ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டப் போட்டிகள், நிலைய சிறார்களுக்கான ஓட்டப் போட்டிகள் என்பன எதிர்வரும் 6 ஆம் திகதி அராலி ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய முன்றிலில் இடம்பெறவுள்ளது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 3
யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் "வடக்கின் சுப்பர் கிங்" உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று வியாழக்கிழமை பி.ப.3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்.3
வவுனியா உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இதில் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் லயன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த் யுனிபைட் விளையாட்டுக்கழக அணி மோதவுள்து. (த-23)

★ ★ ★


யாழ்ப்பாணம், ஏப். 3
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் இணைந்து நடந்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் திக்கம் முனை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் இன்று வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து செஞ்சுடர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம் பெறும்ஆட்டத்தில்பொம்மர்ஸ்விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

# டில்ஷானுக்கு அபராதம்



டில்ஷான்

இலங்கைக் கிரிக்கெட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான திலகரத்ன டில்ஷானுக்குச் சர்வ தேசக் கிரிக்கெட் சபை அபராதம் விதித்துள்ளது.
நியூஸிலாந்துக்கு எதிரான போட் டியில் அவர் விதிமுறையை மீறிச் செயற்பட்டதால் இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.
இந்தப் போட்டியில் திலகரத்ன டில்ஷான் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.
இதன்போது தமக்கு வழங்கப் பட்ட ஆட்டமிழப்புத் தீர்மானம் சரியானதா என்னும் பாணி யில் டில்ஷான் கள நடுவரிடம் வினவியதாகச் சர்வதேச கிரிக் கெட் சபையின் இணையத் தளத்தில் தெரிவிக்கப்பட்டுள் ளது. அதற்கமைய, விதிமுறையை மீறிய குற்றச்சாட்டில் டில்ஷா னுக்கு குறித்த போட்டிக் கட் டணத்தில் 20 வீத அபராதம் விதிக்கப்பட்டதாகச் சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித்துள் ளது. (கு)




# ஆஸிக்கு ஆறுதல் வெற்றி

20/20 உலகக்கிண்ணப் போட்டியின் ஆட்டம் ஒன்றில் பங்களாதேஷை 7 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி ஆஸ்திரேலியா ஆறுதல் வெற்றி பெற்றது.
நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.
பங்களாதேஷ் நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங் களில் 5 இலக்குகள் இழப்புக்கு 153 ஓட்டங்கள் எடுத்தது. இதில் ஷகிப் அல் ஹசன் அதிகபட்சமாக 66 ஓட்டங்கள் எடுத்தார்.
154 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனக் களமிறங்கிய ஆஸ்திரேலியா அணியின் பின்ஞ், வோர்னர் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் 17.3 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகள் இழப்புக்கு 158 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. 71 ஓட்டங் கள் எடுத்த பின்ஞ் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். ஏற்கனவே தொடரில் இருந்து வெளியே றிய நிலையில் தனது கடைசி ஆட்டத்தில் ஆஸ் திரேலியா ஆறுதல் வெற்றி பெற்றது. பங்களா தேஷ் அணி விளையாடிய ஒரு ஆட்டத்திலும் வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (து)


# கரீபியன் லீக்கில் பீற்றர்சன்


கெவின் பீற்றர்சன்

**பீற்றர்சன் கரீபியன் நாட்டில் இந்த வருடம் நடைபெறும் கரீபியன் பிறீமியர் லீக் போட்டியில் விளை யாட அனுமதி கிடைத்ததை அடுத்து 2 வாரம் மேற்கிந்தியத் தீவுகளுக்குச் செல்கிறார்.**


இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் அதிரடி ஆட் டக்காரர் கெவின் பீற்றர்சன் ஆஷஸ் தொடரில் மோசமான தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து அணியில் இருந்து நீக் கப்பட்டார்.
பீற்றர்சன் கரீபியன் நாட்டில் இந்த வருடம் நடைபெறும் கரீபியன் பிறீமியர் லீக் போட்டியில் விளையாட அனுமதி கிடைத்ததையடுத்து 2 வாரம் மேற்கிந்தியத் தீவுகளுக்குச் செல்கிறார்.
ஏற்கனவே கட்டுப்பாடு காரணமாக மூன்று போட்டிகள் சென்றுவிட்ட நிலையில் ஒகஸ்ட் 3ஆம் திகதி நடக்கவிருக்கும் காலிறுதி மற்றும் ஒகஸ்ட் 20ஆம் திகதி நடக்கவிருக்கும் கடைசி போட்டியிலும் விளையாடவுள்ளார்.
ஊடகங்களுக்குப் பதிலளித்த அவர், இந்த வருடம் நடைபெறும் கரீபியன் பிறீமியரின் போட்டியில் விளையாடுவதில் நான் மகிழ்ச்சியாக உள்ளதாகவும், கரீபியனில் 20/20 கிரிக்கெட் போட்டியை விளையாடிய சிறப்பான நினைவுகள் உள்ளன எனவும் கூறினார்.
தனித்துவமான மற்றும் திகில் சூழலை உருவாக்கும் கரீபியன் ரசிகர்கள் முன்னிலையில் விளையாடுவதற்காக நான் காத்திருக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார். (கு)

# இலங்கையின் பந்து வீச்சே எமது தோல்விக்கு காரணம்




20/20 உலகக் கிண்ண போட்டியில் நியூசிலாந்து 59 ஓட்டத்தால் இலங்கையிடம் தோல்வியுற்று அரையிறுதி வாய்ப்பை இழந்தது.
120 ஓட்டங்கள் என்ற எளிய இலக்கை எடுக்க முடியாமல் நியூசிலாந்து அணி 60 ஓட்டங்களில் சுருண்டது. வில்லியம்சன் ஒருவரே 42 ஓட்டங்கள் என அதிகபட்சமான ஓட்டங்கள் எடுத்தார். மற்றவர்கள் சொற்ப ஆட்டங்களில் வெளியேறினர்.
ஹேரத்தின் அபாரமான பந்து வீச்சு இலங் கையின் இந்த வெற்றிக்கு வழி வகுத்தது. அவர் 3 ஓட்டங்கள் கொடுத்து 5 இலக்குகள் கைப்பற்றினார். சேனநாயக்க 2 இலக்குகள் எடுத்தார். இதன் மூலம் இலங்கை அரை யிறுதிக்குள் நுழைந்தது.
இந்தத் தோல்வி பற்றி நியூசிலாந்து அணியின் அணித் தலைவர் மக்கலம் கூறு கையில், இலங்கையின் சுழற்பந்து வீரர் ஹேரத்தின் பந்துவீச்சு மிகவும் அபாரமாக இருந்தது. நாங்கள் அவரின் சுழற்பந்தில் தடுமாறினோம்.
இதேபோல சேனநாயக்கவும் சிறப்பாக பந்து வீசி எங்களை நிலைகுலைய வைத்தார் எனத் தெரிவித்துள்ளார்.
இத்தகைய பந்து வீச்சால் நாங்கள் மிகவும் மோசமான துடுப்பாட்டம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும், எல்லா வகையிலும் இலங்கை அணியே ஆதிக்கம் செலுத்திய தாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (து)

# ஹேரத்துக்கு வோர்ன் புகழாரம்


ஷேன் வோர்ன்

இலங்கை அணியின் சிறப்புப் பந்து வீச்சாளர் ரங்கண ஹேரத் நியூசிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் மாயா ஜாலம் நிகழ்த்தியதைப் போன்று செயற் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தாம் இதனை வியப்புடன் நோக்கியதாக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழல் பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.
அண்மையில் நடைபெற்ற போட்டிகளை நோக்குமிடத்து இந்தப் போட்டி தொடர்பில் தாம் வியப்டைந்ததாக அவர் குறிப்பிட் டுள்ளார்.
இதனிடையே, பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் வசீம் அக்ரம், வெல்ல முடியாத ஒரு போட்டியை இலங்கை அணியினர் வெற்றிப்பாதைக்கு திருப்பியதாகக் குறிப்பிட்டுள்ளார். (கு)




## முதல் முறையாகப் பறிபோனது பாகிஸ்தான் அரையிறுதிக் கனவு

20/20 உலகக் கிண்ணத்தொடரில் குறைந்தது அரையிறுதிக்குள் அடியெடுத்து வைத்த ஒரே அணி என்ற பெருமையை பாகிஸ்தான் அணி பறிகொடுத்தது.

பாகிஸ்தான் அணி 2007ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் தோல்வி கண்டாலும், 2009ஆம் ஆண்டு சம்பியன் ஆனது.

2010, 2012ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தொடரின் அரையிறுதியில் தோல்வியைத் தழுவிய பாகிஸ்தான் அணி இந்த உலகக் கிண்ணத்தொடரில் முதன்முறையாக சுப்பர் 10 சுற்றோடு வெளியேறித் தான் தக்க வைத்திருந்த அரையிறுதிப் பெருமையை இழந்துள்ளது.

20/20 உலகக் கிண்ண சர்வதேச கிரிக்கெட்டில் 2012ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 74 ஓட்டங்கள் என்பதே இந்த நாள் வரை பாகிஸ்தானின் மோசமான ஓட்டமாக இருந்து வருகிறது. 82 ஓட்டங்கள் என்பது 2ஆவது குறைந்த பட்ச ஓட்டமாகக் கருதப்படுகிறது.

மேற்கிந்திய அணிக்கெதிரான போட்டியில் பாகிஸ்தானின் ஒட்டுமொத்த ஓட்டங்கள் 82 என்ற அளவில் இருக்கும்போது, மேற்கிந்தியத் தீவுகள் அணி கடைசி 5 பந்துப்பரிமாற்றங்களில் மட்டும் 82 ஓட்டங்கள் குவித்தது என்பது குறிப்பிடத்தக்கது. 84 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியைப் பதிவு செய்த மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு 20/20 உலகக் கிண்ணத் தொடர் கிரிக்கெட்டில் இது சிறந்த வெற்றியாக அமைந்ததுள்ளது. (த)

## லிவர்பூல் முதலிடத்தில்

இங்கிலாந்து பிரீமியர் லீக் உதை பந்தாட்ட தொடரின் இந்த வாரப் போட்டிகளின் படி செல்சி அணி தனது முதலிடத்தை இழந்துள்ளது.

17ஆம் இடத்திலுள்ள கிறிஸ்டல் பலஸ் அணியிடம் தோல்வியடைந்தமையே இதற்கு காரணம். லிவர்பூல் அணி, டொட்டென்ஹாம் அணியை வெற்றி பெற்று முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. இதேவேளை மூன்றாமிடத்தில் இரண்டு போட்டிகள் பின்னிலையுடன் இருக்கும் மன்செஸ்ரர் சிற்றி அணி ஆர்சனல் அணியுடன் சமநிலையான முடிவைப் பெற்றது. இன்னமும் 6 போட்டிகள் மாத்திரமே மீதமாகவுள்ள நிலையில் விறுவிறுப்பான கட்டத்தை நோக்கி நகர்கின்றது. மன்செஸ்ரர் சிற்றி அணி இரண்டு போட்டிகள் பின்னிலையில் இருக்கின்றமையானது அவர்களுக்கான வாய்ப்புகளை அதிகமாக உருவாக்கியுள்ளது. (த)

## கவாஸ்கருக்கு சவால்கள்

ஐ.பி.எல் சூதாட்ட விவகாரத்தின் எதிரொலியாக உயர் நீதிமன்றம், இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் இடைக் காலத் தலைவராக கவாஸ்கர்ரை நியமித்துத் தீர்ப்பளித்தது.

மேலும் 7ஆவது ஐ.பி.எல். போட்டிகள் முடியும் வரை மட்டுமே அவர் அந்த பொறுப்பில் இருப்பார் எனவும் தெரிவித்தது.

இருப்பினும் கிரிக்கெட் சபையின் இடைக்காலத் தலைவராக நியமிக்கப் பட்டுள்ள கவாஸ்கருக்கு பல்வேறு சவால்கள் காத்திருக்கின்றன.

ஐ.பி.எல். போட்டியின் முதல் 20 ஆட்டத்துக்கான அட்டவணை மட்டுமே வெளியிடப்பட்டுள்ள நிலையில் முதலில் அவர் ஐ.பி.எல். போட்டியின் முழு அட்டவணையை வெளியிட வேண்டும்.

இந்தியாவில் மே முதலாம் திகதி போட்டி நடைபெறுமா? அல்லது தேர்தலுக்கு பிறகு நடைபெறுமா? என்பது பற்றி எந்தத் தகவலும் இல்லாத நிலையில் முழு அட்டவணையை அறிவிப்பது சிக்கலாக அமைந்துள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் 2000ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் சூதாட்டம் காணப்பட்டதால் நடக்கவிருக்கும் ஐ.பி.எல். போட்டியை ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள சார்ஜா வில் நடத்துவது என்ற முடிவு சிக் கலை ஏற்படுத்தும் விதமாக அமைந்துள்ளது. இதனால் சார்ஜாவில் போட்டியை நடத்தும் முடிவில் இருந்து கவாஸ்கர் மாறலாம் என்று கூறப்படுகிறது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் கௌரவ உறுப்பினர் குருநாத் மெய்யப்பன், ராஜஸ்தான் அணியின் உரிமையாளர்களில் ஒருவரான ராஜ்குந்த்ரா ஆகியோர் சூதாட்டத்தில் ஈடுபட்டு இருந்ததாகச் செய்திகள் வெளியாகிய நிலையில் அந்த அணிகளின் உரிமையாளர்களையும் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டிய சவாலும் கவாஸ்கருக்கு இருப்பதாகத் தெரிகிறது. (த)

## தேர்தலில் டோனி?




வாக்குரிமை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தப் பிரபலங்களை வைத்து தேர்தல் ஆணையம் விளம்பரக் காணொலி தயாரித்துள்ளது.

இந்திய மக்களவைத் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ள நிலையில் இந்தக் காணொலி விளம்பரத்தில், மக்கள் மத்தியில் நன்கு அறியப்பட்ட பிரபலங்கள், வாக்குரிமை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பேசும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

இந்தக் காணொளியில் இந்தி நடிகர் அமீர்கான், முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், கிரிக்கெட் வீரர் டோனி உள்ளிட்டோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்தக் காணொலி தேர்தல் ஆணையத்தின் இணையதளங்களில் தற்போது இடம்பெற்றுள்ளது. இது விரைவில் முக்கிய தொலைக் காட்சிகளுக்கும் மற்ற ஊடகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)


*** PHYSICS**
*** A/L - 2015**

* வெப்பவியல் - HEAT
ஆரம்பம் : 05.04.2014 சனி 3 - 4 Pm
* ஆசிரியர் திரு. ம. ஸ்பெல்மன் (BSc)
இடம் - Science Corner
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P NO : 077 6116724


## மரண அறிவித்தல்

### இளையதம்பி கந்தசாமி



அளவெட்டிதெற்கு, அளவெட்டி அடுவம்பற்றைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி கந்தசாமி (மாவடிக் கந்தசாமி) நேற்று (02.04.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், கௌரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான சேதுப்பிள்ளை, செல்லாச்சிப்பிள்ளை, சபாபதி மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு சகோதரனும் வசந்தகுமார், வசந்தசீலன், ரதி (பிரான்ஸ்), கனி, வசந்தசுதன் (பிரான்ஸ்), வசந்தரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவராகினி, நிர்மலா, அம்பிகைபாகன் (பிரான்ஸ்), திருவருட் செல்வம், ஜெயகலா (பிரான்ஸ்), பவானி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், ரூபினி, ஜெனாகரன், கோகுலன் (பிரான்ஸ்), ராகுலன் (பிரான்ஸ்), அபிகுலன் (பிரான்ஸ்), கௌசிகன், கேசிகா, பிரவீன் (பிரான்ஸ்), வர்ஷா (பிரான்ஸ்), வினயா(பிரான்ஸ்), ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி தெற்கு,
அடுவம்பற்று.

(46403)(7.8.3)

தகவல்:
குடும்பத்தினர்.


**தொழில் வாய்ப்பு**

18 - 45 வயதிற்குட்பட்ட தொழில் வாய்ப்பற்ற ஆண்/பெண் இருபாலாருக்கும் அங்கீகரிக்கப் பட்ட நிறுவனங்களில் இணைந்து கொள்ள அரியதோர் சந்தர்ப்பம்.

நேர்முகப்பரீட்சை
திகதி: 2014/04/06
இடம்: கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
நேரம்: காலை 09.30

உங்களிடம் எவ்வித கட்டணமும் அறவிடப்பட மாட்டாது

நேர்முகப்பரீட்சைக்குதே.அ.அட்டையுடன் சமுகமளிக்கவும்

Mr.ரவீந்திர: 071 533 1780

(46408)(12.3.6)



**COMPUTER HARDWARE REPAIRING COURSE**
**(கணனி திருத்தும் பாடநெறி)**

நீங்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியவரா ? சுயதொழில் ஒன்றை எதிர்பார்ப்பவரா ? வேலை செய்து கொண்டு பகுதி நேரமாக வருமானம் ஈட்டவேண்டுமா ?

**4 days course**

**புதுப்பொலிவுடன் யாழ். நகரில உங்கள் எதிர்காலத்துக்கு மாதம் 150, 000/=க்கு மேல் வருமானம் ஈட்ட ஒரு வாய்ப்பு**

திருத்தும் முறையில் 10 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 1000 ற்க்கும் மேற்பட்ட மாணவர்களை உருவாக்கிய முதற்தர ஆசிரியருமான Raja (Sir) பாடநெறிக்கான கட்டணத்தை முதல் மாதத்திலேயே சம்பாதிக்க முடியும் நவீன Computer Hardware Repairing முறைகள் பயிற்று விக்கப்படும்.

BTEC
BRITISH TECHNOLOGY ENGLISH COLLEGE

#21 Sirampiyadi Lane,
Jaffna.
T.P : 021 7904468
MO : 077 7444225



**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



**BABU TILES WORKS**
**மாபிள் பதித்தல்**

அதிக காலம் மத்திய கிழக்கு நாட்டில் மாபிள் வேலை செய்தவரால் குறுகிய காலத்தில் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் மாபிள் பதித்துத் தரப்படும். டோகா அரசாங்கத்தால் பாராட்டுப்பெற்றவர்

T.P : 077 3824871



**கனடா தேசம் பறக்க**
**அதிரடியான - காத்திரமான - பொன்னான- எங்கும் கிடைக்காத அபூர்வ வரவுகள்**

கனடாவில் பயிற்சி நெறிக்காக
பின்வரும் துறைசார்ந்தோர் பறக்கலாம்
IELTS தூதரக நேர்முகத்தேர்வு இல்லை 2 வருட அனுபவம்

* வைத்திய உத்தியோகத்தர், தாதிகள், குடும்ப நல மாதுக்கள், சிறுவர் நலம் பேணுவோர், இயன்மருத்துவர், X.கதிர்இயக்குபவர், ஆய்வு கூட பரிசோதகர், மருந்தாளர்
* Hotel துறையினர் சமையலாளர்
* மின்னிணைப்பாளர், வெல்டிங், குழாய் பொருத்துநர், தச்சுத்தொழிலாளர்

2 வருடமுடிவில் PR பெற தகுதி
(யாவும் நிபந்தனைகளுடன்)
திசைகாட்டி பிறைவேற் லிமிற்
175 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
021 2219016, 021 4993502



**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

அரச தனியார் ஊழியர்கள், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள்,வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

"ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட இப்பயிற்சியில் இணைந்து மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 05.04.2014 சனிக்கிழமை

1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. காலை 11.30-01.00 (இடமில்லை)
4. மாலை 03.00-05.00

எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.

குறிப்பு - முன்பதிவின் அடிப்படையில் எந்நேரமும் அனுமதிகள் திருத்தப்படும். ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்.

SAAMSON LANGUAGE SCHOOL
173, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.